முல்லைநில மக்கள் குகைகளையோ மரங்களையோ குடில்களையோ உறைவிடமாகக் கொண்டிருந்தார்களானாலும், அவற்றில் நிலையாக வாழ்ந்திருக்க முடியவில்லை. விதையாமல் அறுத்து உண்பதும், வேட்டையாடி உண்பதும் ஒரிடத்தில் நெடுநாள் நிலவமுடியா. காய் கனிகள் அருகிப் போனாலும், வேட்டை விலங்குகள் அருகி விட்டாலும், ஆடுமாடுகளுக்குப் புல் குறைந்தாலும், அவர்கள் குடி கிளம்ப வேண்டியது தான். இக்காலத்தில் பல திறப்பட்ட மக்கள் இங்ஙனம் இடம் விட்டு இடம் பெயர்ந்து திரிந்து நாடோடிகளேயாவர்.

உலகப் படத்தை எடுத்துப் பார்த்தால், இமயமலைக்கு நேராகக் கிழக்கே அட்லாண்டிக் பெருங்கடலிலிருந்து மேற்கே பசிபிக் பெருங்கடல்வரை, ஒரு பெருமலைத் தொடர் சங்கிலிபோல் செல்வதைக் காணலாம். உலக வரலாற்றில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் இம்மலைத் தொடர் இருந்த இடத்தில், ஒரு பெருமாகடல் இருந்து உலகின் வட பகுதியையும் தென்பகுதியையும் இருவேறு மாபெருங் கண்டமாகப் பிரித்தது எனப் பழைய நில வரலாற்றாசிரியர் கூறுகின்றனர்.

இவ்விரு பெருங் கண்டங்களும் நெருங்கிக் கடல் தூர்ந்தபின், அவற்றன் நெருக்குதலால் ஏற்பட்ட நிலமடிப்புகள் இப்பெரு மலைத் தொடர்கள் என்பர். இம்மலைத் தொடர்களின் தெற்கில் பல நாட்டு மக்கள் முல்லை நில நாகரிகத்தை ஒழித்து, நாடு நகரம் பட்டினம் ஊர் ஆகியவற்றை அமைத்து உழவு, வாணிகம், நிலச் செலவு, கடற் செலவு ஆகியவற்றில் மேம்பட்டு, ஆயிரக் கணக்கான ஆண்டுகள் வாழ்ந்த பின்னும், அம்மலைத் தொடருக்கு வடகிழக்கிலுள்ள மக்கள் முல்லை நில நாகரிகத்திலேயே நின்று, நாடோடி வாழ்வே வாழ்ந்து வந்தனர் என்று அறிகிறோம்.

## ஆரியர்கள் நிலை:

இத்தகைய நாடோடி மக்களுள் ஒரு சாராரே ஆரியர் என்பவர்கள். இவர்கள் தொடக்கத்தில் எங்கிருந்து வந்தார்கள் என்று வரையறுத்துக் கூற முடியவில்லை. நடு ஆசியாவிலிருந்தனர் என்று

சிலரும், தென் உருசிய நாட்டிலிருந்தனர் என்று சிலரும், பால்டிக் பகுதியிலிருந்தனர் என்று சிலரும், வடமாகடற் பகுதியிலிருந்தனர் என்று சிலரும் கூறுகின்றனர்.

ஆயினும் இன்றைக்கு 6000 ஆண்டுகட்கு முன்னிருந்தே இவர்கள் தம் தாயகத்திலிருந்து கூறு கூறாகப் பிரிந்து, பச்சை கண்ட இடமெல்லாம் பரந்து சென்றனர் என்றும், இன்றைக்கு 4000 ஆண்டுகட்கு முன் தெற்கு நோக்கி மேலை ஆசியாவிலும் தென் ஐரோப்பாவிலும் உள்ள அன்றைய நாகரிக உலகத்தின் மீது ஈசல்கள் போல் சென்று மொய்த்தனர் என்றும், இன்றைக்கு 3500 ஆண்டுகளின் முன் இந்துக்கோசு மலை தாண்டிப் பாரசீகத்திலும், அதன் பின் சுலைமான் மலை தாண்டி வடமேற்கு இந்தியாவிலுள்ள நாடுகளிலும், கிட்டத்தட்ட அதே காலத்தில் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் புகுந்தார்கள் என்றும் அறிகிறோம்.

நாகரிக உலகில் இவ்வாரியர் வரவாலும், அவர்கள் வந்து அந்நாகரிக உலகுடன் உறவு கொண்ட பின் ஏற்பட்ட அவர்கள் நூல்களாலும், மொழிவளர்ச்சியாலும், முல்லைநிலக் காலத்து மனிதன் நாகரிகப் பண்பு பற்றி நாம் பல செய்திகளை அறிகிறோம்.

உலகின் நடுவிடத்துள்ள மேற்சொன்ன மலைத் தொடர்களுக்குத் தெற்கிலுள்ள விலங்குகளாகிய யானை, சிங்கம், புலி முதலியவையும், அவ்விடத்து வழங்கிய நாகரிகக் குறியீடுகளும் அவர்கள் அவ்விடத்துக்கு வரு முன் பேசிய அவர்கள் மொழியில் இடம் பெறவில்லை. ஆடு மாடுகள் நீங்கலாக அவர்கள் அறிந்த உயிர்கள் ஓநாய், முயல், குதிரை முதலியவையே ஆகும்.

நாடு, நகரம், ஊர், நாட்டுமக்கள் ஆகியவர்களைக் குறிக்கும் சொற்களும் அம்மொழியில் இல்லை. இந்தியாவில் அம் மக்கள் நுழைந்து நாடு நகரமமைத்த பின் கூட அவற்றைக் குறிக்க 'நாடு' என்ற அஃறிணை ஒருமைச் சொல்லை அவர்கள் வழங்காது, தம் முன்னைய நாடோடி வாழ்வைக் குறிக்கும் பலர்பால் சொல்லாகிய 'நாட்டினர்' என்ற சொல்லையே வழங்கினர். எனவே தான் பிற்கால வடமொழியிலும் 'நான் பாஞ்சால நாடு சென்றேன்' என்ற வாசகம் 'நான் பாஞ்சாலரை அடைந்தேன்' (அஹம் பாஞ்சாலாம் அகச்சம்) என வழங்கலாயிற்று,

செவ்வாய்க் கண்டம் எனத் தமிழர் அழைத்த இவ்விந்தியப் பெருநிலப்பரப்பில், முதலில் பழங்குடிகள் நாகரிக உச்சம் தொட்ட சிந்து ஆற்றின் கரையோரமாகவே தங்கி வாழ்ந்த இவ்வாரியர், படிப்படியாகக் கிழக்கு நோக்கிப் பரந்து, கங்கையின் கரையோரங்களில் குடியேற்றங்கள் ஏற்படுத்திய பின்னும், இந்நிலை நீடித்திருந்ததென்று வரலாற்றாசிரியராகிய கே. வி. இரங்கசாமி ஐயங்கார் அவர்கள் கூறுகிறார்கள். [1] இந்நிலைமாறி அவர்கள் நாடு நகரம் அமைத்த காலம் கி. மு. 7-ம் நூற்றாண்டு (இன்றைக்கு 2600 ஆண்டுகளுக்கு முந்திய காலம்) ஆகும்.

இங்ஙனம் நாடோடிகளாக வாழ்ந்த காலத்தில் ஆரியரிடையே ஊர், நகரம், நாடு ஆகிய பாகுபாடுகள் இல்லை. அவர்கள் கூடிவாழும் வாழ்க்கையில் தொடக்கத்தில் ஏற்பட்ட பாகுபாடு குடும்பமேயாகும். சிறுகுடும்பங்களில் தந்தையும், சற்றுவிரிவுபெற்ற குடும்பங்களில் மூத்த ஆடவரும், தலைமை நிலை உடையவராய், குடும்ப உறுப்பினரிடையே ஒழுங்கை நிலைநிறுத்தி அதனை மீறியவரை ஒறுத்து வந்தனர். சமய வழிபாடுகளிலும் இறந்தவர்கட்குச் செய்யும் இறுதி வினைகளிலும் அவரே சமயத் தலைவராகவும் இருந்து வந்தார். பெருங்குடும்பங்கள் 'கோத்திரங்கள்' என்று வழங்கப்பட்டன.

பல பெருங்குடும்பங்கள் இணைந்து ஒரே தலைவன் கீழ் அடங்கியபோது அக்குழு ஒரு 'குலம்' எனப்பட்டது. குலத்தின் தலைவன் 'குலபதி'யானான். இவன் தலைமைநிலையும் உரிமைகளும், குடும்பத்தலைவன் நிலையும் உரிமையும் போன்றவையே. ஆயினும், அவன் கீழடங்கிய மக்கள்தொகை விரிவடைந்ததனால், அவன் நிலை கிட்டத்தட்ட ஓர் அரசன் நிலையாயிற்று. நாடோடி வாழ்வு நீத்து, ஆரியர் கங்கைக் கரைகளில் நிலைபெற்ற குடியினரான போது, இக்குலத்தவர் தங்கிய இடங்களே சிறு நாடுகளாயின. குலபதிகளே அரசராக மாறுதலடைந்தனர்.

இந்தியப் பண்டைய ஆரிய மொழியாகிய வேதமொழி இக்குடியேற்ற நாட்களிலேயே ஓரளவு இலக்கிய இலக்கண அமைதி பெற்றது. எனவே அம்மொழியில் அரசனைக் குறிக்கும் சொற்கள் இந்நிலையை நன்கு உணர்த்துகின்றன.

நாடோடி வாழ்க்கைக் காலத்தில், மக்கள் முல்லை நில மக்களாகவே இருந்தனராதலால், அவர்கள் செல்வம் பெரும்பாலும் ஆடுமாடுகளாகவே இருந்தன. எனவே, அவற்றிற்குரிய தலைவனான அரசன் பெயர்களுள் ஒன்று இடையர் என்று பொருள் கொள்ளும் 'கோபன்' என்ற சொல்லாகவே அமைந்தது.

குலம், 'ராஜ்' என்றும் 'ராஷ்ட்ரம்' என்றும் அழைக்கப் பட்டதற்கிணங்க, அரசனும் 'ராஜன்' என்றும் 'ராஷ்ட்ரபதி' அல்லது 'குலபதி'யாயினன். இவற்றுள், முதல் சொல் நாளடைவில் பழம்பொருளிழந்து அரசு நிலையைக் குறிப்பினும், பின்னிரண்டு சொற்களும் முன்னைய நிலையை நினைவூட்டுபவையாகவே அமைந்துள்ளன. மேனாடு சென்ற ஆரியரிடையேயும் கிட்டத்தட்ட இதே நிலைமையை ஒட்டி இதே சொற்கள் நிலவின. குடும்பம் பாமிலியாஸ் (families) என்றும், குடும்பத் தலைவரான தந்தை பத்ரியாஸ் (patrias) என்றும், கோத்திரம் கேன்ஸ் (gens) என்றும், குலம் ட்ரிபாஸ் (tribos) என்றும் வழங்கப்பட்டன. பணத்தைக் குறிக்கும் சொல், இலத்தீன் மொழியில் பசு என்ற பொருளுடைய பெகு (Pecu) என்பதேயாகும். இதுவே fehu, feoh என்றாகி, இன்றும் ஆங்கிலத்தில் பணம்/கட்டணம் என்பதற்கான ஃபீ (fee) என்ற சொல்லின் மூலமாகும்.

## ஆரியர்களின் துவக்கநிலை அரசாட்சி:

குடியமைதி பெற்ற குலங்கள் முதலில் சிறுகுடியேற்றங்கள் அல்லது நாடுகளாகவேயமைந்தன. சிந்து ஆறு கடந்து, ஆரியர் கங்கையாற்றுப் பக்கம் குடியேறத் தொடங்கிய காலத்திலேயே முதற் குடியிருப்பும் ஏற்பட்டது. இதனால், நமக்குத் தெரியவரும் முதல் நாட்டு மக்களும் குலத்தினரும், சட்லஜ் ஆற்றுக்கும் யமுனை ஆற்றுக்கும் இடையில் குடியேறிய குருக்களும் பாஞ்சாலருமே ஆவர். அதன்பின், கங்கைக்கரையில் ஏற்பட்ட குடியேற்றத்தார்களுள் முந்தியவர்கள் சரயு ஆற்றுக் கரையிலுள்ள கோசலரும் அதற்குக் கிழக்கிலும் தெற்கிலும் பரந்த விதேகரும் ஆவர்.

கி.மு.ஆறாம் நூற்றாண்டில் குப்தர் தோன்றினர். இவர்களுள் யமுனைக் கரையில் உள்ள பாஞ்சாலரும் கீழ்க்கோடியிலுள்ள கோசலரும் விதேகரும் பின்னாளைய குப்தரும் தனி ஆரியராய் இராமல் முன்னைய குடிகளுடன் கலப்புற்ற இனத்தவர் என்று எண்ண இடமுண்டு. யமுனைக் கரையில் தெற்கிலமைந்த விருஷ்ணிகள் இன்னும் பெரும்பான்மையாகப் பழங்குடித் தொடர்புள்ளவராய் இருந்திருக்கக் கூடும். விருஷ்ணிகளில் சிறந்த அரசனாயிருந்த கண்ணன் கருநிறமுடையவன் என்றும் ஆயர்குலத்தில் வளர்ந்தவன் என்றும் குறிக்கப்படுவதும், வேதங்களுக்கும் புறம்பாக வேதங்களுடன் ஒட்டிவளர்ச்சியுற்ற பிற்கால ஆன்மீகக் கோட்பாடுகளை வகுத்தவன் என்றும் குறிப்பிடப்படுதல் இதற்கு ஆதரவு தருவதாகும். பாஞ்சாலரிடையே பிறந்த துரோபதையும், கோசலரிடையே பிறந்த இராமனும் இஃதே போல் கருநிறமுடையவராகக் குறிக்கப்பட்டிருக்கின்றனர். விதேகரிடையேயும் சனகர் ஆன்மிக நெறியருளிய தலைவராவார்.

மேற்கூறியவற்றால் ஆரியரிடை முதன்முதல் ஏற்பட்ட அரசர்கள் பழைய குலபதிகளே என்று கண்டோம். அவர்கள் போரில் தம் குலத்தவர் அல்லது நாட்டினரின் படைத் தலைவராகவும், வழக்குகளில் வழக்குத் தலைவராகவும், குலவழக்கங்களாகிய எழுதாச் சட்டங்களைக் கையாண்டு தீர்ப்பு உரைப்பவராகவும், சமயவினைகளில் சமயத் தலைவராகவும் இருந்தனர்.

இந்தியாவிற்கு வந்த ஆரியரைப் போலவே, மேற்கு நாடுகளில் சென்ற ஆரியரும் பலபல சிறுநாடுகளை அமைத்தனர். அவை தமக்குள்ளும் முற்குடிகளுடனும் போரிட்ட காலத்தில், ஒன்றை ஒன்று வென்று விழுங்கிப் படிப்படியாக விரிவுற்றுப் பெருநாடுகளாயின. கிரேக்கத்தில் இவை பல ஊர்கள் சூழ்ந்த சிறு நகரங்களாக அமைந்து அலக்சாண்டர் காலம் (கி.மு.327) வரை அதே நிலைமையில் இருந்தன.

இத்தாலியில் பல சிறு நாடுகளிடையேயும் வலிமை மிக்கதான ரோம் என்ற ஆரிய நகரத்தினர், தம்மைச் சூழ்ந்த ஆரியக் கலப்பினத்தவரான லாட்டியரை வென்று, பின் பெரும்பான்மை ஆரியரல்லாதாரான இத்தாலியரையும் அடக்கி ஆண்டனர். கி.மு. முதல் நூற்றூண்டு முதல் கி.பி. நாலாம் நூற்றாண்டு வரை இவ்வரசு, பிறநாடுகளையும் அடக்கிப் பிரிட்டன் முதல் மேலை ஆசியா வரை, செர்மனி முதல் வட ஆப்பிரிக்கா வரைப் பரந்த ஒரு பேரரசை நிறுவிற்று.

செர்மனியில் இச்சிறுநாடுகள் கிட்டத்தட்டக் குல நிலையிலேயே 19-ம் நூற்றாண்டளவும் தொடர்ந்து நிலவின. பிரான்சிலும்,, ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் அரசர் ஆட்சிக்கு இச்சிறுநாடுகள் உட்படினும் தம் உரிமை முற்றும் கைவிடாமல் 18-ம் நூற்றாண்டளவும் தொடர்ந்திருந்தன. பிரிட்டனில் தென்பகுதியில் குடியேறிய இவ் ஆரிய இனத்தார் பல சிறு நாடுகளை அமைத்தனர். அவை படிப்படியாக ஏழாகி மூன்றாகி அவ்வப்போது ஒவ்வொன்று முதன்மையுற்று நிலையடைந்தன. 8-ம் நூற்றாண்டில் இங்கிலாந்து ஒரே நாடாயிற்று.

## ஆரியர்களின் நாகரிகம் தொன்மையானதா?

ஆரியருடைய நாகரிகம், அவர்கள் அரசியல் தோற்றம் ஆகியவற்றை இங்ஙனம் முதன் முதலாக எடுத்துக் கொண்டதன் காரணம், அவை காலத்தால் முந்தியவை என்பதன்று. உண்மையில் மனித நாகரிகத்தின் வரலாற்றில் ஆரியர் வரவு மிகவும் பிற்பட்டதுதான்.

ஆனால், அவர்கள் அரசியலிலும் நாகரிகத்திலும் மூன்று சிறப்புக்கள் காணலாம். 1. பிற்கால அரசியல் வளர்ச்சிகள் யாவும் ஆரியர் வாழ்க்கை நிலையினின்றே தோன்றியவை. 2. ஆரியரைப் பற்றிய செய்திகள் பிற்பட்டன ஆதலால் வரலாற்றுக்கு எட்டிய செய்திகளாயிருக்கின்றன; அவர்கள் வரவு வரலாற்றுக் காலத்துக்கு அண்மையிலுள்ளது. 3. காலத்தால் அவர்கள் நாகரிகம் பிற்பட்டதாயினும், வரலாற்றுக் காலத் தொடக்கத்தில் அவர்கள் இருந்த நிலைமை, அவர்கட்கு முன்னைய நாகரிகங்கள் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்னமே கடந்துவிட்ட முல்லைநில நாகரிகப் படியாகும்.

எனவே பதினாயிரக் கணக்கான ஆண்டுகட்கு முன்பே ஆரியரல்லாதார் அடைந்துவிட்ட முல்லைநில நாகரிகப் படிகளைப் பற்றி மிகவும் அறியக் கூட இயலாத நிலையில் இருக்கிறோம். ஆரியர் நாலாயிரம், மூவாயிரம் ஆண்டுகட்கு முன் இருந்த நிலை, அப் பிறமக்கள் பதினாயிரக் கணக்கான ஆண்டுகட்கு முன் இருந்த நிலைமையை உய்த்துணர வழி செய்யும்.

ஆரிய வரலாற்றாசிரியர், தொடக்கத்தில் தங்கள் நாகரிகமே நாகரிகமெனக் கொண்டு, அது தோன்றிய காலமே உலக நாகரிகம் தோன்றிய காலம் என எண்ணினர். 4000 ஆண்டுகட்கு முன், அஃதாவது கி. மு. 2000-ல் ஆரியர் முல்லை நிலநாகரிக நிலையில் இருந்ததால், உலகமே முல்லைநில நாகரிகத்தில் தான் இருந்திருக்க வேண்டும் என்று மனக்கோட்டை கட்டியிருந்தனர். இத்தகைய ஆசிரியர்கள், கிரேக்க முதல் இலக்கிய நூல்களாகிய இலியத் ஒடிஸ்ஸி என்பவற்றின் காலமாகிய கி. மு. 1000 அல்லது கி. மு. 800 தான் மிகப் பழைய காலமென்றோ, அல்லது இந்திய ஆரியரது இருக்கு வேத காலமாகிய கி. மு. 1500-1200 தான் மிகப்பழைய காலமேன்றோ கொண்டதுடன், அதற்கு முன்னைய காலம் அதனினும் நாகரிகக் குறைவான காலமென்று கருதினர்.

ஆனால் கிரேக்க நாட்டில் கண்டெடுக்கப்பட்ட மெசீனிய நாகரிகங்கள் ஆரியர் வரவுக்கு முற்பட்டன என்பதும், அவை ஆரியர் வரவுக்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்னரே அவர்களை விடப் பன்மடங்கு உயரிய நாகரிகநிலை எய்தியிருந்தன என்பதும் புதை பொருளாராய்ச்சியரால் விளங்கின.

மெசீனியர் நாகரிகம் கி.மு.2000 முதல் 1000 வரை நிலவியது என்று கருதப்படுகிறது. இவற்றுடன் உறவுடைய எகிப்திய நாகரிகம் கி.மு.3000 முதற்கொண்டு தொடர்ந்த வளர்ச்சியுடையதாய் இருந்தது. பாபிலோனியரும் மேலை ஆசியரும் கி.மு.2000 முதல் கி.மு.800 வரைப் பேரரசு நிலை

எய்தியிருந்தனர். அசீரியர் கி. மு. 4000 முதற்கொண்டே மிக உயரிய நிலையிலிருந்தனர்.

எல்லாவற்றிற்கும் மேலாக இந்தியாவில் சிந்து ஆற்றின் தென்பகுதியில் மொகெஞ்சதரோ, அரப்பா ஆகிய இடங்களில் செய்யப்பட்ட நில அகழ்வாராய்ச்சியால் கி. மு. 5000 வரை எட்டக் கூடியதும் இவற்றுடனொத்த, ஆனால் இவற்றிலும் பழமையும் உயர்வும் மிக்க, ஒரு நாகரிக வாழ்வு அவ்விடங்களில் இருந்ததென்று தெரியவருகிறது.

இத்தாலியர் ரோமர் வரலாறு தொடங்கு முன்பாகவே டஸ்கனி என்ற இடத்திலுள்ள எட்ரஸ்கானியர் என்ற மக்கள், மாடமாளிகைகள் கூடகோபுரங்கள் கட்டியிருந்தனர். இன்னும் ஆரியரல்லாதாருள் ஒரு பிரிவினரான பினிசியரும் கார்த்தகினியரும், நாவாய்களில் கடல்கள் கடந்து உலகெங்கும் கி.மு.1000த்திலேயே வணிகம் நடாத்தினர். மேலை ஆசியாவிலும் எகிப்திலும் கிட்டும் சான்றுகளால் கி.மு. 1000க்கு முற்பட்டே தமிழ்நாட்டு வணிகர் கடல்கடந்து அந்நாடுகளில் தேக்கு, சந்தனம், பருத்தியாடை, மயிலிறகு, மிளகு முதலியவைகளைக் கொண்டுபோய் விற்றனர் என்று தெரியவருகிறது.

இவ்வாணிபத்தின் அறிகுறியாகத் தோகை (மயில்), அகில், தேக்கு, அரிசி முதலிய தமிழ்ச்சொற்கள் பண்டைய எபிரேய கிரேக்க மொழிகளில் சென்று இடம் பெற்றன. இங்ஙனம் அம் மொழியில் இடம்பெற்ற அரிசி (ஒரைஸா) என்ற சொல்லே பலமொழி வாயிலாகவும் திரிபுற்று ஆங்கில மொழியில் ‘ரைஸ்’ என்ற உருவுடன் இன்று வழங்குகிறது.

பழைய உலகு என்று கூறப்படும் ஆசியா ஐரோப்பா ஆப்பிரிக்கா என்பவற்றின் எல்லைகடந்து சென்றாலும், பல பழைய நாகரிகங்கள் காணப்படுகின்றன. ஆப்பிரிக்காவிலுள்ள அபிசீனிய நாகரிகம் கிரேக்கர் காலத்திலேயே மிகப் பழமையுடையதென்று கருதப்பட்டது. அமெரிக்காவில் ஐரோப்பியர் குடியேறியபோது, பெருவிய நாகரிகமும் மயநாகரிகமும் மிக உயர்நிலையில் இருந்தனவாம். இவையிரண்டும் இந்திய நாகரிகக் கூறுகளுடன் சிறப்பாகத் தென்னிந்திய நாகரிகக் கூறுகளுடன் மிகமிகப் பொருத்தமுடையவை என்று கூறப்படுகிறது.

இவ் ஆரியரல்லா நாகரிகவகைகள் எல்லாமே ஆரிய நாகரிகத்தை விட மிகவும் மேம்பட்டவையாய் இருந்தும், எக் காரணங்களாலோ ஆரியர் தாக்கத்தினால் பலவகையிலும் சிதைத்து போயின. அவற்றுள் அழியாமல் மீந்து நின்று நிலவும் ஆரியமல்லாத நாகரிகம், தென் இந்தியாவில், சிறப்பாகத் தமிழ்நாட்டில் நிலைபெற்று விளங்கும் திராவிட நாகரிகம் மட்டும் தான்.

## திராவிட நாகரிகத்தின் நிலை:

திராவிடரின் பழைய தாய்மொழியின் காலவழியில் வந்த மிகப் பழமைவாய்ந்த மொழியாகிய தமிழும் திராவிட நாகரிகமும் உலகில் பல பகுதிகளிலுள்ள மொழிகளுடனும் நாகரிகங்களுடனும் பல்வேறு வகையில் தொடர்பு உடையவையென்று காணப்படுகிறது.

ஆயினும், திராவிட இனம் எவ்வினத்துடன் நேரடியான தொடர்புடையது என்று இன்னும் வரையறுத்துக் கூற முடியவில்லை. மொகெஞ்சதரோவில் கண்ட பழைய சிந்து நாகரிகம் மட்டுமே தெள்ளத்தெளியத் திராவிட நாகரிகம் என்று தெரியவருகிறது.

ஆரிய மயமல்லாத நாகரிகங்களுள், திராவிட இன நீங்கலாக மற்றவற்றை ஒன்றிரண்டு இனங்களாகப் பிரிக்கலாம். அராபியர், எகிப்தியர், மேலை ஆசிய மக்கள், ஆப்பிரிக்காவின் பழைய அராபிக் குடிகள் ஆகியவர்களும், எபிரேயர் (யூதர்கள்), பினீசியர், கார்த்தகினியர் ஆகியவர்களும், செமித்தியர் அல்லது நடு உலகமக்கள் என்ற பெரும் பிரிவிற்படுவர்.

ஐரோப்பாவிலுள்ள ஸலாவியர், ஹங்கேரியர், பின்லாந்தியர் முதலியவர்கள் ஒருபுறமும், ஆசியாவில் துருக்கியர், துருக்கித்தானர், சீனர், திபேத்தியர், சப்பானியர், கொரியர், பர்மியர் ஆகியவர்களும் மங்கோலிய இனம் என வகுத்துரைக்கப்படுகின்றனர்.

இந்தியாவில் திராவிடர் தனித்து நிற்பது போல், இத்தாலியில் பழைய எட்ரஸ்கானரும், அமெரிக்காவில்

பெருவியரும் மயரும் தனிப்பட்ட குழுவினராகக் காணப்படுகின்றனர்.

இவர்களனைவரும் ஒவ்வொருவகையில் திராவிட இனத்துடன் உறவுடையவராயிருப்பது நோக்க, இவ்வனைவருமே ஒரு பேரினத்தவர் தாமோ என்று ஐயுற இடமுண்டு. ஆயினும் இது முடிவாகக் கூறமுடியாத செய்தியாதலானும், கால்டுவெல் போன்ற அறிஞர், ஆரிய இனம் கூட இப் பெரும்பேரினம் நாகரிக வளர்ச்சி பெறாத காலத்தில் இதினின்றும் பிரிந்துபோன கிளையினம் என்று கருதுவதாலும், இங்கே இவர்களனைவரையும் ஆரியர் என்றும் ஆரியரல்லாதார் என்றும் பொதுப்படக் குறிப்போம்.

## திராவிட - ஆரிய நாகரிக வேறுபாடு:

ஆரியர் வரவுக்காலத்தில், ஆரியருக்கும் ஆரியரல்லாதாருக்கும் நாகரிக முறையிலும் வாழ்வியல் அரசியல் நிலைமைகளிலும், மலைக்கும் மடுவுக்கும் உள்ள அளவு வேற்றுமைகள் இருந்தன. ஆரியர் முல்லைநில வாழ்க்கை நிலையில், நாடோடிகளாய் நாடுநகரம் ஊர் இன்றிக் குடியும் குலமும் குலத்தலைவரும் உடையவராய், உழவு, வாணிகம் முதலிய தொழிலின்றி, ஆடு மாடு மேய்த்தலும் வேட்டையாடலும் தொழிலாகக் கொண்டவராய்க் குடி குலம் தவிர வாழ்வியல் பாகுபாடு தொழில் பாகுபாடு அற்றவராய், இயற்கைத் தோற்றங்களில் ஈடுபட்டுப் பலதெய்வங்களை வழிபடுபவராய் இருந்தனர்.

ஆனால், ஆரியரல்லாத மக்களோ குறிஞ்சி நிலவாழ்வும் முல்லைநில வாழ்வும் கடந்து, மருதநில வாழ்க்கையும் நெய்தல்நில வாழ்க்கையும் உடையவராயிருந்தனர். அவர்கள் நாடு நகரம் ஊர் கோட்டை முதலியவைகளுடன், பச்சைச் செங்கலாலும் சுட்ட செங்கலாலும் கட்டிய வீடுகளும், செங்கல்பாவிய தெருவீதிகளும் உடையவராயிருந்தனர். உழவும் வாணிகமும் அவர்களிடையே செழித்திருந்தன.

ஆரியரைப் போல் அவர்கள் தழையாடையும் மரவுரியாடையும் அணியாது பருத்தி நூலாடையணிந்து அதற்கான நெசவு முதலிய தொழில் பேணியிருந்தனர். அவர்கள் முதலில் எலும்புகளாலும், பிற் காலங்களில் வெள்ளியாலும் பொன்னாலும் பூண்கள் செய்தணிந்தனர். செம்பு, வெண்கலம் ஆகியவற்றால் கருவிகள் செய்தனர். ஆரியர் வருங்காலத்துக்குள் இரும்பும் வழங்கலாயிற்று.

திராவிடர்கள் ஒழுங்கான நாடு நகர அரசியலையுடையவராய் அரசனுக்கடங்கிய ஆட்சியுடையவராயிருந்தனர். ஆனால் ஆரியர் போல ஆட்சிமுறை முற்றிலும் அரசன் அல்லது குலத்தலைவனிடம் சென்று அமைவதாயில்லை, அவ்வந்நகரங்களிலும் ஊர்களிலும் நகரவைகளும் ஊரவைகளும் இருந்து மேற்போக்காக அரசனாணையில் நின்று தன்னாட்சி நடத்தின.

சமய வாழ்வில் அவர்களும் இயற்கைத் தெய்வங்களாகிய திணைநிலத் தெய்வங்களை உடையவராயிருப்பினும், நாளடைவில் வீரர் வழிபாடும் பிதிரர் வழிபாடும் உடையவராய் இறுதியில் ஏதாமொரு தெய்வத்தைக் குலதெய்வமாகவும் ஊர்த்தெய்வமாகவும் கொண்டனர். ஆரியர் வரவுக்கு நெடுநாள் முன்னரே அவர்கள் அன்னை வடிவையோ, எருதும் முக்கோலும் தாங்கிய உருவையோ தலைமையான தெய்வமாகக் கொண்டு அவர்கட்குக் கோயிலும் வழிபாடும் அமைத்தனர். ஆரியரல்லாதார் தாம் பலதொழில் பாகுபாடுகளை முதலில் கொண்டிருந்தனர். குருமாரும் அறிவியல் ஆராய்ச்சியில் முனைந்த அறிஞரும் அவர்களிடையே தான் முதன் முதலில் ஏற்பட்டனர்.

ஆரியர்கள், இந்தியாவில் திராவிட அரசரிடமிருந்தும் கிரீசில் எகிப்திய குருமாரிடமிருந்துமே தம் முதல் கலையறிவு பெற்றனர் என்று வரலாறு காட்டுகிறது. கனகர், கண்ணன் முதலியவர்கள் ஆரியருக்கு ஆன்ம அறிவு கற்பித்த திராவிட அரசரேயாவர்.

ஆரியரல்லாதார் தாக்கு தான் ஆரியரை நாகரிகப் படுத்திற்று என்பதை, அவர்கள் பல நாடுகளில் அடைந்த முன்னேற்றத்தை ஒப்பிட்டு நோக்கினால் காணலாம். தெற்கு நோக்கிவந்த ஆரியர், நாகரிகப்படியில் மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரே நாகரிகம் அடைந்தும், வடக்கே சென்ற ஆரியர் அந்நிலையை முந்நூறு ஆண்டுகள்

வரை அடையாமலிருந்தனர். தெற்கு நோக்கி வந்தவருள்ளும், இத்தாலியில் வந்த ஆரியர் நடுஉலகத் தொடர்புடைய கிரேக்க ஆரியரிடமிருந்தும், அவர்களும் பாரசிகம், இந்தியா ஆகிய இடங்களில் குடியேறிய ஆரியரிடமிருந்தும் நாகரிகப் பண்புகளை வரவேற்றனர் என்று காணலாம். நேர்மாறாக ஆரியரல்லாதார் ஆரியத் தாக்கம் இல்லாமலேயே, தென்கோடி ஆப்பிரிக்காவில் அபிசீனியாவிலும், கீழ்க்கோடி ஆசியாவில் சீனாவிலும், தென்கோடி இந்தியாவில் தமிழ்நாட்டிலும், அமெரிக்காவில் பெருவிலும் தனித்து உயர்நாகரிகம் அடைந்துள்ளனர் என்பதைக் காணலாம்.

## திராவிடச் சிதைவுக்குக் காரணம்:

திராவிடரும் பிற ஆரியரல்லாதாரும் பதினாயிரம் ஆண்டுகளாக இவ்வளவு உயர் நாகரிக நிலையை அடைந்திருந்தாராயினும், ஆரியர் வருமுன்னேயே அவர்கள் வளர்ச்சியற்று அழியும் நிலையை அடைந்துவிட்டனர் என்றும் காணலாம். நாகரிகம் இதற்குச் சான்று பகரும். இந்நிலைக்குக் காரணம் என்ன? நாகரிகம் அவர்களிடையே ஒரே நிலையில் சரிநிகராக வளர்ச்சியடையாததால், தொழில் பாகுபாட்டில் நாகரிகப்படியில் ஏற்றத்தாழ்வு உடைய பல வேறுவகுப்புகள் ஏற்பட்டு ஒற்றுமை குலைந்தது இதற்கான தலையான காரணம். இன்னொன்று, வாழ்க்கை முறையில் கோயிலும் கோயில் குருமாரும் அடைந்த தலைமை நிலையும், அறிவின் இயல் இவரை அண்டிய ஒரு சிறு அறிஞர் குழுவில் சென்றமைந்ததும் ஆகும்.

ஒவ்வொரு வகுப்பினரும் தத்தம் வகுப்பு நலம் பேணியதால் இனநலம், நாட்டுநலம் மறந்தனர். அறிஞர்குழுவோ தம்நலம் மட்டும் பேணிவந்த குழுவினருடன் கலந்து, தம் இனத்தைத் தாழ்த்தி உயர்வடையவும் பிற இனத்தவராகத் தம்மைக் கொள்ளவும் தலைப்பட்டது. திராவிடர் வாழ்க்கை முறையில் இதனை இன்றளவும் காணலாம்.

சீனரிடையேயும் உயர்குல மக்களாகிய மந்தாரின்களும் அவர்களைச் சார்ந்த பழைய மஞ்சு அரசர் குடியும், தமக்கெனச் சில மொழியுள் ஒரு தனி உள்மொழியும், தனிச் சமயவகையும் வகுத்துச் சீனருடன் உறவாடாது சீனாவைச் சுறண்டும் சப்பானியருடனும் வெள்ளையருடனும் உறவாடி வந்தது காணலாம்.

ஆரியரல்லாதாரிடம் தோன்றிய மனிதநாகரிகமும் வாழ்வியல் அரசியல் முறையும், நாகரிகத்தில் குறைந்தவரானாலும் வகுப்பு வேற்றுமையும் குருமார் வகுப்பும் அறிஞர் குழுவும் இல்லாது ஒற்றுமை உடையராயிருந்த ஆரியர் கைப்பட்டு, உரமும் வலுவும் அடைந்து புத்துருப்பெற்று உலகில் மீண்டுமொரு புதுவாழ்வும் புதுவளர்ச்சியும் தந்து, புது ஊழியைத் தொடங்கி வைத்தது. இதனை ஆரிய ஊழி என்னலாம்.

ஆரியர் வருவதற்கு முன்னரே, திராவிடர் நாகரிகத்திலும் அரசியல் முறையிலும் அவர்களை விட நெடுந் தொலைவு முன்னேறியிருந்தனர். ஆரியர் ஆடுமாடுகளை மேய்த்துத் திரிந்து முல்லை நிலவாழ்வு வாழ்ந்த காலத்திலேயே, தமிழ் மக்களிடையே குறிஞ்சி அல்லது மலை நாட்டு நாகரிகம், முல்லை அல்லது காடுசார்ந்த இடைக்குல வாழ்வு ஆகியவற்றுடன், மருத நிலவாழ்வாகிய நாடுநகர வாழ்வும், நெய்தல் நிலவாழ்வாகிய உள்நாட்டு வெளிநாட்டு வாணிபம் நிறைந்த பட்டின வாழ்வும் மல்கி விளங்கின. உழவும் கைத்தொழில்களும் கலைகளும் அவர்களிடையே செழித்தோங்கின.

சிந்து ஆற்றங்கரையோரம் அகழ்ந்தெடுக்கப்பட்டு வரும் ஹரப்பா, மோகஞ்சதரோ நகரங்களிற் கண்டபடி, இவர் 5000 ஆண்டுகட்கு முன்னரே பிற ஆரியரல்லாத மக்களாகிய எகிப்தியர், சாலடியர், அசிரியர் முதலியவருக்கு ஒப்பாகவும் சில வகைகளில் அவரினும் மேம்பட்டும் விளங்கினர். நில அகழ்வாராய்ச்சி இன்னும் முனைந்து நடைபெறும்

தோறும் இவற்றைப்பற்றி இன்னும் விளக்கமாகவும் விரிவாகவும் பல உண்மைகளை நாம் அறிதல் கூடும். (1947இல் எழுதியது)

சங்கத் தமிழ் இலக்கியங்களில் ஆட்சிமுறை:

தமிழருக்கு இன்று கிடைத்துள்ள மிகப்பழைய நூல்கள் தொல்காப்பியமும் புறநானூற்றின் சில பகுதிகளும் அவற்றுக்கடுத்தபடி திருக்குறளுமே யாகும்.

தொல்காப்பியத்தின் பாயிரத்தில் தொல்காப்பியர் வடமொழி ஐந்திர இலக்கண நூல் பயின்றவராகச் சிறப்பிக்கப் படுகின்றார். தமிழில் தொல்காப்பியம் சிறப்புற்ற பின், மற்ற இலக்கண நூல்கள் புகழ்மங்கி ஒழிந்தன போல; ஐந்திரமும், பாணினீயம் சிறப்புற்ற பின் புகழ் மங்கியழிந்த ஒரு நூலாகும். ஆகவே தொல்காப்பியம் பாணினீயத்துக்கு முந்தியதென்று கொள்ளலாம்.

அஃதோடு கி.மு. முதலாவது இரண்டாவது நூற்றாண்டின் பின், வளர்ச்சி பெற்ற புதியசெறிவு மிக்கநடை வழக்கிற்கு வருமுன் நிலவிய நெகிழ்ச்சியும் இனிமையுமுடைய சூத்திர (நூற்பா) நடையே தொல்காப்பியத்தில் காணப்படுகிறது. இவற்றை நோக்கத் தொல்காப்பியர் காலம் கி. மு. 500 -க்குப் பிந்தியதாக இருக்க முடியாது. புறநானூற்றின் பல பாட்டுக்கள் இதனினும் முந்தியன என்பதில் அய்யமில்லை. திருக்குறளின் காலம் கி.பி. முதல் நூற்று ஆண்டெனக் கொள்ளப்படுகின்றது.

தொல்காப்பியர் கூறிய ஐந்திணை ஒழுக்கம் அவர் காலத்தாகவோ அல்லது அதனினும் முற்பட்டதாகவே இருந்திருக்கவேண்டும். அதன் கோட்பாடுகள் வரையறுக்கப்பட்டு விரிவடைந்திருப்பதை நோக்க, அது மிகவும் முற்பட்டதென்று கூறலே சால்பு உடையது. பிற்கால இலக்கண இலக்கிய நூல்களும் இதே ஒழுக்கத்தை மேற்கொண்டு புனைந்து கூறுகின்றனவாயினும் அவை அக்காலத்தில் காணப்பட்ட ஒழுக்கத்தைக் கூறுபவை அல்ல; மரபு பற்றி விரித்துரைக்கப் பட்டனவேயாகும் என்று கூறலாம். அவை வளர்ச்சி அற்றும் நாளடைவில் வழக்காறு அற்றும் போனதே இதனை நன்கு எடுத்துக்காட்டும்.

தொல்காப்பியர் காலத்திலும் புறநானூற்றுக் காலத்திலும் முடியுடை வேந்தர் மூவரும் ஆண்டதாகக் காணப்படினும், அவர் ஆண்ட இடம் கூடியும் குறைந்தும் சில காலம் ஒன்றில் ஒன்று முற்றினும் மறைந்தும் இருந்தன என்று தெரியவருகிறது. ஆயினும் இவ்வரசர் நேரிடையாகத் தம்நாடு முற்றும் தாமே ஆண்டனர் என்று தோற்றவில்லை. நாட்டின் ஆட்சி பெரும்பாலும் குறுநில மன்னர்தம் கையிலேயே இருந்தது.

முடியுடை வேந்தர் மூவரும், குறுநில மன்னர் தம் போர் வீரத்தின் பலனாய் அவ்வப்போது அவர்களை அடக்கித் தம் ஆற்றலை நிறுவி வணக்கமும் திறையும் கொண்டதுடன் நின்று விட்டனர். இத்திறை மன்னர் பின்னாட்களில் குடிகளிடமிருந்து நேராகவும் பணியாட்கள் வாயிலாகவும் ஒழுங்காகக் கொண்ட இறை அல்லது வரி. அன்றியும், பெருநில மன்னரின் தலைமையை மேற்கொண்ட குறுநில மன்னர் அவர்கள் பெயரைத் தம் பெயருடன் ஒருசேரச் சூட்டிக் கொண்டனர். அவர்கள் கொடி பூ முதலியவற்றையும் மேற்கொண்டு, அவர்கள் போர்க்கெழுந்தபோது தாமும் தம் வீரருடனும் படைக்கலங்களுடனும் சென்று போரிட்டனர். இக்குறுநில மன்னராட்சி கிரேக்க நகராட்சியுடனும் இங்கிலாந்து முதலிய மேலை நாடுகளில் கி.பி. 1000-த்தை ஒட்டி நிலவிய நிலஉடைமை ஆட்சியுடனும் (Feudalism) ஒரு சார் ஒப்புடையது.

தொல்காப்பியத்திலும் புறநானூற்றிலும் விதந்து கூறப்படும் புறத்திணை யொழுங்கு, பெரும்பாலும் இக்குறுநில மன்னர் ஒருவருடன் ஒருவர் மாறிட்டுப் போராடிய போராட்டங்கள் பற்றியவையே யாகும்.

வெற்றி நாடிய மன்னர் மாற்றரசர் நாட்டின் நிரை (பசுக்கூட்டத்தைக்) கவர்ந்தனர். தும்பை மலர் சூடிப் போர்க் கெழுந்தனர். மற்றரசர்கள் போர்களத்தில் எதிர்த்தும் புரிசைகள் (கோட்டைகள்) உள்ளிருந்தும் நொச்சிமலர் சூடிப் போரிட்டனர். வெற்றியடைந்த மன்னன் எதிரியின் நாட்டைச் சூறையாடியும் அவன் நிலத்தைக் கழுதை பூட்டிய ஏரால் உழுது பாழ்படுத்தியும், தோற்றவன் கொடி முதலிய குறிகளைப் பறித்தும் வாகைசூடி மீண்டனன். சிற்சில சமயம் வெற்றிகொண்ட மன்னர் பகைநாட்டில் தன் ஆட்களை மன்னராக்கியும் பகைவர் குடியில் வந்த ஓர் இளவரசனைத் தன் கீழாளும்படி முடிசூட்டியும் மீள்வதுண்டு.

## மூவேந்தர் & வேளிர் ஆட்சிமுறை:

கடைச்சங்க காலத்தில் (கி.பி. 1-முதல் 3-ம் நூற்றாண்டு வரை) பல குறுநில மன்னர் பெருநில மன்னரை ஒத்த செல்வமும் அவரை எதிர்க்கும் ஆற்றலும் கொண்டு விளங்கினர். இவர்களுள் பாரி, ஓரி, காரி, மலையன், அதியமான் முதலிய பலரின் சிறப்புக்கள் புறநானூற்றிலும் மற்ற சங்க நூற்களிலும் காணப்படுகின்றன.

பெருநில மன்னராகிய சேர சோழ பாண்டியர்கள் அவ்வப்போது அவர்களை அடக்கியாண்டதுடன், ஒரோ வழித் தம்முள் மற்ற இருவரையும் கூட ஒடுக்கித் தமிழ் நாட்டில் பேரரசராக விளங்கினர். அத்தகையோருள் முதற் கரிகால் சோழன், சேரன் நெடுஞ்சேரலாதன் முதலியோர் பழைமை மிக்கவர்கள்.

இவர்களைப் பின்பற்றி வந்தவர்களே வடிம்பலம்ப நின்ற பாண்டியன், இரண்டாம் கரிகாலன், சேரன் செங்குட்டுவன் முதலிய பெரும் பேரரசர்கள் ஆவர். இவர்களில் பலர் தமிழ்நாட்டுடன் அமையாது வடநாடு, சீயம், சாவகம் முதலிய தொலை நாடுகளிலும் தம் சீர்த்தியைப் பரப்பினர்.

இவர்களுள் வடிம்பலம்ப நின்ற பாண்டியன் கி.மு. 500-ல் சாவகத்தீவில் தன் ஆட்சியையே நிறுவித் தன் அடிகளை அந்நாட்டில் அலைதவழும் பாறை ஒன்றில் பதிப்பித்து அதற்குத் திருமுழுக்கு வழிபாடு செய்வித்தான். இதனைத் தமிழ் நூல்கள் கூறுவது மட்டுமன்றி, சாவக நாட்டுக் கல்வெட்டுகளும் இதற்குச் சான்று பகர்கின்றன. அந்நாட்டில் அவன் ஏற்படுத்திய வழக்கம் இன்றளவும் நிலைபெறுகின்றது.

அஃதோடு அந்நாட்டின் நகரங்களும் இன்றளவும் தமிழ்நாட்டு நகர்களாகிய மதுரை, கொற்கை ஆகிய பெயர்களையே கொண்டு திகழ்கின்றன. இவ்வரசனே யன்றிப் பின்னும் கரிகாலன் இமயத்தில் தன் புலிக்கொடி பொறிப்பித்ததும் சேரன் செங்குட்டுவன் வடவரசரை வென்று கண்ணகி உருவெடுப்பித்துக் கொணர்ந்ததும், ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் படையெடுத்துவந்த வடவர் படையை வென்றதும் தமிழ்நாட்டில் இப்பெருமன்னர் அடைந்த பேரரசின் பயனாக எழுந்த செயல்களேயாகும்.

ஆயினும் தமிழரசர் வெற்றிகளெல்லாம், தனி மனிதர் போர் வெற்றியின் பயனாக எழுந்தனவேயன்றி, நாடு பிடித்தாளும் அவாவினால் எழாமையினால் அவை நாட்டு வெற்றிகளாகவோ, நாட்டை விரிவுபடுத்தி ஒற்றுமைப்படுத்தும் நிலைபெற்ற வெற்றிகளாகவோ விளங்கவில்லை.

பிடித்த நாட்டைத் தம் கீழுள்ள வீரருக்கோ முன்னைய அரசருக்கோ மீட்டும் கொடுத்துவிட்டு அவர்கள் திரும்பினர். அவர்கள் வாள்வலி குன்றியவுடன் அவ்வெற்றியும் மறைந்தது. எனவே (பெருஞ்சோழர் காலமாகிய கி.பி. 1000 வரை) விரிந்த நாட்டை நேரிடையாக ஆளும் நிலை தமிழகத்தில் வேண்டப்படாது போயிற்று. விரிவான ஆட்சிக்கட்டுப்பாடு இல்லாமலே குறுகிய நாட்டை மன்னர் நேரிடையாக ஆளக் கூடுமாதலால் அரசியல்முறையில் வளர்ச்சியும் ஏற்படாது போயிற்று.

## திருக்குறளில் ஆட்சிமுறை:

பழங்கால ஆட்சிமுறை பற்றி நமக்கு ஓரளவு விளக்கமாகக் கூறும் நூல் திருக்குறளேயாகும்.

இந்நூலிற் காணப்படும் பொதுக்கருத்துக்களுடன் புறநானூறு முதலிய சங்க நூல்களில் கண்ட வரலாற்றுக் குறிப்புகளையும் இணைத்து, ஓரளவு அக்கால ஆட்சிமுறையைக் காணலாம்.

மன்னன் இல்லாமலே நடத்தும் குடியாட்சியின் பரந்தவகைகள் எதுவும் அக்காலத்தில் மக்கள் கனவில்கூட எழவில்லை என்பது தெளிவு. மன்னர் வலிகுன்றிய இடத்தோ மன்னர் இறந்து அரசுரிமை காரணமாகப் பிறர் மாறுபட்டுக் கலகம் விளைத்தவிடத்தோ ஏற்பட்ட குழப்பங்கண்ட அந்நாளைய ஆட்சிமுறைக்கு மன்னன் இன்றியமையாத உறுப்பினன் எனவும் முடியாட்சியே இயல்பான ஆட்சி எனவும் கொண்டனர். அது மட்டுமோ? கவிஞர் மன்னனில்லா நாட்டையே கதிரவனில்லா வானம், கண்ணில்லா முகம், கணவனிழந்த காரிகை ஆகியவற்றுக்கு ஒப்பான உவமையாகக் கூறிப் புனைந்துரைக்கலாயினர்.

இங்ஙனம் மன்னனில்லா முழுக் குடியாட்சி தமிழகத்தில் கருத்தளவில் கூட நிலவாவிடினும், குடியாட்சியின் கோட்பாடுகளே நல்லாட்சியெனப் கொள்ளப்பட்டிருந்தன.

மன்னன் மனம்போனபடி ஆளுவதையும், தன் நலத்தையே பெரிதாக எண்ணி ஆளுவதையும் அவர்கள் கொடுங்கோலாட்சி என வெறுத்தனர். செங்கோன்மையுடைய அரசன் மன்னுயிர் எல்லாம் தன்னுயிர் எனக் கொள்ள வேண்டும் என்றும், உண்மையான செல்வம் குறையற்ற வாழ்வுடைய குடிகளேயென்றும் திருக்குறள் முதலிய அக்காலத்திய நூல்கள் குறிப்பிடுகின்றன.

"வான் நோக்கி வாழும் உலகெல்லாம், மன்னவன், கோல் நோக்கிவாழும் குடி" என்றும், "மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை, அஃதின்றேல், மன்னாவாம் மன்னர்க்கு ஒளி" என்றும் திருவள்ளுவர் குறிப்பிடுதல் கவனிக்கத்தக்கது. குடிகளைப் புரந்து செழுமை யூட்டி அவர்கள் செல்வத்தின் ஒரு பகுதியை இறையாகக் கொள்வதற்கு மாறாக வலியுறுத்தி இறைகொள்ளுதல் வழிப்பறிக் கொள்ளையுடன் ஒக்கும் என்றும் கூறப்படுகின்றது.

தமிழ்நாட்டில் மக்கள் விரும்பிய ஆட்சி வரையறைப்பட்ட அல்லது பொறுப்புள்ள மன்னர் ஆட்சி எனப்படுவதாகும். ஏனெனில், மன்னன் எப்போதும் அமைச்சர் சொல்லுக்கும் சுற்றம் அல்லது எண்பேராயத்தின் அறிவுரைக்கும் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்றே கருதப்பட்டது. இவ்வமைச்சரும் சுற்றம் அல்லது அறப்பேரவையினரும் மன்னர் மகிழ நடக்கவேண்டுபவர் அல்லர், வேண்டும்போது மன்னரை இடித்துக் கூறித் திருத்தும் பொறுப்பை உடையவர். மன்னன் பொறுப்பறிந்த நல்லரசனாயின் அவர்களை அடக்கியோ மீறியோ நடவாமல் அவர்கள் கடமையும் தன் பொறுப்புமறிந்து திருந்துவான். அன்றேல் அவன் ஆட்சி கொடுங்கோல் ஆட்சியாகும், மக்களும் அறிஞரும் அதனை வெறுப்பர், சிலசமயம் அவர்கள் புரட்சிசெய்து மன்னனை அழிப்பர்.

ஒரோவழிக் கொடுங்கோலன் ஆற்றலுடையவனாய் விட்டால் குடிகள் கொடுங்கோலன் ஆளும் நாட்டிலும் காடே நன்று எனக் கொண்டு ஓடிக் காடடைவதும் உண்டு. இதனாலேயே "கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டில், கடும்புலி வாழும் காடு நன்றே" என்ற மூதுரை எழுந்தது.

ஆனால் செங்கோலானாவதும் கொடுங்கோலனா வதும் மக்கள் செயலல்ல, இறைவன் செயலென்று அந்நாளைய மக்கள் கொண்டனர் என்பது தெளிவு. அவ்வப்போது அமைச்சர், படைத்தலைவர், பெருங்குடிகள் சேர்ந்து கொடுங்கோலனை வீழ்த்தி வேறு அரசனை அமைப்பினும் இம்முறை ஓர் ஒழுங்குமுறையாகக் கொள்ளப்படவில்லை. மன்னன் கடவுள் நிலையில் உள்ளவன் என்ற எண்ணமே இதற்குக் காரணம். திருவள்ளுவனாரும் இக்கருத்தையே மேற்கொண்டு "முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு, இறையென்று வைக்கப்படும்" என்று கூறினர்.

இங்கிலாந்தில் 17-ம் நூற்றாண்டு வரையிலும், ஃபிரஞ்சுநாட்டில் 18-ம் நூற்றாண்டு வரையிலும், உருசிய நாட்டில் 19, 20-ம் நூற்றாண்டு வரையிலும் கூட இக்கருத்து மன்னரிடையேயும் மன்னரைச் சார்ந்து ஒழுகியவர்களிடையேயும் நிலவி வந்தது. ஆயினும் மேனாடுகளில் மக்கள் இக்கருத்துக்கு நெடுநாள் குருட்டுத்தனமாக அடிமைப்பட்டிராமல், அரசியலுரிமையைத் தாங்களே கைக்கொண்டு, வரையறைப்பட்ட மன்னர் ஆட்சியையும் குடியாட்சி வகைகளையும் நாளடைவில் அமைத்தனர்.

தமிழ்நாட்டில் கருத்தளவில் மணலிடை நுண்ணிய பொன்பொடி போலக் காணப்படும் இக்கருத்து, அதற்குமேல் வளம்பட்டு வளராது போயிற்று. 'குடியுயரக் கோனுயரும்' என்ற ஔவையார் மூதுரையில், குடிவழியே கோன் உயர்வு பெறுவன் என்ற உண்மை பொதிந்து கிடப்பினும், பிற்காலத்தில் 'அரசனெவ்வழி அவ்வழி குடிகள்' என்ற எண்ணமே மேலிட்டு, அரசியல் வளர்ச்சியைத் தடைப்படுத்திற்று. நாட்டு வாழ்வும், நல்லரசர், தீயரசர், வல்லரசர், புல்லரசர் ஆகியவர் கைப்பட்டுத் தொடர்ச்சியும் ஆக்கமும் அற்ற சீர்குலைவு வாழ்க்கையாயிற்று.

## பிற்காலத் திராவிட ஆட்சிமுறையில் குடிமை:

5-ம் நூற்றாண்டு முதல் 10-ம் நூற்றாண்டளவும் தமிழ்நாட்டில் பாண்டியரும் பல்லவரும் பேரரசு செலுத்தினர். 10-முதல் 12-ம் நூற்றாண்டு வரைத் தஞ்சைப் பெருஞ்சோழர் தமிழ்நாடு முற்றிலும் ஒரு குடைக்கீழ்க் கொண்டு வந்ததுடன் முதற்காலத் தமிழரசர் சுவட்டைப் பின்பற்றிக் கங்கைநாடும் கடாரநாடும் (பர்மா) பொன்னாடும் (சாவகம்) ஈழநாடும் (இலங்கை) வென்று இந்தியாவிலேயே பேரரசராக விளங்கினர். முதற்காலப் பேரரசர் வெற்றிகள் போலவே இவ்வெற்றிகளும் அரசியல் விரிவை உண்டு பண்ணவில்லை. ஆனால் தென்னாட்டளவில் அவர்கள் பரந்த ஆட்சி செலுத்தினர்.

அவ்வாட்சியில் பழைய குறுநில மன்னராட்சி மங்கினும் முற்றிலும் வலியிழக்கவில்லை. அவை நகராண்மை, ஊராண்மை ஆட்சிகட்கு வளந்தந்தன. இவ்வூராண்மையாட்சி மன்னர் முடிமாறினும் மாறாத நிலைபேறுடையதாக ஆங்கில ஆட்சிக் காலம் வரை மாறாதிருந்தது.

வடநாட்டு மன்னவரும் இவ்வாட்சிமுறையை மேற்கொண்டு இதனை இந்தியப் பெருநிலப்பரப்பின் பொது நல உரிமைகளுள் ஒன்றாக்கினர். ஆனால் தமிழர் பேரரசு பேரிலக்கியத்தையும் பெருங்கோயில் குளங்களையும் தந்து வேறு நிலையான பயன்தராது மறைந்தது.

வடநாட்டில் பழங்கால இலக்கியத்தில் காணப்படும் கருத்துக்கள் பெரும்பாலும் திருக்குறளிற் காணப்படும் கருத்துக்களே. வடநாட்டில் அரசியலுக்கும் அரசியல் கருத்துக்களுக்கும் முதல் நூலாய் விளங்கியது சாணக்கியர் அல்லது கௌடில்யரின் பொருள் நூலே (அர்த்த சாத்திரமே) யாகும். சாணக்கியர் தென்னாட்டினர் என்ற மரபுரையை மேலே குறிப்பிட்டிருக்கிறோம்.

மேலும், ஆரியர் நாடுநகர ஆட்சி கண்டது திராவிட நாகரிகம் வேர்கொண்டோங்கிய இந்தியப் பெருநிலப் பரப்பிலேயே ஆதலால், இக்கொள்கைகள் பெரும்பாலும் திராவிடச் சார்பாயிருப்பது இயல்பே யாகும்.

ஆயினும், பழங்காலத்திலேனும் ஆரியர் வரவினால் வட இந்தியாவுக்குச் சில சிறப்பான முறைகள் சில ஏற்பட்டிருந்தன. முதற்பிரிவிற் கூறப்பட்டபடி குலத்தலைவன் இடமாகக் குலத்தலைவன்குடி, அல்லது பலகுடிகளில் தலைமை பெற்ற குடி, நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நிலை வடநாட்டில் கி.மு. 7-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு அளவும் காணப்பட்டது.

கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் ஆண்ட [2] முதற் சந்திரகுப்தன் இத்தகைய 'லிச்சாவி' என்ற ஒரு குடியில் பெண்கொண்டு, அதனால் வலிவு அடைந்தானாதலால், தன் காசுகளில் தன் உருவுடன் தன் துணைவி யுருவையும் பொறித்துக்கொண்டான் என்று வரலாறு கூறுகின்றது.

புத்தர் பிறந்த மலைவாரக் குடியாகிய சாக்கியர் குடியிலும் இத்தகைய குழுவாட்சி அல்லது குடியாட்சி

அவ்வப்போது நிலவிற்று என்று தோன்றுகிறது. ஆனால் ஆரியர் கூட்டுறவால் ஏற்பட்ட இச் செய்திகள் பெரும்பான்மை திராவிடச் சார்பான இந்திய நாகரிகத்தில் இடம் பெறாது அழிந்துபோயின.

பாரசீகர், கிரேக்கர் படையெடுப்புக்களால் வட இந்திய அரசியல் வாழ்வு தற்காலிகமாகக் குழப்பமுற்ற தெனினும், அவை நிலவரமாக ஓர் அரசிய லுணர்ச்சியையும் உண்டுபண்ணின. இதன் பயனாக நாட்டை ஒன்றுபடுத்தி ஆளவேண்டும் என்ற கருத்து வளர்ச்சியடைந்தது.

சாணக்கியனை அமைச்சனாகக் கொண்ட மோரிய அரசன் சந்திரகுப்தன் நாட்டை அங்ஙனம் ஒன்றுபடுத்தியதுடன் வன்மையும் ஒழுங்கும் உடைய ஆட்சியையும் நிறுவினான். அசோகனின் பின் இவ்வாட்சி வீழ்ச்சியடைந்ததாயினும், பின்னும் கனிஷ்கன், விக்கிரமாதித்தன், ஹர்ஷன், பிருத்திவிராசன் முதலிய பழம்பெருமன்னர்களாலும் அக்பர், சிவாஜி முதலிய பிற்காலப் பெருமன்னர்களாலும் மீண்டும் மீண்டும் இத்தகைய பேரரசிற்கான முயற்சி மேலிட்டு வளர்ந்தது.

ஆனால் இவ்வளர்ச்சி நாட்டுமக்கள் வாழ்வை அடிப்படையாகக் கொண்டதல்ல ஆகலின், தமிழ்நாட்டுப் பழம் பேரரசுகள் போலவே சிலகாலம் நல்லாட்சியும் புகழும் தந்து மாண்டது.

தமிழ்நாட்டையும் வடநாட்டையும் ஒருங்கே படிப்படியாய் வென்று இந்தியப் பெருநிலப் பரப்பில் ஒரு பேரரசை ஆங்கிலேய ஆட்சி 17-முதல் 19-ம் நூற்றாண்டு வரை முயன்று நிறுவிற்று. ஓரளவு இப்பேராட்சியால் மேற்படையான ஒற்றுமை தோன்றினும், வெளிநாட்டார் ஆட்சி வலியால் ஏற்பட்ட இவ்வொற்றுமை நாட்டொற்றுமையை விளைவிக்காமலே நிலவுகின்றது. இனித் தமிழ்நாட்டு வளர்ச்சியும் இந்தியப் பெருநிலப் பரப்பிலுள்ள அயல்நாடுகளின் வளர்ச்சியும் ஒன்றுபட்டு நிலவுமா? அல்லது வேறுபட்டு நிலவுமா? என்பது வெளிநாட்டுப் பேரரசாட்சியின் தலைமை நீங்கினால் தான் தெளிவுபடக்கூடும். (மே மாதம் 1947இல் எழுதியது).

இதற்கிடையில் அரசியல்வகை நடைமுறைகளில் பிற்பட்டு நிற்கும் தமிழ்நாட்டுக்கும், இந்திய நாடுகளுக்கும் முன்மாதிரியாய் விளங்கி வரும் அரசியல்கள் மேனாட்டு அரசியல் முறைகளேயாம். அவற்றுள் காலப் பழைமையாலும் சிறப்பாலும் முதன்மை பெற்று நிற்பது ஆங்கில நாட்டு (அல்லது பிரிட்டன் நாட்டு) அரசியலேயாகும். அந்நாட்டின் அரசியல் வளர்ந்த ஆற்றையும், பிறநாடுகளின் அரசியல் வளர்ந்த ஆறுகளையும் ஆய்ந்து ஒப்பிட்டு நோக்கினால், அவ்வாராய்ச்சி நம் நாட்டின் எதிர்கால அரசியலை அமைக்க நமக்கு நல்ல தூண்டுதலாகும் என்பது உறுதி.

## அடிக்குறிப்புகள்:

1 & 2 - கே.வி.ரங்கசாமி ஐயங்கார், 'இந்திய நாட்டு வரலாறு--முசல்மான்களுக்கு முந்திய காலம்'

## ஆசிரியர் குறிப்பு:

பன்மொழிப்புலவர் எனப் பெயர் பெற்ற கா. அப்பாதுரையார் (1907 — 1989), தமிழ்நாட்டு மொழியியல் வல்லுநர்களுள் ஒருவர். தனது கோட்பாடுகளை அறிவியல் முறைமையாக ஆய்வுகள் மூலம் முன்வைத்த அறிஞர் ஆவார். இவருக்குத் தமிழ், மலையாளம், வடமொழி, இந்தி, ஆங்கிலம் ஆகிய 5 மொழிகளிலும் சரளமாகப் பேசவும், படிக்கவும், எழுதவும் கூடிய திறமை இருந்தது. இவர் எழுதிய பற்பல ஆராய்ச்சி நூல்களுள் 'தென்னாட்டுப் போர்க்களங்கள்' தலைசிறந்ததாகக் கருதப்படுகிறது.

சாமி சிதம்பரனார் (1900 - 1961), தமிழ் இதழாளர் மற்றும் எழுத்தாளர்களுள் ஒருவர். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் தமிழாசிரியரகப் பணியாற்றியவர். திராவிட இயக்கச் செயற்பாட்டாளர். கைம்பெண் ஒருவரைச் சுயமரியாதைத் திருமண முறையில் அன்றே மணம் புரிந்தவர். பல திராவிட இயக்க இதழ்களில் உதவி ஆசிரியராக, இதழாளராகப் பணியாற்றினார்.

## The Essence of Social Justice

- "If a larger country oppresses a smaller country, I'll stand with the smaller country.
- If the smaller country has a majoritarian religion that oppresses minority religions, I'll stand with minority religions.
- If the minority religion has caste and one caste oppresses another caste, I'll stand with the caste being oppressed.
- In the oppressed caste, if an employer oppresses his employee, I'll stand with the employee.
- If the employee goes home and oppresses his wife, I'll stand with that woman.

*Overall, oppression is my enemy!*"

**Periyar E.V.R**

# மனித அறிவை வெல்லுமா செயற்கை நுண்ணறிவு?

எழுத்தாளர். மு.சங்கையா



**கட்டுரைச் சுருக்கம்:**

*செயற்கை நுண்ணறிவின் தாக்கம் மறுக்க முடியாத யதார்த்தமாக மாறியுள்ள இன்றைய உலகமயமாக்கல் சகாப்தத்தில், தொழில்நுட்ப முன்னேற்றங்களின்தாக்கத்திலிருந்து எந்தநாடும்தன்னைத்தனிமைப்படுத்திக் கொள்ள முடியாது என்பதைத் தொழிலாளர் இயக்கங்கள் நன்கு அறிந்தே உள்ளன. கடந்த காலங்களில் வளர்ந்து வந்த உயர் தொழில் நுட்பங்கள், தொழிற்துறையில் ஏற்படுத்திய மாற்றங்களை ஒற்றுமையுடனும், தனது வலிமைமிக்க ஆற்றலுடனும், கூட்டுப்பேர சக்தியினாலும், தன்னையும் சமூக வாழ்வியலையும் தற்காத்துக் கொண்டு வளர்ந்ததைப் போன்றே செயற்கை நுண்ணறிவு மற்றும் ஆட்டோமேஷனையும் தொழிலாளர் வர்க்கம் எதிர்கொள்ளும் என்கிற நம்பிக்கையை இக் கட்டுரை விதைக்கின்றது.*

18-19ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் தோன்றிய புதிய கண்டுபிடிப்புகளான, விசைத்தறி,(power loom) நூற்பு இயந்திரம்,(spinning machine) நீராவி எஞ்சின்,பறக்கும் பாவு ( பிளையிங் ஷட்டில் ) நீராவிப் படகு ,நீர் சக்தி மூலம் செயல்படும் கம்பளி அறுப்பு இயந்திரம் உள்ளிட்டப் பல புதிய நவீன இயந்திரங்கள் இங்கிலாந்தின் கைராட்டை, கைத்தறி ,கொல்லரின் சம்மட்டி, ஆகியவைகளை அப்புறப் படுத்தியது. அதனால் நசுங்கிப் போய் வேலையிழந்த ஆயிரக் கணக்கானப் பட்டறை தொழில்களின் உடமையாளர்கள், ,கைவினைஞர்கள், நெசவாளர்கள், கொல்லர்கள் விவசாயிகள் ஆகியோரின் சிறு பகுதியினர் தொழிற் துறையில் நவீன இயந்திரங்களால் ஏற்படும் பாதிப்புகளை அகற்றுவதற்கான வழி முறைகளை அறியாதவர்களாக இருந்ததால் நவீன இயந்திரங்களை அழித்தொழிப்பதின் மூலமே தங்கள் வாழ்க்கையை மீட்டெடுக்க முடியும் என்று நம்பினர்.

புதிய தொழிநுட்பங்களும், இயந்திரங்களும் சமூகத்தின் வளர்ச்சிக் கட்டத்தின் தவிர்க்க முடியாத அம்சங்கள் என்பதை உணரமுடியாத அன்றைய இங்கிலாந்து தொழிலாளர்வர்க்கம் தொழிற்சாலையின் நவீன இயந்திரங்களை அடித்து நொறுக்கிக் கலகம் செய்யப் புறப்பட்டது.அப்படிப் புறப்பட்ட அவர்கள் தங்களை லுத்தியவாதிகள் (LUDDITES) என்று அழைத்துக் கொண்டனர். தீவிரவாத சிந்தனை கொண்ட அந்த இயக்கம் இங்கிலாந்தின் பல பகுதிகளிலும் நவீன இயந்திரங்களை அடித்து நொறுக்குவதை ஒரு இலட்சியமாக மேற்கொண்டது.

தவழும் குழந்தைப் பருவத்தில் இருந்த அன்றையத் தொழிலாளர்கள் தங்கள் வாழ்க்கை சூறையாடப்பட்டதற்கு நவீனக் கருவிகளே காரணம் என்ற அறியாமையில் விளைந்த அந்த முரட்டுத்தனத்தை,வன்முறையை இங்கிலாந்து அரசு இராணுவத்தைக் கொண்டு அடக்கியது.அத்தகைய

போக்கு இந்தியாவில் எழவில்லையென்றாலும் 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்,தொலைத் தொடர்பு, இரயில்வே துறை உள்ளிட்ட சில அரசுத்துறை நிறுவனங்களில் நவீனமயம் புகுத்தப்பட்ட போது அதற்கெதிரான குரல்கள் தொழிற்சங்கத்தினர் மத்தியிலிருந்து எழுந்தது. எனினும் அறிவியல் வென்றது. அது வளர்ந்து கொண்டே வந்தது.

தொழிற்புரட்சிக்கு வித்திட்ட நவீன இயந்திரங்கள், தொடக்கத்தில் லட்சக்கணக்கானோரின் வேலையைப் பறிப்பதற்கு காரணமாக இருந்தது என்றாலும் அதன் வருகை பல மில்லியன் கணக்கான மக்களுக்கு புதிய வேலைகளை உருவாக்கியதோடு, புதிய சமூகத்தை, புதிய உற்பத்தி முறைகளால் உருவான புதிய உலகைக் காட்டிய போது, கருவிகள் அல்ல எதிரிகள் என்பதை தொழிலாளிவர்க்கம் உணர்ந்தது.. இது வரலாறு.

அந்த வரலாற்றின் தொடர்ச்சியாக நிகழ்ந்த அறிவியல் அற்புதங்கள் மனித குலத்தைப் புதியதோர் உலகுக்கு அழைத்துச் செல்லும் படிக்கட்டாக இருந்ததைப் போலவே, அறிவியலின் டிஜிட்டல் யுகமான கணினி, இணையம், முகநூல், வலைத்தள மும் வாழ்வியலை அடுத்தக் கட்டத்துக்கு நகர்த்தியது. ஆனால் நாம் செயற்கை நுண்ணறிவு (AI) என்ற சகாப்தத்தில் நுழைகிற போது, அதன் தன்மை முற்றிலும் புதியதாகவும் மனித குலம் கண்டிராத காட்சியாகவும் மாறி விடுகிறது.

1956இல் கருவாகி வளர்ந்து நிற்கும் நான்காம் தொழிற்புரட்சி எனக் கருதப்படும் இன்றைய அறிவியல் புரட்சியான செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பம் (Artificial Intellegence ). அதன் உருவாக்கம், மேம்பாடு, பயன்பாடுகள், வளர்ச்சி இந்த உலகை வேறுவகையானப் பாதைக்கு அழைத்து செல்லப் போகிறது. ஒரு மனிதனின் படைப்புகள் மனித மனங்களால் நிகழ்த்தப்பட்ட அல்லது முயற்சிக்கப்பட்ட பணிகள் AI யிடம் ஒப்படைக்கப்படுகிற போது மனிதனின் பங்கு, மனித விருப்பங்கள்,ஆசைகள் ஆகியவற்றின் வரையறைகளும் மாறும்.இவ்வாறு மாறும் இந்த யுகத்தில் மனிதனுக்கு வழிகாட்டும் கொள்கைகள் என்னவாக இருக்கும்?

எதிர்காலத்தில் நாம் எந்த வேலையைச் செய்தாலும் AI நம்முடன் கூடவே நிற்கப்போகிறது அல்லது நாம் செய்கின்ற வேலையை அது எடுத்துக் கொள்ளப் போகிறது. நம் முன்னோர்கள் கற்பனையிலும் எண்ணிப்பார்க்க முடியாத விந்தை உலகுக்கு நம்மை அழைத்துச் செல்லச் போகிறது. அது எத்தகையதாக இருக்கப் போகிறது, அரசியல், சமூகம், பொருளாதாரம்,ஆகியவற்றில் என்னென்ன விளைவுகளை ஏற்படுத்தப் போகிறது என்பது பற்றி இன்று நமக்குத் தெரியாது. ஏனெனில் ஏ.ஐ. "தொழில்நுட்பம் எவ்வாறு உருவாகும், அதன் அடுத்த இலக்கு எது, நிறுவனங்கள் அதை எவ்வாறு ஒருங்கிணைக்கப் போகிறது என்பதெல்லாம் ஆய்வு நிலையிலேயே இருக்கிறது. இருப்பினும், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் ஒரு மாயாபஜாரை உருவாக்கக் காத்திருக்கிறது என்பது மட்டும் புரிகிறது. அடுத்த சில ஆண்டுகளில். ஒவ்வொரு மனிதனுக்கும் தவிர்க்க முடியாத ஊன்றுகோலாக செயற்கை நுண்ணறிவு இருக்கப் போகிறது என்பது மட்டும் உறுதி.

பொதுவாகவே அறிவியல் வளர வளர வாழ்வியல் மாறுவதைப் போலவே அதிகத் திறன் கொண்ட செயற்கை நுண்ணறிவு (AI) தொழில் நுட்பமும்,நாம் இது வரை புனைவுகளில் மட்டுமே கண்ட பல வியத்தகு ஆற்றலைக் கொண்டுள்ளதால் நமது வாழ்க்கைத் தரம், நாம் வாழும் முறை, வேலை செய்யும் முறை, வேலையின் தன்மை,பெரிய அளவில் மாறக்கூடும்.தொழில்நுட்பத்தில் ஏற்படும் எந்தவொரு பெரிய முன்னேற்றத்தையும் போலவே, இதுவும் பல்வேறு வாய்ப்புகளையும், சவால்களையும் அபாயங்களையும் சேர்த்தே கொண்டு வருகிறது. அதன் அதிக மேம்பட்டத் திறன், மனித சமூகத்தில் ஏற்படுத்தப் போகும் தாக்கம் தொழிற் புரட்சியின் மற்றொரு பாய்ச்சல் நிலையாகும்.

20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உருவான, கணினிமயமும், இணையமும், அது சார்ந்த பிற வலைத்தளங்களும்,சிறகு விரித்துப் பறக்கத் தொடங்கிய போது ஏற்பட்ட வியப்பு மறைவதற்குள்,

கடந்த சில ஆண்டுகளாக வேகமாக பயன்பாட்டுக்கு வந்து கொண்டிருக்கிற செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் முதல் அலை வரிசையும் (Narrow AI or Weak AI) முக்கியமான பல துறைகளில் பரவலாக கால் ஊன்றி அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. நில அதிர்வு வரையறுக்கப்பட்ட குறைந்த பட்ச ரிக்டர் அளவுக்குள் இருக்கும் போது எப்படி அதன் அதிர்வுகளை பெரிய அளவில் உணர முடியாதோ அதைப் போன்றே செயற்கைத் தொழில் நுட்பத்தின் முதல் அலை வரிசையின் ஆரம்ப கட்டம் ஒரு சில துறைகளில் வரையறுக்கப்பட்ட ஒரு சில வேலை களில் மட்டுமே பயன்பாட்டுக்கு வந்ததால் அதன் தாக்கம் பெரியளவில் உணரப் படவில்லை. ஏனெனில் அவைகளில் இணைக்கப்பட்டுள்ள மென்பொருள்களால் தானாக செயல்பட முடியாது. நாம் கொடுக்கிற கட்டளைக்கு ஏற்ப செயல்படும் (.it will act according to our instruction.) அதற்கு மேல் அது நகராது.

ஆனால் கடந்த சில ஆண்டுகளாக தொழிற்துறையில் Narrow AI/Weak AI என்று அழைக்கப்படுகிற AI (Artificial Intellegence) முதல் அலைவரிசை பலமாகக் கால் பதித்து வருகின்றது. அது மனிதனைப் போல் சிந்திக்கும் திறன் பெற்றது என்றாலும் அதன் நுண்ணறிவுத் திறன் குறைவானது. (Weak intelligence capacity.) அதனால் ஒரு குறிப்பிட்ட வேலையை மட்டுமே செய்ய முடியும். அதைத் தவிர வேறு எதுவும் அதற்குத் தெரியாது. மொழிமாற்றம் செய்யத் தெரிந்த AI க்கு எந்திரங்களைக் கையாளத் தெரியாது. அதாவது உரையாடும்., தகவல்களை பரிமாறிக் கொள்ளும் ஏ.ஐ.க்கு. இயந்திரங்களைக் கையாளத் தெரியாது. மொழி மாற்றம் செய்யும். ஆனால் உரையாடத் தெரியாது. கேள்வி கேட்டால் பதில் தெரியாமல் முழிக்கும். அதாவது ஒரு குறிப்பிட்ட, வரையறுக்கப்பட்ட வேலையை மட்டுமே Narrow AI/ Weak AIஆல் செய்ய முடியும்.

எடுத்துக்காட்டாக உருவாக்கத் திறன் கொண்ட ''chat GPT''(chat GPT-Generative pre trained transformer) என்பது ஒரு குறிப்பிட்ட செயலுக்கான மென்பொருள் ஆகும்... இது ஓபன்ஏஐ உருவாக்கிய செயற்கை நுண்ணறிவு சாட்போட் ஆகும். இதன் முதல் வடிவம் எலிசா ஆகும். இது சாட்ஜிபிடி பயனர்களுடனான உரையாடல் தொடர்புக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது, அரட்டை மென்பொருளான அது குறிப்பிட்ட வரம்பிற்குள் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும், உதவியை வழங்கவும், மனிதர்களைப் போன்றே பதில்களை உருவாக்கவும் முடியும். இது வாடிக்கையாளர் சேவை, உள்ளடக்க உருவாக்கம் மற்றும் கல்வி உள்ளிட்ட பரந்த அளவிலான பயன்பாடுகளைக் கொண்டுள்ளது. கவிதைகள், கதைகளையும் உருவாக்கி மனிதனுக்கு சவால் விடும் ஆக்கத் திறன் பெற்றது. எலிசாவைத் தொடர்ந்து சிரி(Siri), அலெக்ஸா(alexa), கூகுள் உதவியாளர் போன்ற மெய்நிகர் உதவியாளர்கள் உருவெடுத்தனர். 2021இல், Dall-E செயலியை அறிமுகம் செய்து புகைப்படங்களை (Image creation) உருவாக்கும் சோரா வை ஓப்பன் AI, உருவாக்கியது. மிட்ஜர்னியும் ஓவியங்களை உருவாக்கி வியக்க வைக்கிறது. எனினும் அவைகள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட பணிகளுக்கு மட்டுமே பொருத்தமானதாக இருந்தது. அரட்டை அடிக்கத் தெரிந்த எலிசாவுக்கு ஓவியம் தீட்டத் தெரியாது. ஓவியம் தீட்டிய சோராவுக்கு சுட்டுக் போட்டாலும் இசை வராது. அதாவது, இசைஞானி இளையராஜா ஓவியர் கோபுலு ஆக முடியாது. அது போல் தான் இதுவும். இப்போது வெவ்வேறு வகையான chatGPTகள் பயன்பாட்டுக்கு வந்து விட்டன. இருப்பினும் தற்போது அது ஆரம்ப நிலையில், சோதனை முறையில் முன்னேறிக் கொண்டிருக்கிறது.

.chat GPTயின் மேம்பட்ட வடிவம் புழக்கத்துக்கு வருவதற்கு முன்பாக சேவை மற்றும் உற்பத்தித்துறையில் தானியங்கி இயந்திரங்கள் பயன்பாட்டுக்கு வந்து பல காலங்கள் ஆகிவிட்டன. என்றாலும் 2016ஆம் ஆண்டில் டேவிட் ஹன்சன்என்பரால் மனிதனைப் போலவே கை, கால், தலையைப் பொருத்தி உருவான இயந்திர மனிதனுக்குள் AI தொழில் நுட்பத்தைப் புகுத்திய ரோபோக்கள்உருவாக்கப்பட்டன. அவ்வாறு மனித உருவோடு செயற்கை நுண்ணறிவால் உருவாக்கப்பட்ட முதல் AI பெண்ணரசி தான் சோபியா. அவளின் முக பாவங்கள் கண் அசைவு,

பேச்சாற்றல் கேள்விகளை உள்வாங்கிக் கொண்டு பதில் சொன்ன விதம் என அனைத்தும் மனிதனை ஒத்திருந்தது. கடந்த ஐந்து ஆண்டுகளில் சோபியா தனது இயந்திர மூளையை மனிதனுக்கு நிகராக வளர்த்துக் கொண்டு வருகிறது. GPT-3 பெரும் பாய்ச்சல் நிலை எடுத்துள்ளது. மொழி மாதிரி. (language model) உருவாக்கத்துக்கு முன் மாதிரியாக உருவெடுத்துள்ளது. இவ்வாறு,அற்புதம் எனக் கொண்டாடப்படுகிற chatGPT வகை செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பம் கடந்த சில ஆண்டுகளாக பல அதிர்வுகளை, கொந்தளிப்புகளை வேலைச் சந்தையில் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

இன்றைய நிலையில் சந்தைக்கு வந்து விட்ட செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பதின் ஒவ்வொரு அம்சமும் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. குரல் கட்டளைகள் அல்லது உரையாடல்களை உருவகப்படுத்தும் ஒரு கணினி நிரலான மென்பொரு ளான சேட் பாட்கள் (CHATBOT) களில் அனைத்தையும் பதிவு செய்து வைக்கும் முறை வந்து விட்டது. பதிவு செய்த நமது குரல்களை நமது மறைவுக்குப் பின்பும் அச்சுபிசகாமல் உயிர்ப்புடன் நமது குரலின் ஏற்ற இறங்களுடன் கேட்க முடியும். கூடவே உரையாடவும் முடியும்.அதைத் தொடர்ந்து நவம்பர் 2022 இல் ஓபன் ஏஐ சாட்ஜிபிடி (chatGPT) யை அறிமுகப்படுத்தியதை போன்றே, கூகுள் மற்றும் மைக்ரோசாப்ட் நிறுவனங்களும் தங்கள் சொந்த AI கருவிகளான ஜெமினை (gemini,) மற்றும் (Bing)'பிங்கை அறிமுகப்படுத்தியது. இந்த மூன்று செயற்கை நுண்ணறிவு கருவிகளும் அவற்றின் தொடக்கத்திலிருந்தே தொழில்நுட்ப உலகின் பேச்சாக இருந்து வருகின்றன, இன்று, அதிகமான நிறுவனங்கள் தங்கள் நன்மைக்காக செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தத் தொடங்கியுள்ளன.

AI யின் (Artificial Intelligence ) அடுத்த கட்ட அலைவரிசையை AGI - Artficial General Intelligence ஆகும் ..அதிநவீன மேம்படுத்தப்பட்டத் தொழில்நுட்பம் உடைய இந்த வகையான இரண்டாம் அலைவரிசையை மனிதனுக்கு நிகராக சிந்திக்கும் (human level artificial intelligence) செயற்கை நுண்ணறிவு என்கின்றனர். அது ஆய்வு நிலையில் உள்ளது. விரைவில் பயன்பாட்டுக்கு வருவதற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருக் கின்றன. செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பத்தில் உச்சத்தில் இருந்த கூகுளை 'சாம் ஆல்ட்மேன், கிரேக் பிராக்மேன், ரீட் ஹாஃப்மேன், ஜெசிகா லிவிங்ஸ்டன், பீட்டர் தியேல், இலான் மஸ்க் மற்றும் அமேசான் வெப் சர்விசஸ் ,இன்போசிஸ், போன்ற பெரு நிறுவங்களின் கூட்டு முயற்சி 2015 ஆம் ஆண்டில் பின்னுக்குத் தள்ளியது..AI யின் மேம்பாட்டுக்காக ஓபன் AI 2017 ஆம் ஆண்டில் மட்டும் எட்டு மில்லியன் டாலர்கள் செலவழித்து கூகுளை ஆச்சரியப்பட வைத்தது..'' என்கிறார் ஹரிஹரசுதன் தங்கவேலு தனது AI எனும் ஏழாம் அறிவு. இரண்டாம் நூலில்.

இரண்டாம் அலை வரிசை பன்முகத் தன்மைக் கொண்ட பல வேலைகளையும் செய்யும் திறன் கொண்டதாக இருக்கும்.தானாகவே சிந்திக்கும் திறன் உடையது. ஒரு மனிதனால் செய்யக்கூடிய எந்தவொரு அறிவுசார் பணியையும் புரிந்துகொண்டு தானாகவே கற்றுக்கொள்ளும் திறன் உடையது. (researchers are striving to reach strong AI)

அடுத்தடுத்த காலங்களில் ஆய்வில் இருக்கிற , ,மூன்றாம் அலைவரிசை உலகம் முழுவதும் எற்படுத்தப் போகும் அதிர்வுகள் நேற்றைய சமூகத்தை எள்ளி நகையாடப் போகிறது..செயற்கை நுண்ணறிவின் அறிவுத் திறனுக்கு எது அளவுகோல் என்பதை தீர்மானிக்கும் பொறுப்பு எப்போதும் மனிதர்களிடம் தான் உள்ளது.ஆயினும் ஆய்வுகளில் ஏற்படும் ஒரு மிகச் தவறு கூட ஒரு பேரழிவுக்கான கதவுகளை திறந்து விடலாம் . அது மனிதக் கட்டுப்பாட்டை மீறி வேலி தாண்டினால் என்னவாகும்..? தெரியாது.

முதலாம்,இரண்டாம் அலைவரிசை AI யை விட ஆய்வு நிலையில் இருக்கிற (still a concept) செயற்கை நுண்ணறிவின் மூன்றாம் அலைவரிசை(Super Arificial intelligence ) சூப்பர் தொழில் நுட்பத் திறன் வாய்ந்ததாக இருக்கும் .பல வேலைகளை செய்யவும் ,தானாகவே கற்றுக் கொள்ளவும் திறன் வாய்ந்தது..

அதற்கும் மேலாக மனிதனைப் போன்ற உணர்ச்சிகள், உணர்வுகள் இருக்கும். மனித நுண்ணறிவை மிஞ்சும் அளவில், ஒரு மனிதனின் உணர்வுகளோடு செயற்கை நுண்ணறிவு உருவாக்கும் இந்த மெய்நிகர் உருவங்கள் நம் காதலுக்குரிய தேவதைகளாக எதிரே வரலாம். உன்னை நான் சந்தித்தேன் நீ ஆயிரத்தில் ஒருவன்" என்று பாடலாம்... கவிதை மழை பொழியலாம். உயிருள்ள மனிதர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு உரையாடலாம். உறவாடலாம். மன்மத லீலையை வெல்ல குடும்பம் நடத்தலாம். இசை ஆல்பம் வெளியிடலாம். எதிர்காலத்தில் ரோபோட் ரெஜிமெண்ட் முன்னாள் நிற்கலாம். மொத்தத்தில் எதிர்காலம். எந்திரன் திரைப்படத்தில் நிழலாக வந்த 'சிட்டி'யை தனது கருவிலே சுமந்து கொண்டு வருகிறது இந்த மேம்பட்ட தொழில்நுட்பம் என்பதை நம்ப மறுத்தாலும்,நடக்கப் போவது நிஜம்.

இத்தகைய ஆய்வுகளுக்கிடையில் chatGPTயின் உருவாக்கத்திலும் பயன்பாட்டிலும் மிகப் பெரும் பிரச்சனையாகக் கருதப்படுவது தண்ணீர். அது பெரும் தாகம் கொண்டதாக இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அமெரிக்காவில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் ஜி.பி.டி 3 வடிவத்துக்கான பயிற்சிக்கு மட்டும் ஏழு லட்சம் லிட்டர் தண்ணீர் தேவைப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது. பயனாளிகள் உரையாடிய பொழுதெல்லாம் மறு முனையில் ஜி.பி.டி தண்ணீர் குடித்துக் கொண்டிருந்ததாக ஆய்வு தெரிவிக்கின்றது. (சாடிஜிபிடி சரிதம் - சைபர்சிம்மன் பக் 121) சாட்ஜிபிடியுடனான உரையாடலின் போது 25 கேள்விகளுக்குப் பதில் அளிக்க அதற்கு 500 மிலி தண்ணீர் தேவைப்படுகிறது என்றால் உலகம் முழுவதும் உரையாடல் நிகழும் போது நிலைமை என்னவாகும்.இந்தத் பெருந்தாகப் பிரச்சனையை அறிவியல் எப்படி முறியடித்து முன்னேறப் போகிறது என்பது தெரியவில்லை.

## பயன்பாடுகள்

செயற்கை நுண்ணறிவுத் (AI-Artificial Intelligenece) தொழில்நுட்பத்தின் கண்டு பிடிப்பும், படிப்படியான. வளர்ச்சிப் போக்கும் அறிவியலின் மற்றொரு கொடை எனும் கருத்தை மறுதலிக்க முடியாது. ஏனெனில் அது அறிவியல். அதன் மறுபக்கம் என்னவாக இருக்கப் போகிறது என்று புரியாவிட்டாலும், இன்றைய நிலையில் சமூகத்தின் அன்றாட வாழ்வியலில் மட்டுமின்றி கார்பொரேட் உலகின் தொழிற் துறையின் ஒவ்வொரு பகுதியிலும் ஆதிக்கம் செலுத்தக் கூடிய வல்லமை பெற்றதாக வளர்ந்துள்ளது. ஓபன்ஏஐ,. கூகுள், ஆப்பிள், மைக்ரோசாப்ட், மற்றும் அமேசான் போன்ற நிறுவனங்கள் பல மெய்நிகர் உதவியாளர்களை அதாவது உண்மை போல் இருக்கும் மனித உருவங்களை (virtual assistant) உருவாக்கிப் பயன்படுத்தப் போகின்றன. அமேசானின் அலெக்சா, கூகுளின்ஜெமினை(gemini) மற்றும் Microsofன், கோபைலட் (copilot), பிங்(Bing) ஆகியவை சில எடுத்துக் காட்டுகளாகும். இந் நிறுவன மெய்நிகர் உதவியாளருடன், தொடர்பு கொண்டு உலகின் அனைத்து விவரங்களையும் ஒருவர் அவரது தாய் மொழியின் மூலமாகத் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள முடியும். ஒற்றை மொழியால் உலகை வலம் வர முடியும். ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும் இந்தி கட்டாயம் என்பவர்கள் காணாமல் போய் விடுவார்கள். தாய் மொழி ஒன்றே போதும் என்பதால், ஒரு கல்வியறிவற்ற அல்லது பார்வையற்ற மனிதர்களும் பயன் பெறுவார்கள்...

மேலும் மருத்துவ ஆராய்ச்சி, நோயறிதல், அறுவை சிகிச்சை, மற்றும் மருத்துவம் சார்ந்த பல சிக்கலானப் பிரச்சனைகளைக் கண்டறிந்து அவற்றை எளிதாகத் தீர்ப்பதற்கு வழிகாட்டும் மற்றும் வாடிக்கையாளர் சேவை, வேளாண்மை, சந்தைப் படுத்தல், மேலாண்மை, கணக்கியல், சட்டசேவை, சட்ட ஆராய்ச்சி, ஆவண மறுஆய்வு, கல்வி, கணிதம், நிதி திட்டமிடுதல், தகவல் தொழில் நுட்பம், போக்குவரத்து, கட்டுமானம், சிறு தொழில், சில்லறை விற்பனை, உணவு விடுதி, ஓட்டுநர், பணியாளர், மற்றும். வேலைகளை மறுபரிசீலனை செய்வது, நகல் எடுப்பது, ஒட்டுவது, மாற்றுவது மற்றும் தட்டச்சு செய்வது,மொழிமாற்றம் விருந்தோம்பல் சேவை (reception, service), விருந்தாளியை உபசரிப்பது,

அறையை சுத்தம் செய்தல், செக்-இன் செயல்முறைகள், மொழிபெயர்ப்பு என சகல பகுதிகளிலும் விரிந்த அளவில் சந்தையில் பயன்பாட்டுக்கு வந்தவண்ணம் உள்ளன. இத்துடன் நின்று விடவில்லை..

- கல்வியில் செயற்கை நுண்ணறிவின் மெய்நிகர் ஆசிரியர்கள் மூலம் மாணவர்களுக்கு பாடங்களைப் போதிப்பது, கருத்துக்கள் வழங்குவது, கேள்விகளுக்குப் பதிலளிப்பது, பதில்களை மதிப்பிடுவது ஆகியவை அடங்கும். சில மாதங்களுக்கு முன் கேரளாவின் ஒரு கல்விச்சாலையில் மாணவர்களுக்கு பாடம் நடத்தி, அவர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்த ஒரு மெய்நிகர் ஆசிரிய பெண்மணியும், தொலைக் காட்சியில் செய்தி வாசிப்பாளராகத் தோன்றிய ஒரு அழகான மெய்நிகர் பெண்மணியும், செயற்கை நுண்ணறிவில் படைக்கப்பட்ட உருவங்கள் என்று அறிந்த போது எழுந்த வியப்பின் ஊடே, தமிழ் நாடு அரசு, கல்லூரி விடைத்தாள் திருத்தும் பணியில் AI தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த முடிவு செய்துள்ளதாக வரும் செய்திகளும் AIனின் பாய்ச்சல் நிலையை படம்பிடித்துக் காட்டுகிறது.

- சுய-ஓட்டுநர் (self driving) தானியங்கி கார் என்பது செயற்கை நுண்ணறிவின் அதிகத் திறன் கொண்ட பயன்பாடாகும். காரில் பொருத்தப்பட்டுள்ள AI மென்பொருள் அனைத்து சென்சார்களுடனும் இணைப்பட்டுள்ள தால், AI தனது ஆழமான கற்றல் அறிவால் மனிதனின் உணர்வு மற்றும் முடிவெடுக்கும் செயலினை உருவகப்படுத்தி ஸ்டீயரிங், பிரேக்குகள், வேக நிர்ணயம், போன்ற கட்டுப்பாட்டு கருவிகளை கட்டுப்படுத்தி கிளம்பும் இடம், சேரும் இடத்துக்குத் தாமாக ஒட்டிச் செல்லும். மனித உழைப்பு தேவையற்றதாக மாறி விடுகிறது. இலான் மஸ்கின் டெஸ்லா கார், கூகிளின் வேமோ (waymo) Nvidia உள்ளிட்ட பல நிறுவனங்கள் தங்கள் மாடல்களை சாலைகளில் AIயைப் பயன்படுத்தி சோதித்து வருகின்றன.

- சிங்கப்பூரில், ஓட்டுநர் இல்லாத பேருந்துகள் பரிசோதனையின் கீழ் இயக்கப்படுகிறது. இதுவரை மிகக் குறைவான விபத்துக்களே பதிவாகியுள்ளன என்று கூறுகின்றனர். மேலும் மனிதனால் இயக்கப்படும் கார்களை விட ஓட்டுநர் இல்லாத தானியங்கி கார்களில் விபத்துகள் குறைவாக இருப்பதாக ஆய்வுகள் குறிப்பி டுகின்றன. குரல் மூலம் வாகனத்தை இயக்கவும், நிறுத்தவும் AI தொழில் நுட்பம் உதவுகிறது. இது பரவலாகும் போது பல்லாயிரக்கணக்கான ஓட்டுனர்கள் வேலை யிழக்கும் அபாயம் இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. என்றாலும் தொலைதூரம் பயணிக்கும் ட்ரக் ஓட்டுநர்/பேருந்து ஓட்டுநர் இனி AIகளிடம் ஸ்ட்ரிங (steering) கொடுத்து விட்டு ஹாயாகத் தூங்கலாம்.

- உலகளாவிய அறிவைச் சேகரிக்கவும்,, வெற்றிகரமான கொள்கைகளைப் பகிர்ந்து கொள்ளவும், சர்வதேச ஒருமித்த கருத்தை வளர்க்கவும், ஒழுங்குமுறைகளை ஒத்திசைக்கவும், பொருளாதார நிலைகளை ஆய்வு செய்யவும் முடியும் என்று சர்வதேச நிதி ஆணையம் (IM ) கூறுகிறது. சர்வதேச தொழிலாளர் அமைப்பும் (ILO) AIயின் பயனையும், பாதிப்பையும் கவனத்தில் கொண்டு சில வழிகாட்டும் நெறி முறைகளை வகுக்கத் தொடங்கி உள்ளது.

- சுகாதாரத் துறையில் செயற்கை நுண்ணறிவைப் 100க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பயன்படுத்தத் தொடங்கியுள்ளன. (From Virtual Nurses To Drug Discovery, 2018) உண்மை போல் இருக்கும் (ஆனால் உண்மை இல்லை.) மெய்நிகர் செவிலியர்(Virtual Nurses) என்பது பல வகையான சூழல்களில் பயன்படுத்தப்படும் ஒரு பயன்பாடாகும். இது பொதுவாக ஒரு

மனித செவிலியரால் செய்யப்படும் பணிகளை விட நேர்த்தியாகவும் விரைவாகவும் செய்ய முடியும். மருத்துவ ஆய்விலும், இயற்பியல் ஆய்விலும் ஏ.ஐ. பயன்படும் சாத்தியங்கள் இருக்கின்றன. புதிய மருந்துகளை சோதித்துப் பார்க்க இனிமேல் ஏ.ஐ. உதவும்.

- ஒரு செயற்கை நுண்ணறிவுப் போலீஸ் ஏஜெண்டை உருவாக்க முடியும் (artificial police agents) அதன்மூலம் முழு வலையமைப்பையும் கண்காணிக்கவும், குற்றவாளிகளின் செயல்பாடு களைக் கண்டறியவும் முடியும். போதுமான எண்ணிக்கையிலான புத்திசாலித்தனமான செயற்கை போலீஸ் முகவர்களை (AGENT) உருவாக்கி ஒரு வலைப்பின்னலில் இணைத்துப் பயன்படுத்தலாம்.
- மேலும் நிதி நிறுவனங்களின் மோசடிகளை முன்கூட்டியே கண்டறியவும்,. மோசடியைச் சுற்றியுள்ளவைகளை விரைவாகப் பிடிக்கவும், அது முற்றிலும் நடப்பதைத் தடுக்கவும் உதவுகிறது. .
- வங்கிக், கணக்குகளின், இருப்பு சரிபார்ப்பு போன்ற எளிய பணிகளைச் செய்ய வங்கிகளால் சாட்போட்(chatbot) பயன்படுத்தப்படுகிறது மற்றும் வாடிக்கையாளர் சேவைக்கான செயல்முறைகளில் ரோபோக்களின் பயன்பாடு உள்ளிட்ட தகவல் தொழில்நுட்பத் தீர்வுகளுக்கு AIயின் மேம்படுத்தப்பட்டத் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்த பெரும்பாலான வங்கிகள் முயற்சித்து வருகின்றன.
- மேலும் துல்லியமான வேளாண்மை மற்றும்,பயிர் கண் காணிப்பு, முன்கணிப்பு பகுப்பாய்வு மற்றும் தானியங்கி உபகரணங்கள் தன்னாட்சி சாதனங்களின் செயல்பாடு ஆகியவற்றிற்கு செயற்கை நுண்ணறிவு பயன்படுத்தப்படுகிறது.

உலகம் முழுவதும் தற்போது 2.25 மில்லியன் தொழில்துறை ரோபோக்கள் பயன்படுத்தப்படுகின்றன. கடந்த 20 ஆண்டுகளில், பயன்படுத்தப்படும் ரோபோக் களின் எண்ணிக்கை மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தின் மிகு திறன் கொண்ட ரோபோட்களின் உலகளாவிய சந்தை ஒவ்வொரு ஆண்டும் 54 சதவீதம் வரை வளரும் என்றும் ஆய்வுகள் கணிக்கின்றன.2030 ஆம், ஆண்டில் சீனாவில் 14 மில்லியன் தொழில்துறை ரோபோக்கள் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு ரோபோட் களமிறங்கினால் பலர் வெளியேற வேண்டிய நிலை உருவாவதை யாராலும் தடுக்க முடியாது. புத்திசாலியான இயந்திரங்களால் மனிதர்களை மாற்றுவதற்கான சாத்யக் கூறுகள் அதிகரித்து வருகின்றன. அடுத்த 10 ஆண்டுகளில் ரோபோக்களின் எண்ணிக்கை 20 மில்லியனாக உயரும் என்கிற போது. 2030ஆம் ஆண்டிற்குள் 20 மில்லியன் உற்பத்தி வேலைகள் ரோபோக்களால் இழக்கப்படப் போகிறது என்பது தான் அதன் பொருள்.

அவ்வாறு இழக்கப்படும் வேலைகளில் உயர் திறமையான தொழிலாளர்களுக்கு அதிக பாதிப்பு ஏற்படாது. அதேபோல பிளம்பர்கள் எலக்ட்ரீஷியன்கள் போன்ற வர்த்தக தொழிலாளர்கள் சேவைகளுக்கான தொடர்ச்சி அதிகம் பாதிக்கப்படுவதில்லை. தரவு ஆய்வாளர்கள் (data analysts) மற்றும் விஞ்ஞானிகள் அல்லது பெரிய தரவு நிபுணர்கள் (big data specialists) போன்றவைகளின் தேவை 30-35% அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாகவும், மற்றும் தகவல் பாதுகாப்பு ஆய்வாளர்களுக்கான (information security analyst) தேவையில் 31% அதிகரிப்பு இருக்கும் என்றும் இதன் மூலம் 2.6 மில்லியன் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். அவ்வாறு உருவாக்கப்படும் பணிகளுக்கு, அவர்களின் திறனுக்கு மேலான, சவாலான பணிகளை அவர்கள் மேற்கொள்ள வேண்டி வரலாம். இதுவரை நிலவி வந்த பணியும், பணிச் சூழலும் எதிர்மறையாக மாறக்கூடும் என்கிறது ஆய்வு.

## வேலையிழப்பு

இவ்வாறு,தொழில்துறை.உற்பத்தி (manufacturing sector). ஐ.டி.தானியங்கி (automation) போக்குவரத்து., மருத்துவம். கல்வித்துறை என முக்கியமானத்

துறைகளில் திறன்மிக்க செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பதின் ரோபோட், சேட்போட் (chatbot) தொடக்க நிலை பயன்பாட்டிலேயே பல்லாயிரம் பேரின் வேலை வாய்ப்பு பறி போயுள்ளது. அது உலகம் முழுவதும் பரவலாகும் போது பல மில்லியன் தொழிலாளர்கள் வேலையிழப்பர். இந்தியாவைப் பொறுத்தவரை, உற்பத்தி, (Manufacturing) வாடிக்கையாளர் சேவை (customer care) மற்றும் தரவு செயலாக்கம் (data processing) தகவல் தொழில்நுட்பம், மற்றும் விவசாயம் போன்ற துறைகள் உடனடியான பாதிப்புக்கு உள்ளாகும் என்பதை இந்திய அரசாங்கத்தின் கொள்கைச் சிந்தனைக் குழுவான நிதி ஆயோக், குழுவும் ஒப்புக்கொள்கிறது. இருப்பினும், செயற்கை நுண்ணறிவு புதிய வாய்ப்புகளையும் உருவாக்க முடியும் என்கிறது.

உலகப் பொருளாதார மன்றத்தின் "எதிர்கால வேலைகள் அறிக்கை உட்பட பல ஆய்வுகளும் ஆட்டோமேஷன் மற்றும் செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பத்தால் ஏற்படப்போகும்வேலையிழப்பு களையும்,பாதிப்புகளையும்,குறிப்பிடுகிற அதேசமயம் கூடவே அதை சமன் செய்யும் வகையில் வேறு வகையான வேலை வாய்ப்புகளை உருவாக்கும் என்பதையும் தவறாமல் சுட்டிக்காட்டுகின்றன.

எடுத்துக்காட்டாக உலகப் பொருளாதார மன்றத்தின்(Word Economic Forum) "எதிர்கால வேலைகள் அறிக்கை 2020"(Future of Jobs Report 2020") உலகளவில், ஆட்டோமேஷன் மற்றும் AI காரணமாக 2025 க்குள் 85 மில்லியன் வேலைகள் இடம்பெயரக்கூடும்.10-20 ஆண்டுகளில் அமெரிக்காவில் 47%, இங்கிலாந்தில் 35%, ஜப்பானில் 49%, ஆஸ்திரேலியாவில் 40% மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் 54% வேலை இழப்பு ஏற்படும் என்று மதிப்பிடுகிறது. மற்றொரு தரவு இங்கிலாந்தின் சில துறைகளில், அடுத்த 11 ஆண்டுகளில் பாதிக்கும் மேற்பட்ட வேலைகள் ரோபோக்களால் எடுத்துக் கொள்ளப்படும் அபாயம் இருப்பதாக வெளிப்படுத்தி யுள்ளது. இவ்வாறு வேலை இழப்புகள் ஒருபுறம் இருக்க, மறுபுறம் புதிய தொழிலாளர் பிரிவுக்கு ஏற்றவாறு 97 மில்லியன் புதிய வேலைகளை AIயின் வருகை உருவாக்கலாம் என்று WEF (World Economic Forum). மதிப்பிட்டுள்ளது. அவ்வாறு உருவாகும் புதிய வேலைகளில் சாதாரண தொழிலாளிக்கு இடம் இல்லை.

மற்றொரு கணிப்பு 2035 ஆம் ஆண்டில் 12 வளர்ந்த நாடுகளின் வருடாந்திர பொருளாதார வளர்ச்சி விகிதத்தை AI தொழில்நுட்பம் இரட்டிப்பாக்கும் என்று சொல்கிறது. மெக்கின்சி குளோபல் நிறுவனம், 2030 ஆம் ஆண்டில் இந்தியாவில் 73 மில்லியன் வேலைகள் ஆட்டோமேசனாக மாறக்கூடும் என்கிறது. வேலையில்லா பட்டதாரிகள் பல கோடி பேர் இருக்கும் ஒரு நாட்டில் 73 மில்லியன் வேலைகள் ஆட்டோமேசனாக மாறினால் அவர்களின் எதிர்காலம் என்னாவது என்பதற்கு அதன் மற்றொரு ஆய்வு, 'ஆட்டோமேசனை சரியாகக் கையாண்டால், 2030 ஆம் ஆண்டில் 90 மில்லியன் முதல் 145 மில்லியன் வரை புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும்' என்று நம்பிக்கை ஊட்டுகிறது. இந்த டிஜிட்டல் புரட்சியின் யுகம் புதிய வேலைகளைக் கொண்டு வரும் என்ற அனுமானத்தை பலரும் ஏற்றுக் கொள்கின்றனர்.

இவ்வாறு பல ஆய்வு அறிக்கைகளும், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தால் ஏற்படப் போகும் பொருளாதார வளர்ச்சி பற்றியும் வேலை வாய்ப்பைப் பற்றியும் கணித்து சொல்லுகின்ற அதே வேளையில் அதன் மறுபுறத்தையும் திறந்து காட்டத் தவறவில்லை.

செயற்கை நுன்னணிறிவு தொழில் நுட்பம் விரிந்த அளவில் பயன்பாட்டுக்கு வரும் போது குறைந்த தொழில் திறன் உள்ளவர்கள் (UNSKILLED LABOURS) மற்றும் பெண்கள், வாடிக்கையாளர் சேவை பிரதிநிதிகள், காசாளர்கள், அலுவலக உதவியாளர்கள்

மற்றும் உற்பத்தி தொழிலாளர்கள் ஒரு பாதுகாப்பற்ற சூழலுக்குள் தள்ளப்படுவார்கள். ஐடி நிறுவனங்களைப் பொறுத்தவரை, அனுபவம் வாய்ந்த லட்சக்கணக்கான ஊழியர் களுக்குப் பதிலாக குறைந்த அளவில் புதிய இளம் பட்டதாரிகளை,குறைந்த ஊதியத்தில் நியமிக்கும் போக்கு அதிகரிக்கலாம்.நடுத்தர வர்க்கத்து தொழிலாளர் கள் பெருமளவில் பாதிக்கப்படுவார்கள்.

,AI ன் வருகை உலகம் முழுவதும்,

எழுத்தர் மற்றும் செயலக அலுவலர்கள் சுமார் 40 %

உற்பத்திதுறையில் 45%, ,கேட்டரிங் தொழில் 54%,

கட்டுமானம் 39%,

மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனையில் 34%,

சொத்து வீட்டுவசதி மற்றும் எஸ்டேட் 31%

கல்வித் துறை 9% ,சுகாதாரம் மற்றும் சமூக ஊழியர்கள் 21%

ஆகியோர் விரைவான சரிவுக்கு உள்ளாவார்கள். AI னின் வருகை அவர்களுக்கு ஒரு பெரிய எச்சரிக்கையாகும் இவர்கள் இந்த தொழில்நுட்பத்தின் மோசமான சமூக, பொருளாதார விளைவுகளை அனுபவிக்கும் அபாயம் அதிகமாக உள்ளது.

மாற்றங்கள் என்பது ஓர் இரவுக்குள் நடந்துவிடப் போவதில்லை. அதற்கு பல ஆண்டுகள் தேவைப்படலாம். ஆனாலும் வளருது கண்ணுக்குத் தெரியலச் செடி வளருது என்பது போல AI மற்றும் ஆட்டோமேசனின் வேகமான வளர்ச்சியும் பயன்பாடும் எல்லா நாடுகளிலும் பரவலாகக் கால் பதித்து வேருன்றத் தொடங்கி விட்டன.. செயற்கை நுண்ணறிவின் சமீபத்திய முன்னேற்றங்கள் கணிசமான நன்மைகளை வழங்குகின்றன என்று சொல்லப்படும் உண்மைக்குள் வேலை இழப்பு ,வேலையின்மை, சமூகப் பாதுகாப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய வேறு சில அபாயங்களும்,நிஜ மனிதனைப் போல் உருவாக்கப்பட்டப் போலி உருவங்களும், அச்சான குரல் பதிவும், ,தனி மனிதனின் தனிப்பட்ட தகவல்களை எளிதாக கபளீகரம் செய்து தனி மனிதனின் அந்தரங்கம் வரை ஊடுருவி வேவுபார்க்கும் அச்சுறுத்தல்களையும் இணைத்தே பார்க்க வேண்டியுள்ளது.

## என்ன செய்ய வேண்டும்...

."இந்தியாவில் உள்ள தொழில்நுட்ப நிறுவனங்கள் மனிதக் குறியீட்டாளர்களை முற்றிலும் செயற்கை நுண்ணறிவுடன் மாற்றும் என்பது தற்போது பாய்ச்சல் நிலையில் வருவதற்கு சாத்தியமில்லை. சில நிறுவனங்களால் குறியீட்டு பணிகளை ஆட்டோமேஷன் ஆக்க முடியும், ஆனால் அதற்கும் தொடக்கத்தில் எழும் சிக்கலைத் தீர்ப்பது, வழிமுறை வடிவமைப்பு மற்றும் வணிகத் தேவைகளைப் புரிந்து கொள்வதற்கு மனிதக் குறியீடுகள் தேவை "என்று சைபர்மீடியா ஆராய்ச்சியின் தலைவர் ஜார்ஜ் கூறுகிறார்.

அவரது கணிப்பு சரியென்றாலும் அடிப்படையில், செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பங்கள் எதிர்காலத்தில் மனிதனை உழைப்பிலிருந்து அந்நியப்படுத்தும் செயல் திட்டத்தோடு நெருங்கி வருவதால், இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் உட்பட பலவும் AI வீசும் வலையிலிருந்து தப்பிப்பது எளிதல்ல. இன்றைய நிலையில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடும் பரவலும் தவிர்க்க முடியாததாக மாறி வருகிறது என்பதை மறுத்து விட முடியாது.

அடுத்த 20 ஆண்டுகளில் இந்தியாவில் பல துறைகளிலும் செயற்கை நுண்ணறிவும் ஆட்டோமேஷனும் வரம்பின்றி வலுவாக காலூன்றும் போது மனிதத் தொழிலாளர் களை பெருமளவில் மாற்றும். வேலையிழப்பால், வேலையின்மையால் சமூகப் பொருளாதா ரங்களின் நிலை கவலைக்குரியதாக மாறும்.இத்தகைய பின்னைடைவு

களும், பெருகும் வேலை இல்லாத இளைஞர் பட்டாளமும் வெடிக்கக் காத்திருக்கும் ஒரு எரிமலை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு உருவாகும் தாக்கங்களை எதிர் கொள்ள இந்திய சமூகமும் தொழிலாளர் இயக்கங்களும் தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. அது ஏற்படத்தப் போகும் தாக்கங்களைக் குறைவாக மதிப்பீட்டு மௌனித்து இருந்தால் இந்த புரட்சிகரத் தொழில்நுட்பத்தை சுயமாகக் கட்டுப்படுத்த நினைக்கும் மாபெரும் இந்திய நிறுவனங்கள் மற்றும் பன்னாட்டு தொழில்நுட்ப நிறுவனங்கள் கொள்ளை இலாப வெறியில் கடிவாளம் இல்லாத குதிரை போல தறிகெட்டு ஓடி உழைப்பாளி மக்களை வீதியில் வீசி எறிந்து விடும்.

முதலாளிகள் தற்போது தொழிலாளர்களைப் பணியமர்த்துவதற்கும், கண்காணிக்கவும், மதிப்பீடு செய்யவும், ஒழுக்கப்படுத்தவும், பணிநீக்கம் செய்யவும் AI-ன் மேம்பட்ட தொழில்நுட்பங்களை தொழிலாளர்களின் ஒப்புதல் இல்லாமல் அதிகளவில் பயன்படுத்தத் தொடங்கி உள்ளனர். இந்த தன்னிச்சையானப் போக்குகள் முதலாளி- தொழிலாளி உறவை சீர்குலைத்து விடும். இது ஒரு தொடக்கம் தான்.இந்த நிலையில் வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்றில்லாமல் செயற்கை நுண்ணறிவும் மனிதர்களும் இணக்கமாக இணைந்து செயல்படும் சூழ்நிலையை தொழிலதிபர் களும் அரசும் உருவாக்க வேண்டும். தொழிற்சங்கங்களுடன், சமூக ஆர்வலர்களுடன் ,ஜனநாயக வாதிகளுடன் அவர்கள் ஒளிவுமறைவின்றி உரையாடி முடிவு எடுக்க வேண்டும்.

முதலாளிகளால் செயற்கை நுண்ணறிவு முறைகளை அறிமுகப்படுத்துவது மனித உழைப்பின் இடப்பெயர்வுக்கு வழிவகுக்கும் என்பதால் மாற்று வேலை வாய்ப்பை வழங்குவது முதலாளிகளின் கடமை என உணர வேண்டும். வெளிப்படைத்தன்மை வேண்டும்.

கூட்டு பேரம் பேசுவதற்கான உரிமை என்பது தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல, அமைப்பின் முன்னேற்றத்திற்கும் அவசியம் என்பதை உணர்ந்து தொழிற்சங்கங் களை அங்கீகரித்து, உரையாடல் நடத்தும் போது முதலாளி-ஊழியர் உறவுகளில் புரட்சிகர மாற்றங்கள் ஏற்படும். தொழிலாளர்கள் மற்றும் மனித உரிமைகள் மதிக்கப்படுவதை அது உறுதி செய்யும்.

மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் மற்றும் பிற அமைச்சகங்கள் நாட்டின் பணியாளர்களின் திறன்களை மேம்படுத்த கல்வி மற்றும் தேவையான பயிற்சி அளிக்க முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

மூலதனமும்,கருவிகளும் தொழிலாளியின் உழைப்பு சக்தியும் ஒன்றிணைந்தால் மட்டுமே வளர்ச்சி சாத்தியம் என்கிற அடிப்படை புரிதலோடு முதலாளிகள் செயற்கை நுண்ணறிவை அணுக வேண்டும். அதற்கு முத்தரப்பும் ஒன்றிணைந்து செயலாற்று கையில் பல பிரச்சனைகள் இலகுவாக பதட்டமின்றி தொழில் அமைதி சீர்குலையாமல் தீர்வு காண முடியும் .

எனவே தொழிலாளர்களைப் பாதுகாக்கவும், தொழிலாளர் நலன்களை உறுதிப்படுத்தவும், உரிமைகளை நிலைநாட்டவும், செயற்கை நுண்ணறிவு ஒழுங்குமுறை அவசியம். கட்டுப்பாடின்றி, ஒழுங்கு முறையின்றி தன்னிச்சையான போக்கில் AI நுழைய அனுமதித்தால் கரும்புத் தோட்டத்துக்குள் யானை புகுந்தது போல் ஆகிவிடும் என்பதை ஆளும் வர்க்கங்கள் உணர்ந்து செயலாற்ற வேண்டும்.

உற்பத்தி மற்றும் சேவைகளில் AI மற்றும் ரோபாட்டிக்ஸ் ஆட்டோமேஷன் தாக்கத்தை சமாளிக்க தொழிலாளர் நலக் கொள்கையை வடிவமைத்து, தேவைக்கு ஏற்ப தொழிலாளர் நலச் சட்டங்களைப் புதுப்பித்து. பாதுகாப்பு அரண் அமைக்க வேண்டும். தொழிலாளர்களுக்கு ஏற்படும் இழப்புகளை ஈடு செய்யவும், தொழில்நுட்ப அடிப்படையில் தன்னிச்சையாக பணிநீக்கம் செய்யப்படுவதிலிருந்து

ஊழியர்களைப் பாதுகாப்பதற்கான விதிகளை அறிமுகப்படுத்தவும், முதலாளி மீது கட்டுப்பாடு விதிக்கவும், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் பின்னணியில் வளர்ந்து வரும் உழைப்பின் நவீன தன்மையை வேலைவாய்ப்பு ஒப்பந்தங்களில் பிரதிபலிக்கவும், தொழிலாளர் இயக்கங்கள் அரசுக்கு அழுத்தம் தர வேண்டும். செயற்கை நுண்ணறிவின் வடிவமைப்பு, மேம்பாடு மற்றும் செயல்படுத்தும் நிர்வாகக் குழுவில் தொழிலாளர் இயக்கப் பிரதிநிதிகளின் பங்கேற்பு உறுதி செய்யப்பட வேண்டும்.

ஆனால் இதுவரையிலும் செயற்கை நுண்ணறிவை ஒழுங்குபடுத்துவதில் இந்தியாவின் நிலைப்பாடு கருத்தளவில் பிரதிபலித்த அளவுக்கு நடைமுறையில் நகரவில்லை. 'நாடாளுமன்றத்தில் கொண்டு வந்த டிஜிட்டல் தனிநபர் பாதுகாப்பு மசோதா மக்களை தீங்கிலிருந்து பாதுகாக்கும் என்றதோடு நின்று விட்டது. செயற்கை நுண்ணறிவை ஒழுங்குபடுத்துவது பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்பது பலரும் முன்வைக்கிற கருத்தாக இருக்கிறது'.

தொழிலாளர் இயக்கங்களும் செயற்கை நுண்ணறிவின் தாக்கங்கள் பற்றி, பெரிய அளவில் கிளை மட்டம் வரை கருத்து பரிமாற்றங்களை கொண்டு சென்றதாகத் தெரியவில்லை. மத்திய சங்கங்கள் மாநில, அளவிலோ, தேசிய அளவிலோ, சிறப்பு மாநாடுகள் நடத்தி விளக்கி விழிப்புணர்வு ஏற்படுத்தியதாகவும் தெரியவில்லை. ஒரு மெத்தனப் போக்கு நிலவுவதை அவதானிக்க முடிகிறது.

இந்தநிலையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் வேலை நிலைமைகளின் தேவைகளுக்கு ஏற்ப தொழிலாளர்களுக்கு புதிய பயிற்சி, மறு பயிற்சி, கல்வி, அளிக்கப்பட்டு அவர்களது தரத்தை மேம்படுத்தி AIக்குள் பொறுத்த வேண்டிய அரசின் கடமையை தொழிலாளர் இயக்கங்கங்கள் வலியுறுத்த வேண்டும். ஊழியர்கள் - முதலாளிகள் இருவரின் கடமைகளையும், உரிமைகளையும் சலுகைகளையும் தெளிவாக வரையறுக்க கொள்கை வகுக்க வேண்டும்.

மேற்குலக நாடுகளிலும் கூட தொழிலாளர் இயக்கங்கங்கள் செயற்கை நுண்ணறிவு பற்றிய போதுமான கவனம் செலுத்தவில்லை என்பதைத்தான் யு.என்.ஐ யூரோப்பாவின் பிர்டேடெட்டன், 32 நாடுகளில் நடத்தப்பட்ட ஒரு கணக்கெடுப்பின் தரவுகள் கூறுகின்றன.

அந்த தரவின் படி 20 சதவீத தொழிற்சங்கங்கள் மட்டுமே தற்போது செயற்கை நுண்ணறிவு சம்பந்தமாக நேரடியாக பேச்சு வார்த்தை நடத்தி, கூட்டு பேரம் பேசும் ஒப்பந்தங்களைப் போட்டுள்ளது என்றும், 40 சதவீதத்திற்கும் அதிகமான தொழிற் சங்கங்கள் தற்போது பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் குறிப்பிடுகிறது. இவைகளில் நார்வே மற்றும் ஜெர்மன் நாடுகள் தொழிலாளர் இயக்கங்களோடு கைகுலுக்கிக் கொண்டுள்ளது என்பது ஒரு நல்ல அறிகுறியின் தொடக்கமாகும். AI மற்றும் ஆட்டோமேஷன் சம்பந்தமான முடிவுகளில் தொழிற் சங்கத்தின் உரிமையை அந்நாடுகள் அங்கீகரித்து. தொழிலாளர் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஆலோசனை பெற அந்நாடுகள் தயங்கவில்லை.ஐரோப்பிய வில் சில நாடுகள் ,அமெரிக்கா மற்றும் கனடா ஆகியவை AI சட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளன. பிரிட்டனிலும் AI தொடர்பான சட்டங்கள் எதுவும் தற்போது இல்லையென்றாலும் அதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளது. இந்திய தொழிலாளர் இயக்கங்கள் வளர்ந்த நாடுகளிலுள்ள தொழிலாளர் இயக்கங்களை பின்தொடர்ந்து சங்க உரிமைகளை பெற்றால் தான் மனித உழைப்பை முற்றாக ஒழிக்க வரும் செயற்கை நுண்ணறிவு யுகத்தில் உழைக்கும் மக்களுக்கான விடுதலைக் கீதத்தைக் கேட்க முடியும்.

செயற்கை நுண்ணறிவின் தாக்கம் மறுக்க முடியாத யதார்த்தமாக மாறியுள்ள இன்றைய உலகமயமாக்கல் சகாப்தத்தில், தொழில்நுட்ப முன்னேற்றங்களின் தாக்கத்திலிருந்து எந்த நாடும்

தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்ள முடியாது என்பதைத் தொழிலாளர் இயக்கங்கள் நன்கு அறிந்தே உள்ளன. கடந்த காலங்களில் வளர்ந்து வந்த உயர் தொழில் நுட்பங்கள், தொழிற்துறையில் ஏற்படுத்திய மாற்றங்களை ஒற்றுமையுடனும், தனது வலிமைமிக்க ஆற்றலுடனும், கூட்டுப்பேர சக்தியினாலும் தன்னையும், சமூக வாழ்வியலையும் தற்காத்துக் கொண்டு வளர்ந்ததைப் போன்றே செயற்கை நுண்ணறிவு மற்றும் ஆட்டோமேஷனையும் தொழிலாளி வர்க்கம் எதிர் கொள்ளும் என்கிற நம்பிக்கை இருக்கிறது.

## கட்டுரைக்கு உதவியவைகள்


AI எனும் ஏழாம் அறிவு - ஹரிஹரசுதன் .

சா ட்ஜிபிடி சரிதம் - சைபர் சிம்மன்.

The Impact of AI and technology on indian labour laws - k.suriya manasa.

The Growth of AI and its impact on Indian Labour Laws, Pranjal SWIPE BLOG( Aug 1, 2023)

[3] Manasvi Khamesra, The impact of artificial intelligence on labour economies, TIMES OF INDIA (Jul 21, 2023)

AFLCIO.ORG /issues/future-work/ai

AI wiil hit jobs in Indian it sector.Indiatoday.in

Business insider.com

Worlde Economic Forum.org

International journal of novel research and development 2023 IJNRD | தொகுதி 8, வெளியீடு 11 நவம்பர் 2023 | ISSN: 2456-4184 | IJNRD.ORG


## ஆசிரியர் குறிப்பு :


எழுத்தாளர். மு.சங்கையா, இந்திய அரசின் தொலைத்தொடர்பு நிறுவனத்தில் (BSNL) அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். தேசிய தொலைத்தொடர்பு ஊழியர்கள் சம்மேளனத்திலும் (NFTE - BSNL), அனைத்திந்திய தொலைத்தொடர்பு அதிகாரிகள் சங்கத்திலும் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர். மனித உரிமை ஆர்வலர். இவரது முதல் படைப்பான "லண்டன் - ஒரு பழைய சாம்ராஜ்யத்தின் அழகிய தலைநகரம்" என்ற நூலுக்கு, தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை, 2013ஆம் ஆண்டின் சிறந்த பயண இலக்கிய நூலுக்கான விருதினை வழங்கியது.

உலகமயம் இந்தியாவில் ஏற்படுத்தப் போகும் தாக்கம் பற்றிய "பன்னாட்டுச் சந்தையில் பாரத மாதா", சாதியைப் பற்றிய "சாதி என்னும் பெரும் தொற்று - தொடரும் விவாதங்கள்", இந்திய வலதுசாரிகளைப் பற்றிய "காவி என்பது நிறமல்ல" போன்ற இவரது நூல்கள் பெரிதும் பேசப்பட்டவையாகும். இவரது சொந்த ஊர், தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டத்தில், துறையூர் என்ற சிற்றூர் (கிராமம்). வசிப்பது தமிழ் வளர்த்த மாமதுரையில்.

# தமிழரின் திருமணங்களும், சட்டத் தீர்ப்புகளும் தீர்வுகளும்

எழுத்தாளர் **ஞான. வள்ளுவன்**



**கட்டுரைச் சுருக்கம்:**

*இந்திய நாடு பல்வேறு இனங்கள், மொழிகள், சமயங்கள், கலாச்சாரங்கள், பழக்க வழக்கங்கள், பண்பாடுகள் என்று பன்முகத்தன்மையோடு ஒரு துணைக்கண்டம் என்ற அளவில் இருந்து வருகிறது. இதில் பெரும்பான்மையான மக்களைக் கொண்ட இந்து மதம் எனப்படும் மத அமைப்புக்குள்ளேயே பல வகையான சமயப் பிரிவுகள், சாதிகள், அவற்றிற்கென தனித்தனியான சடங்குகள், சம்பிரதாயங்கள் உள்ள நிலையில், பன்முகமான அவற்றையெல்லாம் புறக்கணிக்கும் வகையிலும், ஸநாதன கோட்பாடுகளைக் கொண்ட ஆரிய பண்பாட்டினை மட்டுமே நாட்டில் நிலைநிறுத்தும் நோக்கிலும், அதன் குறியீடான திருமணச் சடங்கு முறை தான் இந்து மதத்திற்கான பொதுவானது என்று உச்சநீதிமன்றம் அண்மையில் அறிவித்துள்ளது ஏற்புடையதன்று என்பதையும், நாட்டு மக்களிடையே திருமணச் சடங்குகள் என்பது நீதிமன்றம் வரையறுக்கும் குறிப்பிட்டவர்களின் நடைமுறைக்கு மாறாகப் பல்வறு வகைகளில் உள்ளன என்பதையும், குறிப்பாகத் தமிழர்களின் வரலாற்றில் திருமண நிகழ்வுகள் குறித்தும் அதில் நிகழ்ந்த மாற்றங்கள் குறித்தும், நடைமுறையில் உள்ள சட்டங்கள் மற்றும் நீதிமன்றத் தீர்ப்புகள் குறித்தும், எவ்வகைத் திருமணம் காலத்திற்கு ஏற்றது என்பதையும் இக்கட்டுரை விளக்குகிறது.*

## கட்டுரைக்கான பின்புலம்

இந்திய ஒன்றியத்தின் உச்சநீதி மன்றம் சில நாட்கட்கு முன்னர் "சடங்குகள் இல்லாத இந்து திருமணங்கள் செல்லாது" என்று அதிரடியாக ஒரு தீர்ப்பினை அளித்துள்ளது. அத்தீர்ப்பில் இந்து மதத் திருமணச் சடங்குகளின்படியாக நடத்தப்படும் 'சப்தபதி" எனப்படும் தீக்குண்டத்தை ஏழு முறை வலம் வரும் சடங்குகள் நடக்காத திருமணம் செல்லத்தக்கதல்ல" என்றும் விளக்கம் கூறியுள்ளது. பலதரப்பட்ட கலாச்சாரங்கள் பழக்க வழக்கங்கள் கொண்ட இந்திய ஒன்றியத்தில் இதுபோன்ற தீர்ப்புகள் ஏற்புடையதா? என்று எண்ணுகின்றபோது இத்தீர்ப்பிற்கு ஆட்படாதவகையில் சடங்குகள் சம்பிரதாயங்கள் இல்லாத சுயமரியாதைத் திருமணங்கள் செல்லும் என்று இதே உச்சநீதி மன்றம் ஏற்றுள்ள வகையில் இந்து திருமணச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்து நாட்டிற்கே வழிகாட்டியாக தமிழகம் அமைந்துள்ளது என்பதையும், இன்றைய உச்சநீதி மன்றத் தீர்ப்பு அரசியல் அமைப்புச் சட்டத்தின் உரிமைகட்கு எதிரானது என்பதையும் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி முதல் நபராக எதிர்த்து குரல் கொடுத்ததோடு ஒன்றிய அரசு இத்தீர்ப்பின் மீது சீராய்வு மனு அளிக்க வேண்டும் என்றும் கோரியுள்ளார். ( விடுதலை 6-5-2024)

இந்துத்துவா கொள்கைகளே நிலை நிறுத்தப்பட வேண்டும் என்ற நோக்கம் கொண்ட மதவாத

அமைப்பான ஆர்.எஸ்.எஸ்.இன் பின்புலத்தில் இயங்கி வரும் பாரதிய ஜனதா கட்சி ஆட்சி புரியும் நாட்டில், சட்டம் தெரிந்தவர்களும், சமூகநீதியின்பால் அக்கறை கொண்டவர்களும் எழுப்பும் குரலுக்கு மதிப்பிருக்குமா என்ற ஐயம் ஏற்படும் இந்நேரத்தில், இந்நாட்டின் மூத்த குடிகளாக விளங்கும் தமிழர்களுக்கு என்று தனித்துவமான வரலாறும், பண்பாடும், கலாச்சாரமும் உள்ளது என்பதையும், அதன் ஓர் அங்கமாக அவர்களின் திருமணமுறை என்பது பண்டை நாட்களில் எவ்வாறாக இருந்தது என்பதையும், அஃது காலப்போக்கில் எப்படியெல்லாம் ஆரிய சாஸ்திர சம்பிரதாயங்களுக்குட்பட்டு சீரழிந்து போனது என்பதையும், அடிமையாகிப்போன தமிழர்தம் வாழ்வில் மானமும் அறிவும் பெறவேண்டும் என்பதற்காக பாடுபட்ட தந்தை பெரியாரின் கடுமையான முயற்சியால், அவரது சுயமரியாதை இயக்கம் கடந்த நூறாண்டு வரலாற்றில் பெற்றெடுத்த 'சுயமரியாதைத் திருமணம்' பேரறிஞர் அண்ணாவின் ஆட்சியில் சட்டபூர்வமாக ஆக்கப்பட்டு சாதி ஒழிப்புக்கும், மனித சமத்துவத்துக்கும் எடுத்துக் காட்டாக விளங்கித் தமிழகத்தை தனித்துவம் கண்ட மாநிலமாகக் காட்டுவதாகவும் அமைந்துள்ளது என்பதையும், உச்சநீதி மன்றம் அளித்துள்ள தீர்ப்பால் ஏற்படும் சங்கடங்களைத் தீர்க்க ஒன்றிய அரசு எத்தகைய முடிவினை எடுக்க வேண்டும் என்பதையும் தமிழர்களின் திருமணம் குறித்த வரலாற்றுச் சான்றுகளோடும் நடைமுறையில் உள்ள சட்டங்களோடும் ஆராய்ந்து முடிவு காண முயல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பண்டைத் தமிழரின் திருமண முறை

இன்றைக்கு இந்தியா என்று அழைக்கப்படும் ஒன்றியம் வடக்கிலும் தெற்கிலுமாக ஐம்பத்தாறு சமஸ்தானங்களாக பிரிந்து கிடந்து, ஆங்கிலேயர் வருகைக்குப்பின் ஒருங்கிணைக்கப்பட்டு 'இந்தியா' என அழைக்கப்பட்டது. இந்நாட்டில், பல மொழிகளைப் பேசும் பல இன மக்கள் தங்களுக்கு உரிய கலாச்சாரம், பண்பாடு பழக்க வழக்கங்களோடு வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் பெரும்பான்மையானோர் சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணபத்தியம், சமணம், பௌத்தம், சீக்கியம் என்று பல சமய நெறிகளோடும், நம்பிக்கைகளோடும் இருந்தபோது, ஆங்கில ஆட்சியாளர்கட்குப் பல குழப்பங்கள் ஏற்பட்டதால், அயல் மதங்களைத் தவிர்த்து, இங்கிருந்த அனைத்து சமயப்பிரிவுகளையும் ஒருங்கிணைத்து அதற்குப் பொதுவான பெயராக 'இந்து மதம்' என்ற பெயரை வைத்தார்கள். இப்படியாக சமீபத்தில் தோன்றிய இந்து மதத்தில் உள்ள பல சமய நெறிகளைக் கடைபிடிக்கும் மக்களிடையே திருமண சடங்குகள், சம்பிரதாயங்கள் ஒன்றுக்கொன்று மாறுபட்டு காணப்படுகின்றன. குறிப்பாக தமிழர்களாகிய நமக்குரிய திருமண நடைமுறை பண்டை காலத்தில் எவ்வாறிருந்தது என்பதை அறியும்போதுதான் அது காலப்போக்கில் எத்தகைய மாற்றங்களுக்கு எதனால் உட்பட்டது என்பதை அறிய முடியும். அதனை சுருக்கமாகக் காண்போம்.

பழந்தமிழர் தம் வாழ்வில் மணவாழ்க்கையை பெரிதும் பாராட்டியும் போற்றியும் வந்தனர். 'காதல்'' ''கற்பு'' ''ஒருவனுக்கு ஒருத்தி' என்ற நிலைகள் தமிழர்களின் இல்லற வாழ்க்கையின் முக்கிய அம்சங்களாகத் திகழ்ந்தன. இத்தகைய பண்பாட்டுத் தன்மையை வலியுறுத்தும் விதமாக ஈராயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்த திருவள்ளுவரும் தன் குறளில் 'இல்லறமல்லது நல்லறமன்று' என்று வாழ்க்கைத் துணை நலன் குறித்து எடுத்தியம்பியுள்ளார்.

இத்தகைய இல்லற வாழ்க்கையைத் துவக்குவதற்கு அந்நாளின் வேறுபாடுகளோ, ஏற்றத்தாழ்வுகளோ கொள்ளாமல் அனைவருக்கும் பொதுவானதாகக் காதலை வைத்திருந்தனர். தொழில்ரீதியாக பல குலப் பிரிவுகள் இருந்தாலும் காதலிலும், கல்வி கற்பதிலும், சமூக மதிப்பிலும் அனைவரும் சமமாகவே அன்றைக்குக் கருதப்பட்டனர். தலைவனும் தலைவியும் கண்டதும் காதல் கொண்ட நிலையில், ஒருவரை ஒருவர் யாரென்று அறிந்து கொள்ளாமலேயே அக்காதலில் ஈடுபட்டனர். என்பதைப் படம் பிடித்துக்

காட்டும் செம்புலப் பெயநீரார் என்பார் எழுதிய இந்தக் குறுந்தொகைப் பாடல் (பாடல் 40) வரிகளைக் கண்டால் விளங்கும்.

**யாயும் ஞாயும் யாரா கியரோ?**
**எந்தையு நுந்தையு மெம்முறைக் கேளிர்**
**யானு நீயு மெவ்வழி யறிதும்**
**செம்புலப் பெயனீர் போல**
**அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே'**

பொருள்:- என் தாயும் உன் தாயும் என்ன உறவினர் என்று அறிந்து கொள்ளவில்லை. என் தந்தையும் உன் தந்தையும் எவ்வகையில் உறவினர்கள் என்பதும் தெரியாது. நானும் நீயும் எந்த வழி முறையில் வந்தவர்கள் என்பதும் எவ்விடத்தினர் என்பதும் தெரியாது. ஆனால் செம்மண் நிலத்தில் பெய்த மழை நீரும் சிவப்பாக மாறுவதைப் போல வேறு வேறிடத்திற்குரிய நாம் உறவில்லாமல் வேறுபட்டிருந்தாலும் அன்பு கொண்ட நம்முடைய நெஞ்சங்கள் ஒன்று கலந்தனவே! (1)

இந்த வகையில் எந்த ஏற்றத் தாழ்வுகட்கும் இடமின்றி காதல் கொண்ட தமிழர்களிடையே நடைபெற்ற திருமணம் எவ்வாறு நடத்தப்பட்டது? அகநானூற்றின் ஒரு பாடல் (86) அதனைப் படம் பிடித்துக் காட்டுவதிலிருந்து அறியலாம்.

**உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை**
**பெருஞ்சோற்று அமலை நிற்ப நிரைகால்**
**தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி**
**மனைவிளக் குறுத்து மாலை தொடரிக்**
**களைஇருள் அகன்ற கவின்பெறு காலைக்**

**கோள்கால் நீங்கிய கொடுவெண் திங்கள்**
**கேடில் விழுப்புகழ் நாள்தலை வந்தென**
**உச்சிக் குடத்தர் புத்தகன் மண்டையர்**
**பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்**
**முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்**

**புதல்வற் பயந்த திதலை! அவ்வயிற்று**
**வால்இழை மகளிர் நால்வர் கூடிக்**
**கற்பினின் வழாஅ நற்பல உதவிப்**
**பெற்றோற் பெட்கும் துணையை ஆக-என**
**நீரோடு சொரிந்த ஈர்இதழ் அலரி**
**வல்இருங் கதுப்பின் நெல்லொடு தயங்க**
**வதுவை நன்மணம் கழிந்த பின்றைக்**
**கல்லென சும்மையர் ஞெரேரெனப் புகுதந்து**
**பேர்இற் கிழத்தி ஆக எனத் தமர்தர**
**ஓர்இற் கூடிய உடன்புணர் கங்குல்.......**

பொருள்:- உழுந்தினை நிறைகூட்டிச் சமைத்த குழைவாக வெந்த உளுத்தம்பருப்புப் பொங்கலின் பெரிய உருண்டைகளைக் கூடியிருந்தவர் உண்பது இடையறாது நிகழ்ந்து கொண்டேயிருந்தது. வரிசையாகிய கால்களிட்டு அமைத்த பெரிய பந்தரும் விளங்கிற்று. அதன்கீழ்த் தரையிலே மணலைக் கொணர்ந்து பரப்பி இருந்தனர். மனைவிளக்கினை ஒருபால் ஏற்றி வைத்திருந்தனர். எங்கும் மாலைகளைத் தொங்கவிட்டிருந்தனர்.

தீய கோள்களின் தொடர்பு நீங்கிய வளைந்த வெண்மையான சந்திரனைக் கேடற்ற சிறந்த புகழையுடைய உரோகணி என்னும் நாள் வந்து அடைந்த நல்ல நாள் அது. அந்நாளிலே மிக்கிருந்த இருளும் நீங்கி எங்கும் அழகு மலரும் புலர்காலை வேளையும் வந்தது. உச்சியிலே நிறைநீர்க் குடத்தினை உடையவராகவும், கைகளிலே புதிய மண் கலயங்களை உடையவருமாக மணத்தினைச் செய்து வைக்கும் ஆரவாரமுடைய மங்கல மகளிர்கள் கூடினர். முன்னே தருவனவும் பின்னே தருவனவும் அவர்கள் முறைமுறையாகத் தந்துகொண்டிருந்தனர்.

மகனைப் பெற்றெடுத்த தேமல் பொருந்திய அழகிய வயிற்றினையுடைய தூய உடையணிந்த மகளிர்கள் நால்வர் கூடி நின்றனர். "கற்பினின்றும் வழுவாது நன்றாகிய பல வகைகளினும் உதவியாக நின்று நின்னை மனைவியாகப் பெற்ற நின் மணவாளனைப் பேணிக் காக்கும் துணைவியாக நீ ஆவாயாக!" எனக்கூறி அவளை வாழ்த்தினர். நீரோடு குளிர்ந்த இதழ்களையுடைய பூக்களையும் நெல்வினையும் கலந்து அவள் தலையிலே தூவினர். மிக்க கரிய அவள் கூந்தலிலே அவை ஒருங்கே சேர்ந்து கிடந்தன. அங்ஙனம் மங்கல நீராட்டியபின் வதுவை மணமும் நிகழ்ந்து முடிந்தது. அதன் பின்னர்

சுற்றத்தார் எல்லாரும் கல்லென்ற ஒலியினராய் விரைவோடும் வந்தனர். ''பெருமைக்கு உரிய இல்லக்கிழத்தி ஆவாய்'' என அவளை எனக்கு அளித்தனர். அதனையடுத்து ஒரு தனி அறையிலே நாங்கள் உடன்கூடிய புணர்ச்சி முதல் இரவு வேளையும் வந்தது அங்கே...... (2)

நல்லாவூர் கிழார் என்ற புலவர் மருதத்திணையில் எழுதிய இப்பாடல் தனது மண நிகழ்வினையும், அதனைத் தொடர்ந்து நிகழ்ந்த முதலிரவினையும் நினைத்து மகிழ்ந்த தலைவன், அதனைத் தோழியிடம் கூறுவது போன்றமைக்கப்பட்ட இப்பாடல் அன்றைய நாளில் தமிழர்தம் வாழ்வில் நடைபெற்ற எளிமையான மணமுறையினை அழகுற காட்டுகிறது.

விற்றூற்று மூதெயினனார் என்பார் எழுதிய மருதத்திணையின் இன்னொரு அகநானூற்றுப் பாடல் (136) அன்றைய மற்றொரு திருமண நிகழ்வினைப் படம் பிடித்துக் காட்டுகிறது. தன் மணநாளினை தலைவன் நினைப்பதான அப்பாடலின் சில வரிகளைக் காண்போம்.

**"மைப்பு அறப் புழுக்கின் நெய்க்கனி வெண்சோறு**
**வரையா வண்மையொடு புரையோப் பேணிப்**
**புள்ளுப் புணர்ந்து இனிய ஆகத் தெள்ஒளி**
**அம் கண் இரு விசும்பு விளங்கத் திங்கள்**
**சகடம் மண்டிய துகள் தீர் கூட்டத்துக்**
**கடிநகர் புனைந்து கடவுள் பேணிப்**
**படுமண முழவொடு பரூஉப்பணை இமிழ**
**வதுவை மண்ணிய மகளிர் விதுப்புற்றுப்**
**பூக்கணும் இமையார் நோக்குபு மறைய**
**மென்பூ வாகைப் புன்புறக் கவட்டிலை**
**பழங்கன்று கறித் பயம்பு அமல் அறுகைத்**
**தழங்கு குரல் வானின் தலைப்பெயற்கு ஈன்ற**
**மண்ணு மணி அன்ன மா இதழ்ப் பாவைத்**
**தண்நறு முகையொடு வெந்நூல் சூட்டித்**
**து உடைப் பொலிந்து மேவரத் துவன்றி**
**மழை பட்டன்ன மணன் மலி பந்தர்**
**இழை அணி சிறப்பின் பெயர் வியர்ப்பு**
**ஆற்றித் தமர் நமக்கு ஈத்த தலை நாள்**
**இரவின்......."**

பொருள்- நல்ல முறையில் சிறப்பாகச் செய்யப்பட்ட நெய்யுடன் கூடிய வெள்ளைச்சோற்றை (இதை புலால் கலந்த சோறு என்றும் கூறுவர்) விருந்தோம்பல் பண்புடன் உற்றத்தாருக்கும் சான்றோர்கட்கும் கொடுத்தனர். மணமேடை அலங்கரிக்கப்பட்டு இருந்தது. மணநிகழ்வுக்காக உள்ள முரசுடன் பெரிய முரசும் ஒலித்தது. திருமணத்திற்கான நல்ல நேரத்தில் கடவுளை வணங்கி நீராட்டி அலங்கரித்துத் தங்களால் அழைத்து வரப்பட்டத் தலைவிக்கு வாகை மரத்தின் இலைகளும் மலர்களும் அருகம்புல்லும் சேர்த்து வெள்ளை நூலில் தொடுக்கப்பட்ட மாலையை அவள் கழுத்தில் அணிவித்து அணிகலன்களால் நிறைந்த அவள் முகத்தில் வடிந்த வியர்வையைத் துடைத்த குடும்பப் பெண்கள் அவளை இமைக்காமல் நோக்கியிருக்க அவள் குடும்பத்தார் அவளை தலைவனிடம் அளித்தனர்................." (3)

இப்பாடல்களின் வாயிலாக அன்றைய திருமணங்கள் உற்றார், உறவினர்கள், ஊர் மக்கள் முன்னிலையில் இறைச்சியோடு கூடிய நல்விருந்தோடு இன்றைக்குள்ள எந்த சமய சடங்குகளும் இன்றி எளிமையாக நடைபெற்றிருந்தன என்பதையும் மணவாழ்வுக்கும், மகப்பேறுக்கும் உட்பட்டிருந்த மூத்த மகளிரே திருமணத்தை நடத்தி வைத்தனர் என்பதையும் அறியப்படுகிறது.

மேலும் சங்க காலத் திருமணமுறைகளில் தாலி அணிவித்தல் சடங்கு நடைபெற்றதாக செய்திகள் ஏதுமில்லை. அதுபோல அகப்பாடல்கள் எதிலும் திருமண விழாவைப் புரோகிதன் என்பவன் இடையிலிருந்து நடத்தினான் என்றோ, அந்நிகழ்வில் அக்னி வளர்க்கப்பட்டு மணமக்கள் அதனை வலம் வருதல் போன்ற சடங்குகள் மேற்கொள்ளப்பட்டன என்றோ கூறப்படவில்லை.

ஏனெனில் தமிழர்களின் வழிபாட்டில் அக்கினி எனப்படும் நெருப்புக்கு முக்கியத்துவம் தரப்படவில்லை. இதன் காரணமாக அவர்களின் திருமண நிகழ்வுகளில் நெருப்புக்கு முக்கியத்துவம்

அந்நாளில் அளிக்கப்படவில்லை என்பது அவர்தம் வழிபாட்டு முறைகளை அறிந்து கொண்டால் இஃது புலப்படும். அது குறித்துக் காண்போம்.

## தமிழரின் இறைவழிபாடும் முறைகளும்

தமிழர்களின் இறைவழிபாடு பண்டை காலந்தொட்டு இயற்கையை வழிபடலும், மூதாதையர்களை வழிபடலுமேயாகும். இதனைப்பல சங்கப் பாடல்கள் எடுத்தியம்புகின்றன. அதுபோல தன் குழுத் தலைவனோ அல்லது குடும்பத்து மூத்தவனோ போரில் வீர மரணமடைந்தபின் அவர்களைப் புதைத்த இடத்தில் அடையாளமாக கல் நட்டு அதனை வணங்கினர். இவ்வகை 'நடுக்கல் வணக்கம்' என்று அழைக்கப்பட்ட மூதாதையர் வழிபாடுதான் இன்றைக்கும் குலதெய்வ வழிபாடு என்று கடைபிடிக்கப் படுகிறது. புறநானூற்றில் மாங்குடி மருதனார் எழுதிய இச்சங்கப்பாடல் அதனை விளக்கும்.

**அடலருந்துப்பின்..............**
**குருந்தே முல்லை யென்று**
**இந்நான் கல்லது பூவும் இல்லை**
**கருங்கால் வரகே இருங்கதிர்த் தினையே**
**சிறுகொடிக் கொள்ளே பொறிகிளர் அவரையொடு**
**இந்நான் கல்லது உணவும் இல்லை**
**துடியன் பாணன் பறையன் கடம்பன் என்று**
**இன்நான் கல்லது குடியும் இல்லை**
**ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி**
**ஒளிறுஏந்து மருப்பின் களிறுஎறிந்து வீழ்ந்தெனக்**
**கல்லே பரவின் அல்லது**
**நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே.**
**(பாடல் 335)**

பொருள்- "குரவு, தளவு, குருந்தம், முல்லை என்ற நான்கு வகையன்றி வேறு சிறந்த வகைப் பூக்கள் கிடையாது. வரகு, தினை, கொள், அவரை என்பதன்றி வேறு சிறந்த உணவு இல்லை. துடியன், பாணன், பறையன், கடம்பன் என்ற நான்கு வகைக் குடிகள் அன்றி வேறு சிறந்த குடிகள் கிடையாது. அதுபோல பகைவர்களைத் தடுத்து, அவர்களின் யானைகளை கொன்று, தாமும் களத்தில் வீழ்ந்து இறந்த வீரரின் நடுகல்லை வழிபடுதலன்றி நெல்லையும், பூவையும் தூவி வழிபட வேறு கடவுளும் கிடையாது" (4)

இப்பாடல் மூலம் தமிழர்களின் வழிபாடு என்பது இறந்துபோன வீரர்களின் நினைவாக நடப்படும் கல்லை நெல்லையும், பூவையும் தூவி வழிபடுதலே என்று அறியப்படுகிறது. மேலும் அந்நாளில் நெருப்பை வழிபடுவது தமிழரின் பழக்கம் என்று எந்த ஆதாரமும் இல்லை. நெருப்பை வணங்குவது ஆரியரின் மரபு. அதனால்தான் தமிழர்களின் வாழ்வுக்கு முக்கியமான திருமணச் சடங்குகள் நெருப்பை சாட்சியாக வைத்து நடந்திடவில்லை. இந்நிலையில் தற்போதுள்ள ஆரிய மதத்திற்குரிய சடங்குகள் சம்பிரதாயங்கள் தமிழர்தம் திருமண முறையில் எப்போது எப்படிப் புகுந்தன? அதுகுறித்துக் காண்போம்.

## தமிழரின் திருமணத்தில் புகுந்த ஆரிய சடங்குகள்

தன் வாழ்க்கை முறைக்கும் இலக்கணம் வகுத்திட்ட தமிழனின் அன்றைய திருமணங்களில் ஆரியர்க்குரிய எந்த சடங்குகளும் கடைபிடிக்கப் படவில்லை. மாறாக ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழகம் புகுந்த ஆரிய பார்ப்பனர்கள், பிழைப்புக்காக வேண்டி வேதங்களையும், சாஸ்த்திரங்களையும், தங்களின் பழக்க வழக்கங்களையும் தமிழர்களிடை புகுத்தியதன் விளைவாகவும், அரசாண்ட மன்னர்கள் அவர்களுக்குத் துணை நின்றதாலும் மக்களும் அதனை நம்பி ஏற்றுக் கொண்டனர். இதன் காரணமாக அன்றாட வாழ்வில் நுனிதொட்டு அடிவரை ஆரிய சாஸ்திர சம்பிரதாயங்கள் மெல்ல மெல்ல நுழையலாயின.

தமிழன் வாழ்வில் பெரும்பாலும் காதல் திருமணங்கள் அல்லது பெற்றோர் பார்த்து முடிக்கும் திருமணங்கள் என்ற இரு பிரிவுகள் மட்டுமே இருந்து வந்த நிலையில் வடவரின் திருமண முறைகள் இவற்றிற்கு மாறாக எட்டு வகையாகக் கூறப்பட்டன. இது குறித்த ஒரு விளக்கத்தினைக் காண்போம்.

1. பிரம்ம விவாகம் — நல்லொழுக்கமான பிரம்மச்சாரியைத் தானாகவே அழைப்பித்து அவனை நூதன அஸ்திரங்களால் (புத்தாடைகளால்) அலங்கரித்து கன்னிகையையும் அப்படியே நூதன பூஷண அலங்காரம் (நகைகள் ஆடைகளால்) செய்வித்து அவ்வரனுக்கு அவனைத் தானம் செய்வது பிராம்மம் ஆகும். (பெண் வீட்டில் திருமணம் நடக்கும்.

2 தெய்வ விவாகம் — தனக்குப் புரோகிதனாக இருப்பவனுக்குத் தன் பெண்ணை அலங்கரித்துக் கொடுப்பது (பெண் வீட்டில் திருமணம் நடக்கும்)

3. ப்ரஜாபத்ய விவாகம் — ஒரு பிரம்மச்சாரியை அழைத்துப் பூசித்துத் தன் பெண்ணைத் தானம் பண்ணும்போது நீங்கள் இருவரும் தருமம் செய்யுங்கள் என்று கொடுப்பது பெண்ணின் தந்தை கேட்கும் பணத்தைக் கொடுத்து பெண்ணுக்கு நகைகள் வாங்கிப் போட்டுக் கல்யாணம் செய்து கொள்வது.

4. ஆர்ஷ விவாகம் — தான் செய்ய வேண்டிய யாகாதி கர்மங்களுக்காக வரனிடத்தில் ஒன்று அல்லது இரண்டு ரிஷபங்களையும் (காளை மாடு) பசுக்களையும் வாங்கிக்கொண்டு கல்யாணம் செய்து கொடுப்பது (மாப்பிள்ளை வீட்டில் திருமணம் நடக்கும்)

5. காந்தர்வ விவாகம் — ஸ்திரீயும் புருஷனும் ஒருவருக்கு ஒருவர் ஆசையால் மனம் ஒத்துச் சேர்தல் (காதல் திருமணம்)

6. ஆஸீர விவாகம் — ஆசுரம் (அசுரர் போன்ற) வகைக் கல்யாணங்களில் வீர தீரச்செயல்கள் செய்வோருக்குப் பெண் கொடுப்பர். காளை அடக்கல், சுயம்வரப் போட்டிகள் இதில் அடங்கும்.

7. ராக்ஷஸ விவாகம் — ஒருவன் தன் பலத்தால் கன்னிகை (பெண்) அழும்போது அவள் வீட்டினின்றும் அவளது பந்துக்களை (சொந்தக்காரர்கள்) அடித்தும், கொன்றும் வலிமையால் கொண்டுபோவது.

8. பைசாசம் — கன்னிகை தூங்குகையில் தன்னை மறந்திருக்கையில் பைத்தியமாய் இருக்கையில் அவளை மனைவியாக்கிக்கொள்ளுதல்.

முதலாறும் ஒப்புக்கொள்ளப்பட்ட வகைகள். கடைசி இரண்டும் பெற்றோர் சம்மதமிருப்பின் ஒப்புக்கொள்ளப்படும். ஆனால் தண்டனை உண்டு. பெற்றோர் மற்றும் மணமகள் சம்மதம் பெற இயலாவிடின் திருமணம் செல்லாது. (5)

மனு தர்ம ஆட்சி நடத்திய மன்னர்கள், அவர்களின் ராஜகுருக்களாக இருந்த பார்ப்பனர்கள் வகுத்த சட்டங்களின்படி தங்களின் அன்றாட வழிபாட்டு முறைகளிலும், வாழ்வியல் நடைமுறைகளிலும் ஆரிய சாத்திரங்களையும் சடங்குகளையும் கடைபிடித்தனர். அதையொட்டி மக்களும் தமிழரின் பண்பாட்டுக்கும் கலாச்சாரத்திற்கும் சற்றும் தொடர்பில்லாத ஆரிய பழக்கங்களுக்கு அடிமையாகினர். அதன் ஒரு பகுதியாகவே "தீ வலம் வரல்" போன்ற சடங்குகள் மண நிகழ்வுகளில் புகுத்தப்பட்டன.

கோவலன் கண்ணகி திருமணத்தில் மாமூது பார்ப்பான் மறைவழி காட்டியதாக இளங்கோவடிகள் கூறுவதிலிருந்து அன்றைய நாளிலேயே தமிழர்களின் திருமணங்களில் குறிப்பாக மேட்டுக்குடி மக்களின் மணவிழாக்களில் ஆரியர்களின் பழக்கமான தீ வளர்த்தல் அதனை வலம் வருதல், அருந்ததி பார்த்தல் போன்ற சடங்குகள் புரோகித பார்ப்பனர்களால் நடத்தப்பட்டன என்று அறிகின்றோம்.

அப்போது தொடங்கப்பட்ட இந்த சடங்குகள் காலப்போக்கில் ஏற்பட்ட சாதி பாகுபாடுகளுக்கு ஏற்ப மெல்ல மெல்ல வலுப்பெற்று சாதிக்கு ஒரு சடங்காக கடைபிடிக்கப்பட்டன. சப்தபதி போன்ற சடங்குகள் அனைத்துப் பிரிவினருக்குமான பொதுவான சடங்குகளாக்கப்பட்டன.

வரலாற்று ரீதியாக கி.பி.2-ஆம் நூற்றாண்டு வாக்கில் தொடங்கப் பட்டிருக்கலாம் எனக் கருதப்படும் இந்த ஆரிய சடங்குகளைக் கொண்ட மணமுறையானது, தமிழர்களின் வாழ்வில் நிலைபெற்றதாகி விட்டது.

இருப்பினும் பார்ப்பனர்களால் நடத்தி வைக்கப்படும் மண சடங்குகளில் அவர்களால் கூறப்படும் வடமொழி மந்திரங்களுக்கு பொருள் புரியாமலேயே அந்நாள் தொடங்கி இன்றைக்கு வரையிலும் பெரும்பான்மைத் தமிழர்கள் அதனை ஏற்று கடைபிடித்து வருகின்றனர். இந்த வடமொழி மந்திரங்களின் பொருள்தான் என்ன? இத்திருமண மந்திரங்கள் மக்களை எப்படிக் கீழ்மைப் படுத்துகின்றன என்பது குறித்தும் காண்போம்.

## கீழ்மைப் படுத்தும் திருமண மந்திரங்களும் சாஸ்த்திரங்களும்

ஆரிய மதத்தின் மூலாதாரமாக விளங்குவது வேதங்கள். அதில் தலையானது ரிக் வேதமாகும். பத்து மண்டலங்களாக எழுதப்பட்டுள்ள அந்த வேதத்தின் பத்தாவது மண்டலத்தில் திருமண மந்திரங்கள் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அதன் 85வது அத்தியாயமான 'திருமணம்' என்பதில் சூரியை என்பாளின் திருமணம் குறித்து கூறப்பட்டுள்ளது. இவள் ஸவிதா என்பவளின் புதல்வி என்று சொல்லப்படுகிறது. இப்பகுதியின் முதல் ஐந்து பாடல்கள் ஸோமன் எனும் மணமகன் பற்றி கூறுகிறது. இதில் இருபதாவது பாடலிலிருந்து தொடங்கும் 'திருமண மந்திரங்கள்' பற்றி விரிவாகக் காணவேண்டும் என்பது முக்கியமாகும். எனவே அவற்றில் சில முக்கிய மந்திரப் பாடல்களை இங்கு காண்போம்.

20. சூரியையே! நல்ல கீம் சுகத்தினாலும் சல்மலியாலும் கற்பிக்கப்பட்டதும் விசுவ ரூபமுள்ளதும் பொன்னால் அலங்கரிக்கப்பட்டதும் நன்கு இயங்குவதும் நல்ல சக்கரமுள்ள தேரிலே ஏறவும். உனது கணவனுக்கு சுகப்படுத்தும் உலகத்தையும் திருமண பவனியையும் இயக்கவும்.

2. இங்கு இருந்து எழுந்திருக்கவும். விசுவாவசுவே! இவளுக்குக் கணவனிருக்கிறான். நான் விசுவாவசுவான உன்னை வணக்கத்தோடும் துதிகளோடும் வணங்குகிறேன். தந்தையின் மனையிலே அழகோடிருக்கும் வேறு கன்னிகையை விரும்பவும். அதுவே உன்னுடைய பாகம். இதைத் தெரிந்து கொள்ளவும். உன்னுடைய பிறப்பிலிருந்தே அதைப் பற்றவும்.

22. விசுவாவசுவே! இங்கிருந்து எழுந்திருக்கவும். நாங்கள் உன்னை வணக்கத்தோடு துதிக்கிறோம். பெரிய நிதம்பங்களுள்ள வேறு பெண்ணை விரும்பவும். மனைவியைக் கணவனோடு விடவும்.

23. மணமகளின் தந்தையின் மனைக்குச் செல்லும் நண்பர்களுடைய வழிகள் நேராகவும் முட்களின்றியும் விளங்குக. அர்யமானும் பகனும் எங்களைச் செலுத்துவார்களாக. தேவர்களே! தம்பதிகளுடைய ஐக்கியத்தைப் பூர்த்தி செய்யுங்கள்.

24. நான் உன்னை இங்கிருந்து - தந்தையின் மனையிலிருந்து - விடுவிக்கிறேன். அங்கிருந்து - கணவனுடைய மனையிலிருந்து - விடுவிக்கவில்லை. அங்கு புருடனுடைய மனையிலே நன்கு பந்தப் படுத்துகிறேன். இந்திரனே! வர்ஷிப்பவனே! அங்கு உத்தமப் புதல்வர்களுடனும் சௌபாக்கியத்துடனும் உன்னால் வாழ்வாளாக.

36. நீ கணவனான என்னோடு முதுமைப் பருவமடைய நான் உன்னுடைய கையை சௌபாக்கியத்துக்காகப் பற்றுகிறேன். நான் குடும்பத்தின் தலைவனாயிருக்கத் தேவர்களான பகனும் அரியமானும் ஸவிதாவும் புரத்தீயும் உன்னை எனக்கு அளித்தார்கள்.

37. பூஷா மிக்க மங்கலமாயிருக்கும் அவனில் மானிடர்கள் பீஜத்தைத் தெளிக்கவும். மிக்க அன்புடனிருக்கும் அவள் எங்களோடு இசைந்திருக்கவும் விருப்பத்தால் ஆர்வமாகி கணவர்களான எங்களுக்கு மனைவியைப் பிரஜையோடு மீண்டும் அளிக்கவும்.

38. அக்கினியே! கந்தர்வர்கள் உனக்கு மணமகளின் ஆபரணங்களோடு சூரியை அளித்தார்கள். அக்கினியே! கணவர்களான எங்களுக்கு மனைவியைப் பிரஜையோடு மீண்டும் அளிக்கவும்.

39. அக்கினி மனைவியை மீண்டும் ஆயுஸோடும் ஒளியோடும் தந்தான். அவளுக்குக் கணவனாயிருப்பவன் நீண்ட ஆயுசை அடைந்து நூறு வருடங்கள் வாழ்வானாக.

40. ஸோமன் முதலில் அவளை அடைந்தான். பிறகு அவளைக் கந்தர்வன் அடைந்தான். அக்கினியான தீ உன்னுடைய மூன்றாவது கணவனாயிருந்தான். உன்னுடைய நான்காவது கணவன் மானிடனாய்த் தோன்றுகிறான்.

41. ஸோமன் அவளைக் கந்தர்வனுக்கு அளித்தான். கந்தர்வன் அவளைக் கந்தர்வனுக் களித்தான். (அக்கினி என்பதற்கு பதில் தவறாக உள்ளது) அக்கினி அவளை எனக்குச் செல்வத்தோடும் புதல்வர்களோடுமளித்தான்.

45. வர்ஷிப்பவனான இந்திரனே! இவளைக் கணவனுக்குப் பிரியமுள்ளவளாகவும் புதல்வரிகளின் தாயாகவும் செய்யவும். அவளுக்குப் பத்துப் புதல்வர்களை அளிக்கவும். பதியைப் பதினொன்றாவது மகனாகச் செய்யவும் (பக்கம் 695 — 699) (6)

ஆரிய மதத்தின் ஆணிவேரான வேதம் திருமணம் நடத்தி வைக்க பயன்படுத்தும் இந்த மந்திரங்கள் கூறுவது என்ன? மணமகளைத் திருமணத்திற்கு முன்பாக சோமனும், கந்தர்வனும், அக்கினியும் ஒருவர்பின் ஒருவராக கணவராக (பதியாக) இருந்து அனுபவித்து இறுதியாக மணமகளிடம் அளித்தார்கள் என்று கூறப்படுகிறது. இதைத்தான் பல காலமாக பல மொழிபெயர்ப்பாளர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தற்கால மத அடிப்படைவாதிகள் இதனை ஏற்பதில்லை. மாறாக பதி என்றால் கணவன் என்று பொருள் இல்லை, அஃது தலைவனைக் குறிக்கும். சோமன், கந்தர்வன், அக்கினி என்பதெல்லாம் மனிதர்களோ தெய்வப்பிறவிகளோ இல்லை. மாறாக இவை இயற்கை சக்திகளைக் குறிக்கும் என்றெல்லாம் வியாக்யானம் சொல்லி ஆரிய மத சடங்குகளுக்கும், மந்திரங்களுக்கும் முட்டுக் குடுக்கின்றனர்.

வேதகால ஆரிய சடங்குகள் பார்ப்பனர்கள் நடுவே மட்டும் புழக்கத்தில் இருந்த காலத்தில், அன்றையத் தமிழர்கள் அக்னி போன்ற அஃறினைப் பொருள் எதனையும் திருமணத்திற்கு சாட்சியாகவோ அல்லது அவையெல்லாம் மணமகளை இளமைக் காலத்தில் பற்றியிருந்து அவளுக்கு அழகையும், அமைதியையும், அறிவையும், கலைகளையும், காமத்தையும் ஊட்டிக் காத்தன என்ற நம்பிக்கையையோ கொண்டிருக்கவில்லை.

மேலும் ஒரு ஆணும் பெண்ணும் வயதுக்கு வந்தபின் தாங்களாக முடிவெடுக்கும் அறிவாற்றல் பெற்ற நிலையில் காதல் வயப்பட்டு களவு ஒழுக்கத்தில் ஈடுபட்டிருந்தனர். அதன்பின் பெற்றோர் அனுமதியோடு மணம் முடித்துக் கொண்டனர். வயதுக்கு வராத சிறுமிப் பருவத்தில் அந்நாளின் தமிழ்ப் பெண்கள் காதல் வயப்பட்டதாகவோ திருமணம் புரிந்து கொண்டதாகவோ இல்லை. ஆனால் ஆரிய மத தர்மமோ சிறுமிகள் பெண்கள் பூப்பெய்யும் முன்னமே எட்டு வயதுக்குள் திருமணம் செய்து தரப்பட வேண்டும் என்றும், அப்படி ஒரு தந்தையானவன் தன் மகளுக்குத் திருமணத்தை முடிக்காவிட்டால் அவனுக்கு மனு சாஸ்த்திரம் அளித்த தண்டனை என்ன என்பதையும் அறிந்தால் தமிழனின் உயர்ந்த பண்பாட்டுக்கும் நாகரிகத்திற்கும் ஆரியத்திற்க்கும் உள்ள வேறுபாடு தெரியும். அது என்ன தண்டனை? பெண்களுக்கு எட்டு வயதுக்குள் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று மனு சாஸ்த்திரம் சொல்லியிருப்பதும் உண்மையா? ஆரிய சாஸ்த்திரங்களில் ஊறிப்போன ஓர் ஆச்சார புருஷரின் கூற்று என்னவென்று பார்ப்போம்.

"வேதம் பெண்களை எவ்வளவு கட்டுப்பாடுகளுக்குள் வைத்திருந்தாலும் அவள் ருதுவான பின்னர் தான் திருமணம் மதுவர்க்கம் என்றெல்லாம் சடங்குகளைப் பின்னியது.

ஆனால் மநு அப்படியல்ல... எட்டு வயதுக்குள்ளேயே பெண்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது. மநுபடி பெண்களுக்கு பொதுவான பெயர் க்ருஹிணி. அதாவது வீட்டுக்காரி. வீடுதான் அவள் உலகம். வீட்டுக்குள்தான் அவள் இருக்க வேண்டும்.

நான் முன்பு சொன்னேனே...வாசலில் விளையாடிக் கொண்டிருந்தாள் என்று. திருமணம் வரைக்கும் வீட்டு வாசலில் விளையாடலாம்.

அதன்பின் கல்யாணமாகி முழு க்ருஹிணி ஆன பின்னர் வீடுதான் அவள் சகலமும். கல்யாணத்தை மநு கன்னிகாதானம் என்கிறது. கன்னிகையை தானம் செய்தல் கன்னிகாதானம்.

கன்னிகா என்றால் அதாவது கன்னிகை என்றால்? மநு தர்மப்படி எட்டு வயது அடைந்த பெண்கள் அனைவரும் கன்னிகைகள். பின் கன்னிகைகளுக்கு கல்யாணம் பண்ண வேண்டும். இன்னொருவன் கையில் பிடித்துக் கொடுக்க வேண்டும். அதாவது அவனிடத்திலே இந்த கன்னிகையை தானம் செய்ய வேண்டும். இது கன்னிகா தானம்...................

............... மநு பிரபோ என்னால் முடியவில்லை. என் பெண் குழந்தையை கட்டிக் கொள்ள எந்த பொடிப்பயலும் கிடைக்கவில்லை. அவளுக்கும் எட்டு வயது கடந்து விட்டது. இப்போது ருதுவாகி விட்டாளே.

இப்படியாக ஒரு ஏழை தகப்பன் மநுவிடம் மன்றாடுகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். மநுவிடம் வாய்வழியாக மனு போடுகிறான் என்று கருதிக்கொள்ளுங்கள்.

அவனுக்கும் அவளைப் போன்ற அப்பாக்களுக்கும் மநு பதில் தருகிறார்.

**"பாணிக்கிரஹாப நிகா மந்த்ராஹா**
**கன்யா ஸ்வே ப்ரதிக்ஷுதஹா**
**நகன்யாஸீ"**

இது பதில் அல்ல தண்டனை. எட்டு வயதுக்குள் பெண்ணுக்கு கல்யாணம் பண்ணவில்லை அவள் ருதுவாகித்தான் கல்யாணம் பண்ணி வைக்கிறான். அவன் என்ன செய்ய வேண்டும் தெரியுமா?................

நீ ஏனடா உன் பெண்ணுக்கு எட்டு வயது வரை கல்யாணம் செய்யாமல் இருந்தாய். கன்னிகா தர்மத்தை கால்களில் போட்டு மிதித்து விட்டாயே இது பாவம் என்று உனக்குத் தெரியாதா? இந்த பாவத்துக்கு தண்டனை என்ன என்று உனக்கு தெரியாதா? என மநு ஸ்மிருதி அந்த அப்பாவி அப்பாக்களை பார்த்து அதட்டுகிறது....................

அப்படிப்பட்ட அளவுக்கு அது என்ன தண்டனை?

**"மாஸி மாஸி ரஜஸ்தஸ்யஹா**
**பிதா பிபதி கோனிதம்"**

இந்த ஸ்மிருதி விதியை எழுதுவதற்கு என் பேனா கூசுகிறது. இப்படிப்பட்ட ஒரு கருத்தை சுமந்து கொண்டிருப்பதற்காக சமஸ்கிருத பாஷையே கூச்சப்பட வேண்டும். அந்த விதியின் விளக்கத்தை உங்களுக்குத் தமிழில் நான் சொல்லும்போது தமிழின் தரம் கெட்டுவிடக் கூடாதே என நான் பயப்படுகிறேன்.

அது என்னவென்றால்...

அடே கையாலாகாத அப்பா.. உன் பெண்ணை எட்டு வயதிலேயே இன்னொருவனுக்கு நீ பிடித்துக் கொடுக்க வேண்டும். தவறிவிட்டாய். அவள் இப்போது ருதுவாகி விட்டாள்.

ருதுவான பின் மூன்று வருஷத்துக்குள் நீ அவளுக்கு மணமுடிக்கவில்லை யென்றால் அவளாகவே சுயம்வரம் நடத்தி தன் கணவனை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். ஆனாலும் ருதுவாகும்வரை நீ அவளை வீட்டிலேயே வைத்திருப்பது எப்படி சரியாகும்?

அதனால் உனக்கு இதோ தண்டனை. ருதுவாகி கல்யாணம் ஆகாமல் அவள் இருக்கும் காலம் வரை உன் பெண்ணுடைய பகிஷ்டை காலத்தில் அதாவது மாதவிலக்கு காலத்தில் வெளியேற்றப்படுமே கழிவு அதை அப்பாவாகிய நீ வீணாக்காமல் அருந்த வேண்டும். இப்படியொரு தண்டனையைப் பெருகிறோமே என்று நீ வருந்த வேண்டும். அதற்காகத்தான் இந்த தண்டனை.

பெற்ற மகளிடம் அப்பா செய்ய வேண்டிய காரியமாக மநு சொன்னதைத் தெரிந்து கொண்டீர்களா? எழுதி முடித்தபின் என் பேனாவுக்கே குமட்டிக் கொண்டு

வருகிறது. மரண தண்டனை விதித்து தீர்ப்பு எழுதிய பேனாவை முனை குத்தி முறித்துப் போட்டுவிடுவதைப் போல... இந்த பேனாவையும் தூக்கி எறிந்து விடலாம் என தோன்றுகிறது.

( பக்கம் 160-164) .(7)

ஆரிய வேதங்களும் சாஸ்த்திரங்களும் பெண்ணின் திருமண விஷயத்தில் எந்த அளவுக்கு மனிதத் தன்மைக்கு எதிரான காட்டுமிராண்டித் தனமான கொள்கைகளைக் கடைபிடிக்கின்றன என்பது இந்த உதாரணத்திலிருந்து விளங்கும்.

இதுபோன்ற அநாகரீகமான எந்த ஒரு விதியும் செயல்பாடும் தமிழ்ப் பெண்களின் வாழ்க்கையில் வகுக்கப்பட்டதாக எந்த ஆதாரங்களும் இதுவரை கிடைக்கப்பெற வில்லை. இதிலிருந்து இந்து மத சாஸ்த்திரம் என்பதும், கோட்பாடுகள் என்பதும் ஆரிய மதம் சார்ந்தது என்பதையும் தமிழர்களுக்கு இதில் சிறிதும் தொடர்பில்லை என்பதையுமே இவை உணர்த்துகின்றன.

இந்தக் கொடுமையான ஆரிய ஸநாதனக் கோட்பாடுகளை அதிகாரத்தில் தாங்கள் உயரத்தில் இருந்த நிலையைக் கொண்டு மெல்ல மெல்ல தமிழர் வாழ்வில் புகுத்திய பார்ப்பனர்கள் அதில் வெற்றியும் கண்டனர். காலப்போக்கில் பல்கிப் பெருகி ஆயிரக்கணக்கான சாதிகள் தோன்றி மக்களிடையே ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டபோதே அவர்களின் திருமண நடைமுறைகளிலும் ஆரிய சாஸ்த்திர சம்பிரதாயங்கள் சடங்குகள் புகுத்தப்பட்டன. இருந்தாலும் தங்களின் லாபத்திற்காகவும் சுக வாழ்வுக்காகவும் சாதி பாகுபாடுகள் நிறைந்த தமிழ்ச் சமுதாயத்தின் திருமண சடங்குளில் பெரிய மாறுபாடுகள் இல்லாமல் அனைத்து சாதித் திருமணங்களிலும் மந்திரங்கள் ஒலிப்பதையும் அக்கினி வளர்க்கப்பட்டு சப்தபதி போன்ற சடங்குகளையும் பொதுவாக்கிக் கொண்டனர். இதனால் காலப்போக்கில் பெரும்பான்மையான தமிழர் திருமணங்கள் பார்ப்பனர்கள் இல்லாமல் நடத்த முடியாது என்கின்ற நிலைக்கு ஆளானது..

இருப்பினும் நாட்டில் குறிப்பாக தமிழகத்தில் இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள் எனப்படும் பல சாதிப்பிரிவு மக்கள் பார்ப்பனர்களோ அவர்களின் சடங்குகளோ இல்லாமல் திருமணம் செய்து கொள்ளும் பழக்கத்தை இன்றுவரை கடைபிடிக்கின்றனர். குறிப்பாக இந்திய குடிமக்களாகக் கருதப்படும் மலைவாழ் மக்களில் எந்தப் பிரிவினரும் இன்றுவரை உச்சநீதி மன்றம் கட்டாயப்படுத்தும் இச்சடங்குகளைக் கடைபிடிப்பதில்லை. நூறு ஆண்டுகட்கு முன்னால் இது குறித்து கள ஆய்வு மேற்கொண்ட ஓர் ஆங்கில ஆய்வாளரின் சில குறிப்புகள் இதனை உறுதிப் படுத்தும்.

## எட்கர் தர்ஸ்டனின் ஆய்வுகளில் மண நிகழ்வுகள்

பொ.ஆ.1905ஆம் ஆண்டில் சென்னை அருங்காட்சியகத்தில் கண்காணிப்பாளராகப் பணியில் அமர்த்தப்பட்ட எட்கர் தர்ஸ்டன் என்பார் தன் களப்பணியில் கண்ட ஆய்வுகளைத் தொகுத்து 1909ல் "தென்னிந்திய குலங்களும் குடிகளும்" என்ற தலைப்பில் ஏழு தொகுதிகளாக வெளியிட்டார். அந்த சிறப்பு வாய்ந்த நூலிலிருந்து சிலவற்றைக் காண்போம்.

நீலகிரி மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் வசிக்கும் படகர் இன பழங்குடி மக்கள் பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறார்.

"உதயர்கள் பிரிவினைத் தவிர மற்ற படகர் பிரிவினர் திருமண நிகழ்ச்சி எளிமையாகவே நடைபெறுகிறது. திருமணத்திற்காகக் குறிக்கப்பட்ட நாளுக்கு ஓரிரு நாட்கள் முன்னர் மணமகன் தன் உடன்பிறந்தவர்களுடன் மணப் பெண்ணின் இல்லத்திற்கு மரியாதை நிமித்தம் செல்வான். அங்குக் கூடியிருக்கும் படகர் அனைவரையும் கால்களைத் தொட்டுக் கும்பிடுவான். மணநாளன்று மணமகள் கோத்தர்கள் இன்னிசையோடு மணமகன் இல்லத்திற்கு அழைத்து வரப்படுவாள். அவள் வீட்டு வாசலில் வந்து நிள்றவுடன் அவள் மாமியாரோ மைத்துனியோ ஒரு கலத்தில் தண்ணீர் கொண்டு வந்து மூன்று முறை அவள் கரங்களில் ஊற்றுவர். ஒவ்வொரு முறையும்

அவள் அத்தண்ணீரைத் தன் பாதங்களின்மீது படும்படி விடவேண்டும். பின் மாமியார் அவள் கழுத்தில் பாசிமணி மாலை அணிவித்து அவளை வீட்டின் வெளி அறைக்கு அழைத்துச் சாமைச் சோறும் பாலும் தருவாள். அவள் அதை உண்பதாகப் பாவனை செய்வாள். மணமகன் சகோதரி இவள் கையலம்ப நீர் தரவேண்டும். பின் மணமகளும் வேறு இரு பெண்களும் (பெரும்பாலும் மணமகன் உடன்பிறந்தோர்) கோத்தர்கள் இன்னிசை முழங்க ஓடைக்குச் சென்று அலங்கரிக்கப்பட்ட பானைகளில் சமையலுக்காகத் தண்ணீர் கொண்டு வருவர். பின் மணமகள் தன் புதிய உறவினர்களை வணங்கி அவர்களுடைய வாழ்த்துக்களைப் பெறுவாள். மணச்சடங்குகள் விருந்தோடு முடிவடையும். சில இடங்களில் மணமகளும் மணமகனும் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து தங்களுக்குத் தரப்படும் பரிசுப் பொருட்களை ஏற்றுக் கொள்வர்.'' தொகுதி 1 பக்.135) (8)

நீலகிரி பகுதியைச் சேர்ந்த இருளர்கள் என்ற மற்றொரு பழங்குடி இன மக்களின் திருமண முறைபற்றி என்ன கூறுகிறார் என்று பார்ப்போம்.

"மண ஒப்பந்தம் எதுவும் இவர்களிடையே கிடையாது. ஆணும் பெண்ணும் அவர்கள் விருப்பம்போல் யாரோடு வேண்டுமானாலும் உறவு கொள்ளலாம். அந்த உறவினைத் தொடர்ந்து நீட்டித்துக் கொள்வதும் பிரிந்து செல்வதுமான உரிமை பெண்களுடையதே. நல்ல ஊழ் வாய்க்கப் பெற்ற சிலர் தங்கள் உறவினை நான்கைந்து ரூபாய்வரை செலவழித்து நண்பர்களுக்கும் அண்டை அயலாருக்கும் விருந்து வைத்துக் கொண்டாடுவர். அப்போது குறும்பர்களும் தங்கள் கொம்பு தப்பட்டை ஆகியவற்றுடன் வந்திருந்து அந்த இரவை ஆடிப் பாடிக் கோலாகலமாகக் கழிக்க உதவுவர். இது போன்ற நிகழ்ச்சிகள் மிக அரிதாகவே நடைபெறுவதற்குரியன என இருளர்கள் திரு ஹார்க்னஸ் அவர்களிடம் கூறியுள்ளனர். எனக்குத் தெரிவிக்கப்பட்ட விவரங்களின்படி இவர்கள் திருமணம் ஒரு எளிய நிகழ்ச்சியே. ஒரு மறியினை அறுத்து விருந்து நிகழ்த்துவர். விருந்தினர்கள் மணமகனுக்குச் சில அணாக்களை அன்பளிப்பாக தருவர். அவன் அவற்றை ஒரு துணியில் முடிச்சிட்டவனாக மணமகள் குடிசைக்குச் சென்று அவளைத் தன்னுடன் அழைத்து வந்து விடுவான். கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்ள அனுமதிக்கப் படுகின்றனர்." தொகுதி 3 பக்490) (9)

இன்றளவும் மலைவாழ் பழங்குடியின மக்களின் திருமண முறைகள் இவ்வாறாகவே உள்ளது. சமுதாய மாற்றத்தினாலும், நாகரிக வளர்ச்சியினாலும், கல்வியிலும் பொருளாதாரத்திலும் மாற்றங்களைக் கண்டு தங்களை நகர வாழ்க்கைக்கு ஆட்படுத்திக்கொண்ட இம்மக்களில் சிலர் இந்தத் தொன்மையான வழக்கத்தை விட்டுவிட்டு பிற சாதி மக்களைப்போல தாங்களும் பார்ப்பனர்களை வைத்துத் திருமண சடங்குகளைச் சமீப காலமாக நடத்துகின்றனர்.

இதைப்போலவே அதிக எண்ணிக்கை மக்களைக் கொண்ட இடைநிலை சாதிகளான வன்னியர்கள், முக்குலத்தோர், நாடார்கள் போன்ற சமூகத்தார்களின் அக்கால திருமண நிகழ்வுகளில் பார்ப்பனர்களின் சடங்குகள் காணப்படாது. அக்குலத்தின் மூத்தவராகவும் மரியாதைக்குரியவராகவும் கருதப்படும் ஒருவரோ அல்லது பூசாரியாகவோ இருக்கும் ஒருவரே திருமணத்தை நடத்தி வைப்பார். காலப்போக்கில் இவர்களும் பார்ப்பனர்களின் திருமண சடங்கள் போலத் தங்களின் சடங்குகளும் அமைந்திட வேண்டும் என்ற மனநிலையில் தாங்கள் காலங்காலமாக கடைபிடித்து வந்த தங்களின் குல வழக்கப்படியான பார்ப்பனரல்லாத மண முறையினை விடுத்து அவர்களை வைத்து வைதீக திருமணமாகத் தங்கள் இல்லத் திருமணங்களை நடத்துகின்றனர். இதனைப் பெருமையாகவும் கருதுகின்றனர்.

## நடைமுறையில் உள்ள வேறு சில திருமண முறைகள்

இதற்கிடையில் இந்நூற்றாண்டின் துவக்கத்தில் ஆரிய திருமண சடங்குகளை விரும்பாத சில

தமிழ் உணர்வாளர்கள் தமிழ் திருமண முறைகளை ஏற்படுத்தினார்கள். அதில் ஆரிய சடங்குகள் பெரும்பான்மை கடைபிடிக்கப்பட்டாலும், சொல்லப்படும் வடமொழி மந்திரங்களுக்கு மாற்றாகத் திருமுறைப் பாடல்கள், ஆழ்வார்களின் பாசுரங்கள் என்று புரிந்த தமிழில் பாடல்களைப் பாடி குடும்பத்துப் பெரியவர்களைக் கொண்டு நடத்தத் தொடங்கினார்கள். இத்திருமணம் "தமிழர் திருமணம்" எனப்பட்டது.

துவக்கத்தில் மணமக்களின் குடும்பத்தில் மூத்தவராகக் கருதப்படும் ஒருவரின் முன்னிலையில் நடத்தப்பட்ட இத்தகைய திருமணங்கள் பின்பு தமிழறிஞர்கள் பெரும் புலவர்கள் தலைமையில் நடைபெறத் துவங்கின. இத்தகைய மணங்களில் நடைபெறும் அனைத்து சடங்குகளும் சைவர்களாக இருந்தால் ஒரு ஓதுவாரைக்கொண்டு திருமுறைகள் பாடப்பட்டும் வைணவர்களாக இருந்தால் பிரபந்தங்கள் அறிந்த "வாத்தியார்" ஒருவரைக்கொண்டோ நடத்தப்படும். இத்தகைய திருமணங்களில் பார்ப்பனர்களுக்குரிய அனைத்து சடங்குகளும் கடைபிடிக்கப்பட்டாலும் அக்கினி வளர்த்தல் போன்ற சடங்குகள் அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதனால் அவர்கள் ஆதரவோடு நடைபெற்ற அக்கால திருமணங்களிலும் இன்றைக்கு நடைபெறும் தமிழர் திருமணங்களிலும் அக்கினி வளர்த்து நடத்தப்படும் சடங்குகள் தவிர்க்கபடும் ஒன்றாக இருக்கிறது. இது குறித்து ஒரு தமிழறிஞரின் கூற்றினைக் காண்போம்.

### 8. எரி ஓம்பல் (ஓமம் வளர்த்தல்)

இது ஓர் அவசியமில்லாத சடங்கு. உலர்ந்த தருப்பைப் புல்லையும் சமித்து என்று சொல்லப்படும் ஆல், வேல், அத்தி, மா முதலிய மரங்களின் சுள்ளிகளையும் கொளுத்தி, அதில் நம் நாட்டு மக்களின் பெரும்பாலோர் சுவைத்தே அறியாத அருமையான நெய்யைக் கொட்டிப் பாழாக்கிப் புகையை உண்டாக்கி, திருமணத்தைக் காணவந்திருப்பவர்களின் கண்களுக்குத் தொந்தரவு கொடுப்பதுதான் ஓமம் வளர்த்தலின் பலன். இம்மாதிரி அக்கினியைப் போற்றுவதும், பூசிப்பதும், பனியும் குளிரும் அதிகமாயுள்ள மத்திய ஆசியாவில் உடைகள் இன்றி வெற்றுடம்புடன் வாழ்ந்திருந்த ஆரியர்களுக்குத் தான் தகும். ஏனெனில் அவர்கள் குளிரின் கொடுமையிலிருந்து தப்பித்து உயிர்வாழ அக்கினி இன்றியமையாதது. மேலும் சக்கி முக்கிக் கற்களைக் கொண்டு கஷ்டப்பட்டு நெருப்பை உண்டாக்கிக் கொண்டிருந்த அக்காலத்தில், ஆரியர்கள் தங்கள் ஆடு மாடுகளை மேய்க்கப் புல் வெளிகளைத் தேடிக்கொண்டு ஊர் ஊராய்த் திரிந்து வந்ததால், அவர்களில் ஒவ்வொரு குடும்பத்தினரும் சமையலுக்காக வேண்டிய நெருப்பை ஒரு மட்பாண்டத்தில் வைத்து அவிந்து போகாமல் அதை எரிய விட்டுக்கொண்டே இருக்க வேண்டி இருந்தது. எனவே அவர்கள் மேய்த்து வந்த ஆடு மாடுகளிலிருந்து கிடைத்த நெய்யைக் கொண்டு அக்கினியை வளர்த்து அதைத் தெய்வமாகப் போற்றிவந்தார்கள்.

உஷ்ண நாடான இந்தியாவில் ஒரே இடத்தில் தங்கி வசித்து வந்த தமிழர்களுக்கு அக்கினியை ஒரு தெய்வமாகக் கொள்வது அவசியமில்லை.

ஆனால் இக்காலத்தில் தமிழருடைய குடும்ப விவகாரங்களும் சொத்துரிமை விவகாரங்களும் ஆரியர்களுடைய தர்ம சாஸ்த்திரங்களை அடிப்படையாகக் வைத்து ஆங்கிலேயர்களால் தயாரிக்கப்பட்ட இந்து சட்டத்தைக் கொண்டு நீதி மன்றங்களில் தீர்ப்பு செய்யப்படுகின்றன. அந்தச் சட்டப்படி திருமணம் நடக்கும்போது எரியோம்பல் செய்யப்பட்டு, அந்த அக்கினியைச் சுற்றி வரும் முறையில் மணப்பந்தரைச் சுற்றி மணமக்கள் ஏழடி (சப்தபதி) எடுத்து வைத்தாக வேண்டும். அப்படிச் செய்தால் தான் அத் திருமணம் இந்து சட்டப்படி நடந்த பிரம்ம விவாகம் ஆகும். அப்படி மணம் செய்து கொண்டவர்களுக்கும் அவர்களுடைய சந்ததியாருக்கும்தான் இந்து சட்டப்படி சில தனி உரிமைகள் கிடைக்கும். வேறு முறைகளில் மணம் செய்து கொண்டவர்கள் அவ்வுரிமையை இழந்து

விடவேண்டியதே. உதாரணமாக பிள்ளையில்லாதபோது வேறொருவருடைய பிள்ளையைத் தத்து எடுத்து வளர்த்துக் கொள்ளுதல், பிரியாத மணவாழ்க்கை, பங்காளிகளுக்கு ஆண் சந்ததி இல்லாதபோது அவர்களுடைய சொத்துக்குக்கு உரிமை பெறுதல் முதலிய உரிமைகளை சட்டப்படி பெறமுடியாமல் போய்விடும்.

ஆனால் இவ் வுரிமைகளை பெரும்பாலும் வீடு, மனை, நிலம், தோட்டம், துறவு முதலிய சொத்துக்களை உடையவர்களுக்கும் அவர்களுடைய நெருங்கிய உறவினர்களுக்கும்தான் வேண்டியவை. ஆனால் சொத்தில்லாத மக்களுக்கு பிரம்ம விவாகமும் அதன் இன்றியமையாத நிகழ்ச்சியான ஓமம் வளர்த்தலும் தேவையில்லை."(10)

இதன்மூலம் இன்றைக்கு எழுபத்தைந்தாண்டுகட்கு முன்பே தீ வளர்த்தல், சப்தபதி எனப்படும் தீ வலம் வருதல் போன்ற நிகழ்வுகளைத் தவிர்த்தும் தமிழர்களின் சமயம் சார்ந்த மண நிகழ்வுகள் நடைந்துள்ளன என்றும் அம்முறைகள் எதிர்க்கப்பட்டுள்ளன என்றும் அறியப்படுகின்றது.

இதற்கிடையே இந்து மத சடங்குகளைக் கடைபிடித்து செய்யப்படும் நடுத்தர பொருளாதார நிலையில் உள்ள மக்கள் காலங்காலமாகக் கடைபிடிக்கப்படும் "வரதட்சணை" என்ற கொடுமையிலும் சிக்கித் தவிக்கின்றனர். ஆணாதிக்கம் மேலோங்கிய நிலையில் மணமகனுக்கு மணமகள் வீட்டார் வரதட்சணையாக நகைகளையும், பொருட்களையும், தொகையும் அளிக்க வேண்டும் என்ற நிலை நிரம்பக் காணப்படுகிறது. இக்கொடுமையால் சாஸ்திரப்படி நடைபெற்ற பல திருமணங்கள் முறிவுக்கு ஆளாகியுள்ளன.

மேலும் பெரும் செல்வந்தர்கள் அதிக பொருட்செலவைத் திருமணங்களுக்குச் மேற்கொள்வது ஒரு கௌரவப் பிரச்னையாகக் கருதப்பட்டு கணக்கின்றியும், ஆடம்பரமாகவும் செய்யப்படுகின்றன. சமீபத்தில் நடைபெற்ற தொழிலதிபர் முகேஷ் அம்பானியின் மகன் ஆனந்த அம்பானியின் திருமணம் இதை உறுதிப் படுத்துகிறது. அது குறித்த ஒரு செய்தியினைக் காண்போம்.

"தொழிலதிபர் முகேஷ் அம்பானியின் மகன் ஆனந்த அம்பானியின் திருமணத்திற்கு ரூ.5000 கோடிக்கு மேல் செலவிடப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

தொழிலதிபர் முகேஷ் அம்பானி — நீடா அம்பானி தம்பதியின் மகன் ஆனந்த் அம்பானி — ராதிகா மெர்ச்சன்ட் ஆகியோரின் திருமணம் வெகு விமரிசையாக நடைபெற்றது. கடந்த ஓராண்டாகவே திருமணத்துக்கு முந்தைய நிகழ்ச்சிகள் சடங்குகள் நடைபெற்று வந்தன. கடந்த ஒரு மாதமாக பல்வேறு ஆடம்பர நிகழ்ச்சிகள் நடந்து முடிந்தன. இந்நிலையில் ஆனந்த் அம்பானி திருமணத்திற்கு அவரது தாய் நீடா அம்பானி ரூ.500 கோடி மதிப்புள்ள நெக்லஸ் அணிந்து வந்தார். உலகிலேயே விலை மதிப்புள்ள பொருட்களில் அந்த நெக்லஸும் ஒன்று என்று கூறப்படுகிறது. சுலோகா அம்பானியும் (அகாஷ் அம்பானியின் மனைவி) இதே போன்ற நெக்லஸ் அணிந்திருந்தார்.

மணமகன் ஆனந்த் அம்பானி திருமணத்தின்போது கையில் கட்டியிருந்த பதேக் பிலிப்பி கடிகாரத்திலன் விலை மட்டும் 67.5 கோடி என்று தெரியவந்துள்ளது. தவிர திருமணத்தில் பங்கேற்ற தனது நண்பர்களுக்கு ரூ. 2கோடி மதிப்புள்ள கை கடிகாரத்தை ஆனந்த அம்பானி பரிசாக வழங்கியுள்ளார்.......தவிர விலை உயர்ந்த லூாயிஸ் உய்ட்டன் பைகள் தங்க சங்கிலிகள் விலை உயர்ந்த காலணிகள் போன்ற பொருட்களும் விருந்தினர்களுக்குப் பரிசாக வழங்கப்பட்டுள்ளது...........(இந்து தமிழ்திசை நாளேடு — நாள் 16-07-2024)

திருமணங்களில் இது போன்ற ஆடம்பரங்கள் செய்யப்படும்போது ஏழை எளிய நடுத்தர மக்களின் மனநிலையில் ஒரு வித ஏக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

ஆரியக் கலப்பில்லாத திருமண நடைமுறையினைத் தமிழறிஞர்கள் ஏற்படுத்துவதற்கு முன்பாகவே தங்களை இழிவு படுத்தும் வைதீகத் திருமண சடங்குகளைப்

புறந்தள்ளிட வேண்டும் என்றும் தமிழர்களின் திருமணங்கள் வீண் ஆடம்பரங்களின்றி எளிய முறையில் நடைபெற வேண்டும் என்ற எண்ணத்தை மக்களிடையே முதன் முதலாகத் தூவியவர் தந்தை பெரியார்.

ஆயிரம் ஆண்டுகட்கு மேலாக கடைபிடித்து வந்த இழிவு நடைமுறைகளைத் துடைத்தெரிந்து, தமிழர்கள் மானமுள்ளவர்களாகவும் அறிவுள்ளவர்களாகவும் மாற வேண்டும் என்பதற்காக திருமண முறையில் மாற்றங்கள் வேண்டும் என்று குரல் எழுப்பியவர் தந்தை பெரியார். அவர் கண்ட சுயமரியாதைத் திருமணம் குறித்துக் காண்போம்.

## சுயமரியாதைத் திருமணமும் அதற்கான சட்டமும்.

துவக்கத்திலிருந்த தமிழர் திருமண நடைமுறைகள் பார்ப்பன ஆதிக்கத்தால் வலுவிழந்து அவர்களின்றி தங்கள் வீட்டுத் திருமணங்கள் நடைபெற முடியாது என்ற நிலைக்குத் தமிழ் மக்கள் ஆட்பட்டிருந்த நிலையில், தெரியாத மொழியில் தங்களைக் கீழ்மைப் படுத்தும் மந்திரங்களின் பொருள் புரியாமல் தலையாட்டி பொம்மைகளாக இருந்தபோதுதான் ''மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு'' என்று சுயமரியாதை ஊட்ட வந்தவர் தந்தை பெரியார்.

தங்களின் சுயலாபத்திற்காக தமிழர்களின் வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்புவரை உட்புகுந்து கபளீகபரம் செய்த ஆரியத்தின் சூழ்ச்சியை முறியடிக்க அவர்கள் கூறும் அனைத்து சடங்கு சம்பிரதாயங்களையும் ஒழிக்க வேண்டும் என்றார் பெரியார். அவர் தொடங்கிய சுயமரியாதை இயக்கம்தான் தமிழகத்தில் முதன் முதலில் பார்ப்பனர்களை புறக்கணித்து தமக்குள் எளிமையாக திருமணங்களை நடத்த வேண்டும் என்று தீர்மானித்து செயலாற்றியது. அதன் பயனாக நாடு முழுதும் எண்ணற்ற சுயமரியதை, சீர்திருத்தத் திருமணங்கள் நடைபெற்றன. அத்தோடு சாதி மறுப்பு மத மறுப்புத் திருமணங்களும் நடந்தன. இதன் பயனாக வரலாற்றில் முதன் முதலாகச் சாதி ஒழிப்புக்கான கால்கோள் தொடங்கி வைக்கப்பட்டது.

தமிழர்களை இழிவு படுத்தும் புரோகித முறை திருமணங்களுக்கு எதிராக ''சுயமரியாதைத் திருமணங்களை நடத்த வேண்டும் என்பதை ஓர் இயக்கமாகவே தொடங்கினார். இதற்கு முன்னோடியாகத் தன் குடும்பத்திலேயே ஒரு திருமணத்தை நடத்திக் காட்டினார். 1925 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது என்று கூறப்படும் சுயமரியாதை இயக்கத்தின் 1927ஆம் ஆண்டின் செங்கற்பட்டு மாநாட்டில் தமிழர்கள் இல்லத் திருமணங்கள் புரோகித மறுப்புத் திருமணங்களாக நடத்தப்பட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பெரியாரின் கொள்கைகளில் ஈடுபாடு கொண்ட பலர் துணிந்ததால் தமிழ்நாடு முழுவதும் இத்திருமணங்கள் நடைபெற்றன. ஆனால் சட்டரீதியான அங்கீகாரம் இதற்குக் கிடைக்க வில்லை. இருப்பினும் திராவிட இயக்க கொள்கை வீரர்களின் இல்லங்களில் எல்லாம் தீ வலம் வரல் இன்றி, புகை மூட்டமின்றி, புரியாத மொழியில் பார்ப்பனர்களின் தவளை சத்த மந்திரங்கள் இன்றி பெரும்பாலும் ஒரு தலைவரைக்கொண்டு அவர் கருத்துரையோடும், சான்றோர் வாழ்த்துரையோடும் எளிமையான திருமணங்கள் ஆயிரக்கணக்கில் நடந்தேறின. அழுத்தமான சுயமரியாதை இயக்கக் கொள்கைக்காரர்களின் இத்தகைய திருமணங்களில் தாலியும் மறுக்கப்பட்து.

சட்ட ரீதியாக இத்திருமணத்திற்கு அங்கீகாரம் கிடைக்காததால் இத்திருமணங்கள் நடைபெற்ற குடும்பங்களில் சொத்து பாகப்பிரிவினை போன்ற வழக்குகளில் இத்திருமணம் புரிந்தவர்கள் ஏராளமான இழப்புகளைச் சந்தித்தனர். இருப்பினும் "சுயமரியாதையே சுகவாழ்வு" என்ற கொள்கையைக் கையில் ஏந்திய ஏராளமான தமிழர்கள் இல்லங்களில் சாதி மறுப்பு, மத மறுப்புத் திருமணங்கள் நடைபெற்று அஃது சாதி மத ஒழிப்புக்கும் வழிவகுத்தது.

ஆங்கிலேயர்களின் ஆட்சிகாலம் வரையிலும் இந்து மதத்துக்காரர்களின் திருமணங்களுக்கான சரியான சட்ட நெறிமுறைகள் வகுக்கப்படாத நிலையில், நாட்டு விடுதலைக்குப்பின் 1955ஆம் ஆண்டு இதற்கான முதல் சட்டம் இயற்றப்பட்டது..

## இந்து திருமண சட்டம் 1955 (11)

"இந்து திருமண சட்டம் 1955" என்பதுதான் முதன் முதலாக சுதந்திர இந்தியாவில் இயற்றப்பட்ட சட்டமாகும். இச்சட்டத்தின் சில முக்கிய அம்சங்களைக் குறித்துக் காண்போம்.

ஜம்மு காஷ்மீர் நீங்கலாக இந்தியா முழுமைக்கும் இந்தியாவுக்கு வெளியிலும் உள்ள இந்தியர்களுக்கு பொருந்தும் இச்சட்டம் 1955ஆம் ஆண்டு மே திங்கள் 18 ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்தது.

இச்சட்டவிதி -2ன் உட்பிரிவு (1) (அ) வில் இந்து என்ற சொல்லுக்கான விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

"இந்து என்ற சொல்லுக்கான விளக்கம் பழைய சாத்திங்களிலோ இலக்கியங்களிலோ யாண்டும் காணக்கிடைத்திலது. சிந்து நதிக்கரையில் வாழ்ந்த மக்களைப் பாரசீகர் அந்நதியின் பெயரை வைத்துச் சிந்துக்கள் என்றழைக்க, அதுவே நாளடைவில் இந்து — இந்துக்கள் என்றாயிற்று என்றும்; 'இந்து' என்ற சொல் ஆதியில் இருந்தது கிடையாது; சிதறுண்டு கிடந்த இந்தியாவை ஆங்கிலேயர் ஒரு குடையின்கீழ் ஆண்டபோது, இந்நாட்டை 'இந்தியா' என்றும் இம்மக்களை 'இந்துக்கள்' என்றும் இம்மக்கள் பின்பற்றிய மதத்தை 'இந்து மதம்' என்றும் பெயரிட்டு அழைக்க அதன்பிறகு ஏற்பட்டதே. அதன்பிறகு ஏற்பட்டதே 'இந்து' என்ற சொல் என்றும் அறிஞர் பெருமக்கள் உரைப்பர். ஆனால் இன்று இந்திய நிலப்பகுதியில் உள்ளவர்கள் அனைவரும் இந்துக்கள் ஆக மாட்டார்கள். இன்றுள்ள சட்டப்படி இந்து மதத்தில் பிறந்தவர்கள் மட்டுமல்ல பிற மதத்தினரும் இந்து மதத்தை ஏற்றுக் கொண்டால் அவர்களும் இந்துக்களே." இந்த வகையில் லிங்காயத்துக்கள் பிராமோக்கள் ஆரிய சமாஜ்வாதிகள் பௌத்தர்கள் ஜெயினர்கள் மற்றும் சீக்கியர்களும் இச்சட்டத்திற்குள் அடங்குவர் (பக்கம் 11)

உட்பிரிவு (2)ல் மலைவாழ் பழங்குடியினருக்கு இச்சட்டம் பொருந்தாது. பழங்குடி மக்களுக்கு அவர்கள் மேற்கொண்டு வரும் வழக்கமே உரியதாகும். அவர்களை இச்சட்டத்திற்குட்படுத்துவது அவசியம் என்று மத்திய அரசு கருதினால் அரசுப் பதிவிதழில் அறிவத்து கட்டளை இடுவதன் மூலம் அவர்களையும் இச்சட்டத்திற்கு உட்படுத்தலாம். (பக்.19)

சட்ட விதி 5ன் உட்பிரிவு (1)ன்படி மணமக்கள் இருவரில் எவரும் இதற்கு முன் எவரையும் துணையாகப் பெற்றிருக்கக்கூடாது.

உட்பிரிவு (iii)ன்படி திருமண காலத்தில் மணமகன் இருபத்தொரு வயது நிறைந்தவராகவும் மணப்பெண் பதினெட்டு வயது நிரம்பியவராகவும் இருக்க வேண்டும்.

இச்சட்டம் பிரிவு 7ன்படி

உட்பிரிவு (1) இந்து திருமணமொன்று திருமணத் தரப்பினர்களில் எவருடைய வழக்கம். சடங்கு சம்பிரதாயங்களின்படியும் நிகழலாம்.

உட்பிரிவு (2) சப்தபதி — 'சப்தபதி' என்பது திருமணத்தின்போது மணமகனும் மணமகளும் ஒன்றாக இணைந்து புனிதத்தீயை சுற்றி ஏழு அடி எடுத்து வைத்து வலம் வரும் ஒரு சடங்காகும். இச்சடங்கு நிறைவேறும்போதே இந்துத் திருமணமொன்று நிறைவுற்றதாகக் கருதப்படுகிறது.. (பக்.44)

இந்த முதல் இந்து திருமண சட்டம் மூலமாக தொன்று தொட்டு நடைமுறையில் இருந்து வந்த பெரும்பான்மையான இந்துகள் என்று சொல்லப்படும் மக்களிடையே இருந்து வந்த ஆரியர்களின் திருமண நடைமுறைகளில் காணப்பட்ட ஏற்றுக்கொள்ள முடியாத பால்ய விவாகம் பலதார மணம் போன்றவை தடுக்கப்பட்டன. இருப்பினும் தமிழர்களுக்குரிய திருமண முறைக்கு மாறானதாக உள்ள சப்தபதி போன்ற சடங்குகள் இச்சட்டத்திலும் வலியுறுத்தப்பட்டன. இதனால் தந்தை பெரியாரால் அறிமுகப்படுத்தப்பட்ட

சுயமரியாதைத் திருமணங்கள் சட்டரீதியான அங்கீகாரம் பெற முடியாத நிலை தொடர்ந்தது. இத்திருமணங்கள் செய்து கொண்ட குடும்பங்களில் சொத்துப்பிரிப்பதில் பல சிக்கல்கள் எழுந்தன. பல சுயமரியாதைக்காரர்கள் இதனால் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய குடும்ப சொத்துக்களை இழக்கும் நிலை ஏற்பட்டது. இச்சமயத்தில்தான் தமிழ் நாடு புதியதோர் தெம்பைப் பெற்றது.

ஆம். 1967ஆம் ஆண்டு முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் தந்தை பெரியாரின் சுயமரியாதைத் திருமணத்தைச் சட்டமாக்கினார். தன் அரசே பெரியாருக்குக் காணிக்கை என்ற அண்ணா இந்த சட்டத்தினையும் அவருக்கே காணிக்கையாக்கினார். இச்சட்டம் குறித்து விவரிவாகக் காண்போம்.

## சுயமரியாதைத் திருமண சட்டம்

தந்தை பெரியாரின் மாணாக்கரான அறிஞர் அண்ணா அவர்கள் "தாம் ஆட்சிப்பொறுப்பேற்றால் சுயமரியாதைத் திருமணத்தைச் சட்டமாக்குவேன்" என்று சூளுறைத்திருந்ததை 1967ஆம் ஆண்டில் தமிழக முதல்வராகப் பதவி ஏற்றதும் முதற்பணியாகச் செய்து காட்டினார்.

இந்து திருமணசட்டம் 1955 இன் பிரிவு 7இல் ஒரு திருத்தம் கொண்டுவந்து 7அ என்ற பிரிவினை உண்டாக்கி இணைத்து "இந்து திருமணங்கள் (சென்னை திருத்தம்) சட்டம் 1967" என்றொரு சட்டத்தைத் தமிழ்நாடு சட்ட மன்றத்தில் வைத்து ஒப்புதல் பெற்றார். அச்சட்டம் 1968ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 20ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்தின் சில விதிகளைக் காண்போம். (12)

விதி 7அ உட்பிரிவு (1)ன்படி இந்துக்கள் இருவர் உறவினர்கள் நணபர்கள் அல்லது வேறு நபர்கள் முன்னிலையில் நடத்திக்கொள்ளும் சுயமரியாதைத் திருமணம் அல்லது சீர்திருத்தத் திருமணம் அல்லது அதுபோன்ற வேறு பெயரிட்டு அழைக்கப்படும் திருமணத்திற்கு இப்பிரிவு பொருந்தும்.

(1) (அ) மணமக்கள் இருவரும் தாங்கள் புரிந்து கொண்ட மொழியில் ஒருவரை ஒருவர் கணவன் அல்லது மனைவியாக ஏற்றுக்கொள்வதாக அறிவித்தல் அல்லது

(1) (ஆ) மணமக்கள் ஒருவருக்கொருவர் மாலையிடுதல் அல்லது ஒருவர் விரலில் ஒருவர் தணையாழியை இடுதல் அல்லது

(1) (இ) தாலி கட்டுதல் போன்ற முறைகளில் ஒன்றால் நிகழலாம்.

உட்பிரிவு 2) (அ) பிரிவு (7) இல் யாது கூறப்பட்டிருப்பினும் இச்சட்டத்தின் இதர வகையங்களுக்கு உட்பட்டு, இந்துத் திருமணச் (சென்னை திருத்தம்) சட்டம் 1967 அமலுக்கு வந்ததற்குப் பின்னர் நிகழ்வெய்திய திருமணம் அனைத்திற்கும் இப்பிரிவு பொருந்திச் சட்டம் செல்லாக்கமுடையதாக இருக்கும்.

ஆ) பிரிவு 7 அல்லது இந்துச்சட்ட மூலம், விதி விளக்கம் அல்லது இந்துத் திருமணச் (சென்னை திருத்தம்) சட்டம் 1967 அமலுக்கு வருவதற்கு முன்னர் உடன் முன் வேறு சட்டமொன்றின் பகுதி சார்ந்த வழக்கம் அல்லது வழக்காறு, தீர்ப்புரை தீர்ப்பாணை கட்டளை ஆகியவற்றில் யாது கண்டிருந்தபோதிலும் உட்பிரிவு (3)க்கு உட்பட்டு அம்முறைப்படி செய்து கொண்ட அனைத்து திருமணத்திற்கும் இப்பிரிவு பொருந்தும். இஃது திருமணம் நடந்த நாளிலிருந்து செயல்நிலைக்கு வந்து செல்நிலையுறும்.

தந்தை பெரியாரின் எண்ணத்தை நிறைவேற்றிய அறிஞர் அண்ணா தம் ஆட்சியில் கொண்டு வந்த சுயமரியாதைத் திருமண சட்டம் என்பது மேலும் பல்வேறு சட்ட நுணுக்கங்களைக் கொண்டு தமிழர்கள் திருமண நிகழ்வுகள் சுயமரியாதையோடும், பண்பாட்டோம், கலாச்சாரத்தோடும் நடைபெற வழிவகை செய்தார்.

இதன்விளைவாக தமிழகத்தில் சுயமரியாதை சாதி மத மறுப்புத் திருமணங்கள் நாளும் பெருகி கணக்கற்று நடைபெற்று வருகின்றன. இதனால் சாதி ஏற்றத்தாழ்வுகள் ஒழிந்துபோக வழிவகை கிடைக்கிறது.

இந்நிலையில்தான் சமீபத்தில் 2024 ஏப்ரல் 19 வந்த உச்சநீதிமன்றத் தீர்ப்பானது நாட்டில் மீண்டும் ஸநாதன ஆரிய சம்பிரதாயங்களை ஆதரிக்கும் வகையில் திருமண நடைமுறைகளில் ஆரிய சடங்குகளை கட்டாயம் புகுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் வெளிவந்துள்ளது அதிர்ச்சியளிக்கின்றது. அது குறித்துக் காண்போம்.

## உச்சநீதி மன்றத் தீர்ப்பின் விவரம்

இந்து மதத்தைச் சேர்ந்த விமானிகளாகப் பணிபுரிந்த ஓர் இளம் வாழ்விணையர்கள் தங்களுக்குள் ஏற்பட்ட மன விரிசல் காரணமாக திருமணரத்துக்காக உச்சநீதி மன்றத்தை நாடுகின்றனர். அதில் மணமகன் தன் வழக்கில் தங்கள் திருமணம் இந்து சம்பிரதாயப்படி நடைபெறவில்லை என்பதால் அதை ரத்து செய்யும்படி கோரியிருந்தார். அவர்கள் காதலித்து திருமணம் செய்துகொண்டு முறைப்படி திருமணத்தைப் பதிவு செய்திருந்தார்கள். அவர்கள் வழக்கை விசாரித்த நீதியரசர்கள் பி. வி. நாகரத்னா மற்றும் அகஸ்டின் ஜார்ஜ் மாசிஹ் ஆகியோர் அடங்கிய இருக்கை இது குறித்துத் தீர்ப்பளிக்கையில் "இவர்கள் செய்து கொண்ட திருமணம் இந்து மத சடங்குகளின்படி நடைபெறவில்லை. குறிப்பாக "சப்தபதி" என்ற ஏழு முறை தீயை வலம்வருதல் நடைபெறவில்லை. இச்சடங்கு மூலம்தான் மணமக்கள் தாங்கள் இருவரும் சமபங்கினராகி விட்டோம் என்றும் மனைவி கணவனின் சமபாதியாகிவிட்டாள் என்பதும் பொருளாகிறது. திருமணம் பதிவு செய்யப்பட்டிருப்பினும் மேற்கூறப்பட்ட மத சடங்குகளின்படி நடைபெறவில்லை என்பதால் சட்டப்படி பதிவான இவர்களின் திருமணப் பதிவுச்சான்று செல்லாது. கணவர் மற்றும் அவரின் உறவினர்கள் மீது மனைவி தொடுக்கப்பட்ட வரதட்சணைக் கொடுமை வழக்கு ரத்து செய்யப்படுகிறது" என்று தீர்ப்பளித்துள்ளனர்.

ஸநாதனவாதிகளுக்கும் அடிப்படை இந்துத்துவ வாதிகளுக்கும் இந்தத் தீர்ப்பு மகிழ்ச்சியை அளித்துள்ளது. ஏனெனில் பன்னெங்காலமாக நாட்டில் இந்துக்கள் எனப்படும் அனைத்து மக்களிடமும் தங்களின் ஆரிய திருமணமுறைகளைப் புகுத்திவைத்து அதன்வழியாக பண்பாட்டுப் படையெடுப்பை வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருந்தவேளையில் அதற்கு மேலும் வலுவூட்டுவதாக இத்தீர்ப்பு அமைந்துள்ளதே காரணமாகும்.

ஆனால் இப்படியெல்லாம் வருங்காலத்தில் நடக்கலாம் என்பதை தன் தீர்க்கதரிசனமான பட்டறிவால் உணர்ந்திருந்த தந்தை பெரியாரின் மூளையில் உதித்த சுயமரியதைத் திருமணமும் அதனை சட்டவடிவமாக ஆக்கி இன்றைக்கு உச்சநீதி மன்றமே தீர்ப்பளித்தாலும் அதனை ஏற்ற வேண்டிய அவசியமில்லாத நிலையைத் தமிழகத்தில் உருவாக்கி வைத்துவிட்ட பேரறிஞர் அண்ணாவும் தமிழர்களின் நிலையான சுயமரியாதைக்குப் பாதைபோட்டு செப்பனிட்டவர்கள் என்றால் மிகையில்லை.

இந்து திருமண சட்டத்தின் எந்த ஏழாவது பிரிவினைக் காட்டி உச்சநீதி மன்றம் சப்தபதியை நியாயப்படுத்தியதோ அதே சட்டப்பிரிவில் திருத்தம் கொண்டுவந்து சுயமரியாதைத் திருமணத்தை சட்டபூர்வமாக்கிய தமிழகம் இன்றைக்கு நாட்டிற்கே வழிகாட்டியாக உள்ளது. அது குறித்து வாய்மூடி மௌனமாக உள்ளது இன்றைய ஒன்றிய அரசு. இந்துத்துவா கொள்கைகளை நிலைநாட்டுவதே தங்கள் குறிக்கோள் என்று ஆர்.எஸ்.எஸ்சின் ஊதுகுழலாய் செயல்படும் ஒன்றிய அரசு இத்தீர்ப்பு குறித்து மறுசீராய்வுக்கு முயற்சிக்கும் என்று நம்ப இயலாது. இந்நிலையில் இந்தத் தீர்ப்பானது பல சமூக செயல்பாட்டாளர்களை, மனித நேயப் பற்றாளர்களை திடுக்கிட வைத்து அவர்களின் கண்டனத்திற்கும் விமர்சினத்திற்கும் ஆளாகியுள்ளது. சமூகநீதி மேல் அக்கறை கொண்ட நீதியரசர்கள் பலரும் இதனை ஏற்கவில்லை. இது குறித்து மாண்பமை மேனாள் நீதியரசர் திரு. கே. சந்துரு அவர்கள் சமீபத்தில் ஜீனியர் விகடன் (08-05-2024) இதழில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதன் இறுதிப்பகுதியைக் கண்டால் சுயமரியாதைத் திருமணத்தின் அவசியம் இந்திய ஒன்றியம் முழுமைக்கும் ஏன் அவசியம் என்ற எண்ணத்தை வெளிப்படுத்தும் என்பதால் அது இதோ-

"தமிழ்நாட்டில் கொண்டுவரப்பட்ட இந்து திருமணச் சட்டத் திருத்தத்தை எதிர்த்தும் வழக்கு தொடரப்பட்டது. நாகலிங்கம் எதிரி சிவகாமி (2001) என்ற வழக்கில். அந்தச் சட்டப்பிரிவு செல்லும் என்று அறிவித்தது உச்சநீதி மன்றம். எனவே இது போன்ற சட்டப் பாதுகாப்புள்ள தமிழ்நாட்டில் சமீபத்திய உச்ச நீதிமன்றத் தீர்ப்பு எவ்விதத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது. மேலும், பொது சிவில் சட்டம் பற்றி வாய்கிழியப் பேசும் பாஜக, இந்தியா முழுவதும் இந்துக்களுக்கான பொதுச் சட்டத்தை உருவாக்காததோடு, திருமணங்களையும் வாரிசுரிமைப் பிரச்சினையையும் சாஸ்திரத்தின் அடிப்படையில் அணுகாமல் இருப்பதற்கும் ஏற்பாடு செய்யவில்லை.

சமீபத்தில் அலாகாபாத் நீதிமன்றம் அளித்த தீர்ப்பில், "கன்யாதான் சடங்கு செய்யாத திருமணம் செல்லும் என்றும், அது சாஸ்திரத்தில் முக்கியமல்ல" என்றும் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. காசியாத்திரை தொடங்கி கன்யாதானம் என்று விரிந்து அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து, நலங்கு விளையாட்டுகளுடன் நடக்கும் சடங்குகளில் எது தேவை, எது தேவையில்லை என்று ஒவ்வொன்றாகக் கூறுவதற்கு பதிலாக தமிழ்நாட்டின் சுயமரியாதைத் திருமண சட்டத் திருத்தத்தை அகில இந்திய சட்டமாக அறிவித்தால் இப்படிப்பட்ட சந்தேகங்கள் எழாது.

மேலும் பாதி திருமணச் சடங்குகள் அந்தக் காலத்தில் மிகுதியாக நடைபெற்ற குழந்தைத் திருமணத்தின்போது குழந்தைகளின் அச்ச வெளிப்பாடுகளைக் குறைப்பதற்காக உருவாக்கப்பட்டவை. கன்யாதானமும்கூட மைனர் பெண் குழந்தையை, பெற்றோர் தாரை வார்த்துக் கொடுக்கும் ஏற்பாட்டின் ஒரு வடிவமே.

திருமணம் புரிந்தவர் விரும்பினால், மணமொத்த மணவிலக்கு கோருவதற்கு சட்டம் ஏற்பாடு செய்திருக்கிறது. அதுபோல் மனமொத்த இருவர் திருமணம் செய்துகொள்வதற்கு அக்னி சாட்சியும் சப்தபதியும் கட்டாயம் என்று சொல்வதை மாற்றுவதற்கு ஒன்றிய அரசு முயலுமா?'' என்று முடிக்கிறார் நீதியரசர்.

## முடிவுரை

தமிழர்களின் பண்டைகால திருமண முறைகள், ஆரியர்களின் வருகைக்குப்பின் புகுத்தப்பட்ட அவர்களின் திருமண சடங்குகள் குறித்தும் அது இன்றளவும் பெரும்பான்மைத் தமிழர்தம் வாழ்வில் நின்று நிலைத்துவிட்டதன் விளைவால் தாம் எப்படி கீழ்மைப் படுத்தப்படுகிறோம் என்பதை அறிந்து கொள்ளாமலேயே அதற்கு அடிமையாகிப்போன தமிழர்கள் குறித்தும், இறுதியாக இதற்குத் தீர்வுகாண வழி செய்த தந்தை பெரியார் அறிமுகப்படுத்திய சுயமரியாதைத் திருமண முறையும், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அதனை சட்ட வடிவமாக்கி தமிழர் வாழ்வில் தன்மானத்தை நிலைநாட்ட வைத்ததையும் கண்டோம்.

இன்று இந்து திருமண சட்டம் என்பது ஆரிய மத சடங்குகளின்படி நடப்பதுதான் என்றும், அதனைப் பின்பற்றாத திருமணங்கள் செல்லுபடியாகதவை என்று உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்தாலும் அதற்குப் பாதுகாப்புக் கேடயமாக அண்ணா இயற்றிய சுயமரியாதைத் திருமண சட்டம் விளங்குவதையும் கண்டோம்.

புரியாத மொழியில் திருமண சடங்குகளில் தாம் கேவலப்படுத்தப்படுகிறோம் என்பதை அறியாமலேயே தலைதாழ்ந்து கிடந்த தமிழர்கள் சுயமரியாதைத் திருமணங்களைச் செய்வதன் மூலம், இன்று சட்டப்பாதுகாப்போடும், தன்மானத்தோடும் இருப்பதுபோல் அனைத்து இந்திய மக்களும் இருக்க வேண்டுமாயின் அதற்குரிய சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டியது ஒன்றிய அரசின் கடமை.

ஒரே நாடு, ஒரே கலாச்சாரம், ஒரே பண்பாடு என்ற பெயரில் நாட்டை ஆரியமயமாக்கத் துடிக்கும் ஆர்.எஸ்.எஸ். என்ற இந்துத்துவ

இயக்கத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் பாஜக அரசு, பெரும்பான்மை இந்து மக்களின் சுயமரியாதையைக் காக்க வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டாவது, உச்சநீதி மன்றத் தீர்ப்புக்கு எதிராகத் தமிழகத்தை வழியொற்றி பாராளுமன்றத்தில் உடனடியாக ஒரு சட்டமியற்றிட வேண்டும் என்பதுதான் இதற்கான தீர்வாக அமையும்.

## துணை நூல்கள்:


1. குறுந்தொகை — 1947ல் டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் எழுதிய உரை
2. அகநானூறு — மூலமும் உரையும். புலியூர் கேசிகன் (பக்கம் 165-166)
3. அகநானூறு — மூலமும் உரையும் — பேராசிரியர் அ. மாணிக்கம், எம்ஏ.,
4. புறநானூறு — எளிய உரையுடன் — முனைவர் சு. வஜ்ரவேலு (பக்கம் 440-441)
5. இந்துத் திருமணம் — சடங்குகளும் தத்துவங்களும். தாமரைச் செல்வன் (நூலின் பின்னிணைப்பு-3ல்)
6. ரிக் வேதம் (முதல் பாகம்) தமிழில் எம்.ஆர். ஜம்புநாதன். (பக்கம் 695 — 699)
7. இந்துமதம் எங்கே போகிறது— அக்னிஹோத்ரம் ராமானுஜதாத்தாச்சாரியார். (பக்கம் 160-184)
8. தென்னிந்திய குலங்களும் குடிகளும் — எட்கர் தர்ட்ஸ்டன் தமிழில் கா.ரத்தினம் (தொகுதி 1 பக்கம் 135)
9. மேலது (தொகுதி 3 பக்கம் 490)
10. தமிழர் திருமண முறைகள் (வைணவம்) 1949ல் அ.சி.பாலசுந்தரனார்(பக்கம் 14-16)
11. இந்து திருமணச் சட்டம் — புலமை வெங்கடாச்சலம், சிறப்பு ஆய்வாளர் தஞ்சை தமிழ்ப்பல்கலைக் கழகம்.( பக்கம்11, 19, 44 )
12. மேலது பக்கம் 45, 46.


## ஆசிரியர் குறிப்பு :

எழுத்தாளர் ஞான. வள்ளுவன் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பி.எஸ்சி, எம்.ஏ மற்றும் மருத்துவமனை மேலாண்மையில் முதுகலை பட்டயப் படிப்பினைப் பயின்றவர். தமிழ்நாடு அரசு மருத்துவத்துறையில் நிருவாக அலுவலராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். மாநிலப் பகுத்தறிவு எழுத்தாளர் மன்றத் துணைத்தலைவராக உள்ளார்.

இவரின் நூல்களாவன: 1. பெரியார்-95, 2. தமிழர் வாழ்வில் சாதியும் மதமும் அன்றும் இன்றும், 3. திராவிட இயக்கமும் எங்கள் ஊரும், 4. இசைவேளாளர், 5. ராஜநாயகம் (வரலாற்றுப் புதினம்), 6. ஆச்சாரம் (சமூகப் புதினம்), 7. வரலாற்றில் வென்ற அவர் தாம் பெரியார், 8. செப்பேடுகளும் சதுர்வேதி மங்கலங்களும், 9. தளிச்சேரிப் பெண்டுகள், 10. சில பக்கங்கள் சில தாக்கங்கள், 11. ஸநாதனம்.

The Indus language is likely to have belonged to the North Dravidian sub-branch represented today by the Brahui, spoken in the mountain valleys and plateaus of Afghanistan and Baluchistan, the core area of the Early Harappan neolithic cultures, and by the Kurukh spoken in North India from Nepal and Madhya Pradesh to Orissa, Bengal and Assam.

The Sanskrit hypothesis, however, is difficult to reconcile chronologically with the date of the Indus civilisation (about the second half of the third millennium B.C.) and antecedent Early Harappan neolithic cultures which were responsible for its creation.

*(Deciphering the Indus Script*
*Originally published in Visible Religion, Vol. 6 - A.J. Brill, Leiden, Holland, 1988, pp. 114-135)*

Prof. **Dr. ASKO PARPOLA**
Professor Emeritus, Department of World Cultures,
University of Helsinki, Finland.

# அறிவியல் மனப்பான்மையும் இந்திய ஒன்றியமும்

முனைவர் **வா.நேரு**



**கட்டுரைச் சுருக்கம்:**

*கடந்த 100 ஆண்டுகளில் அறிவியல் கருவிகளின் கண்டுபிடிப்பும் அறிவியல் வளர்ச்சியும் பெரும் பாய்ச்சலைக் கண்டிருக்கிறது. அதுவும் கடந்த 30-40 ஆண்டுகளில் ஏற்பட்ட கணினி, இணைய வளர்ச்சி ஒரு புது உலகத்தை மனிதர்களுக்குக் காட்டிக் கொண்டிருக்கிறது. செயற்கை நுண்ணறிவு இனி உலகத்தை ஆளப்போகிறது என்று சொல்லுமளவிற்கு ஒவ்வொரு துறையிலும் புதிய தொழில் நுட்பம் கோலோச்சுகிறது. ஆனால் இவ்வளவு மகத்தான அறிவியல் கண்டுபிடிப்புகள் வந்த பின்பும், எல்லா மனிதர்களுக்கும் எல்லாமும் கிடைத்திருக்கிறதா? சமத்துவ உலகம் அமையும் என்னும் எண்ணம் தோன்றக் கூடிய வகையில் நிகழ்வுகள் நடைபெறுகின்றனவா? மனிதர்களுக்கு அறிவியல் மனப்பானமை வளர்ந்திருக்கிறதா? என்னும் கேள்விகள் எழுகின்றன. இவற்றைப் பற்றி ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.*

## அறிவியலும் அறிவியல் மனப்பான்மையும்:

அறிவியல் என்பது உண்மையைத் தேடி அடையும் ஒரு வழிமுறை எனலாம்.. நாம் அனைவரும் அறிந்த ஒரு செய்தி,ஐசக் நியூட்டன் புவியீர்ப்பு விசையை உலகிற்குச் சொல்வதற்கு அடிப்படையாக அமைந்தது ஆப்பிள் பழம் மரத்தில் இருந்து கீழே விழுந்த போது ,அது ஏன் கீழே விழுகிறது என்று சிந்தித்ததுதான் . ஆப்பிள் பழம் மரத்திலிருந்து மேலே செல்லாமல் ஏன் கீழே விழுகிறது? பூமிக்கு ஏதும் கீழே இழுக்கும் விசை இருக்கிறதா என்று ஐசக் நியூட்டன் சிந்திக்கிறார்.அது ஒரு கருதுகோள். ஒரு கருதுகோளை எடுத்துக்கொள்வது.அந்தக் கருதுகோளை அறிவியல் முறைப்படி சோதனைகள் செய்வது.சோதனைகளின் முடிவுகளை அட்டவணைப்படுத்துவது,மீண்டும் மீண்டும் சோதனைகள் செய்து உண்மையை உணர்வது பின்பு அந்த உண்மையை உலகிற்கு எடுத்துக்காட்டுவது என்பது அறிவியல் வழிமுறையாகும்.அதனால்தான் ஐசக் நியூட்டன் இன்றும் நினைக்கப்படுகிறார்.

அறிவியல் என்பது மாற்றத்திற்கு உட்பட்டது. ஒரு காலத்தில் அணு என்பது பிளக்கமுடியாதது என்னும் அறிவியல் கருத்து இருந்தது.அது உண்மை என நம்பப்பட்டது.ஆனால் அதற்குப் பின்னால் வந்த அறிவியல் அறிஞர்களால் அணு என்பதைப் பிளக்கமுடியும் என்பது உறுதிசெய்யப்பட்டது.இப்போது அறிவியல் உலகம் அணு என்பது பிளக்கக்கூடியது என்பதே உண்மை என்பதை ஏற்றுக்கொண்டுள்ளது.

உலகமும் உலகில் உள்ள உயிரினங்களும் இப்போது இருக்கும் வடிவத்திலேயே ஆண்டவரால் படைக்கப்பட்டன என்பது மதவாதிகளின் கருத்தாகும். ஆனால் சார்லஸ் டார்வின் அவர்கள் கொடுத்த ‘இயற்கைத் தேர்வும் பரிணாமும் ‘ என்னும் கோட்பாடு இப்போது இருக்கும் உயிரினங்கள் அப்படி அப்படியே

படைக்கப்பட்டன என்னும் மதவாதக் கோட்பாடு செல்லாத ஒன்று என்பதை அறிவித்துவிட்டது. அறிவியல் அடிப்படையில் நிரூபித்தும் விட்டது. இருந்தாலும் மதவாதிகளில் பலர் இன்றைக்கும் பரிணாமக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளும் மன நிலையில் இல்லை. அறிவியல் அடிப்படையில் நிரூபிக்கப்பட்ட உண்மையை,உண்மை என்று அவர்கள் ஏற்கத் தயாராக இல்லை.

அறிவியல் அடிப்படையில் நிரூபிக்கப்பட்ட உண்மையை ஏற்றுக்கொள்ள மறுக்கும் மதவாதிகள் அரசாங்கத்தின் அதிகாரமிக்கப் பொறுப்புகளில் வருகின்றபோது,உண்மையை ஏற்கும் மனமின்றி அதிகாரத்தின் துணையோடு போலி அறிவியலையும் நம்பிக்கை என்னும் பெயரில் மூட நம்பிக்கைகளையும் மக்களின் மனதில் விதைக்கின்றனர்.அதன் மூலம் தங்கள் அதிகாரமும் ஆதிக்கமும் பறிபோகாமல் பார்த்துக்கொள்கின்றனர்.போலி அறிவியலை, மூட நம்பிக்கையைப் பாமரமக்கள் மட்டுமல்ல படித்தவர்களும் நம்புகின்றனர். இவர்கள் மத்தியில் அறிவியல் மனப்பான்மையை வளர்ப்பது என்பது இன்றைக்கு மிகப்பெரும் சவாலாகவே இருக்கிறது.

## அறிவியல் மனப்பான்மை என்றால் என்ன...

"நடைமுறை உலகில் நாம் கேட்கும்,பார்க்கும் தகவல்கள்,கருத்துகளை அப்படியே நம்பாமல் அதன் உண்மைத் தன்மையை ஆராயும் உணர்வுதான் அறிவியல் மனப்பான்மை.வள்ளுவர் சொன்ன 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு ' என்பதும் அறிவியல் மனப்பான்மைதான் .

மனிதர்கள் இயற்கையிலேயே கேள்வி கேட்கும் இயல்புடையவர்கள்.குழந்தையாக இருக்கும்போதே பல விஷயங்கள் பற்றிக் கேள்வி கேட்கிறோம். அதற்கான பதில்களைத் தத்தமது அனுபவத்திலிருந்து அல்லது பெற்றோர் ,சுற்றத்தார் சொல்லக் கேட்கிறோம். இவர்களுக்கு இந்தப் பதில்கள் எங்கிருந்து கிடைத்திருக்கும்?.பெரும்பாலான பதில்கள் சமூகத்தின் கலாச்சாரம்,பண்பாடு,மதம்,சாதியைச் சார்ந்திருக்கிறது. பதில்களை அப்படியே ஏற்றுக்கொள்கிறோம்.ஆனால் அறிவியல் மனப்பான்மை என்பது இவை சரிதானா என்று ஆராய்ந்து பார்ப்பது".(1) என்று ஜோசப் பிரபாகர் குறிப்பிடுகிறார்.

அறிவியல் அடிப்படையில் உலகத்தை,உலகத்தில் நிகழ்வும் நிகழ்வுகளைச் சரிதானா என்று ஆராய்ந்து பார்ப்பது அறிவியல் மனப்பான்மை எனலாம் .ஆராய்ந்து பார்க்கும் அறிவினை அனைத்து மதங்களுமே தடை செய்கின்றன. நம்பிக்கை வை, நல்லது நடக்கும் என்று குறிப்பிடும் மதவாதிகள் ,தங்கள் மதத்தைப் பரப்புவதற்குப் பல்வேறு வகையான வழிமுறைகளைப் பின்பற்றுகின்றனர். மூட நம்பிக்கைகளைப் பரப்புகின்றனர்.சொர்க்கம், நரகம் என்னும் கற்பிதங்களை மக்கள் மனதில் ஏற்றுகின்றனர். அதற்காகத் தங்கள் மதத்தைச் சார்ந்தவர்களை மனதளவில் தயார்படுத்துகின்றனர். அதன்மூலம் தங்கள் மதத்திற்கான நன்கொடைகளைப் பெறுகின்றனர்.இவர்கள் அடிப்படையில் மக்களைச் சிந்திக்கவிடாமல் தடுக்கின்றனர்.

## ஜனநாயகமும் அறிவியல் மனப்பான்மையும் :

ஜனநாயகத்தின் 4 தூண்களுள் ஒன்றான இந்திய அரசாங்கம் இன்றைக்கு மூட நம்பிக்கைவாதிகள் கைகளில் இருக்கிறது. இந்திய ஒன்றிய அரசாங்கம் அறிவியல் மனப்பான்மைக்கு எதிரான செயல்பாட்டைக் கொண்டிருக்கிறது.அறிவியல் மனப்பான்மை என்ற சொல்லை ஆங்கிலத்தில் வடிவமைத்தவர் இந்தியாவின் மேனாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு ஆவார்.அவர் தனது அரசாங்கம் அறிவியல் மனப்பான்மை அடிப்படையில் செயல்படவேண்டும் என்று விரும்பினார்.ஆனால் இன்றைக்கு மதவாத சக்திகள் இந்திய ஒன்றிய அரசாங்கத்தின் பொறுப்பினை ஏற்ற பிறகு இந்திய ஒன்றிய அரசு என்பது அறிவியல் மனப்பான்மைக்கு எதிரான அரசாகவே பல செயல்பாடுகளில் இருக்கிறது.

2014 முதல் இந்திய ஒன்றிய அரசின் செயல்பாடு என்பது அறிவியல் மனப்பான்மைக்கு எதிராக இருப்பதைப் பல்வேறு நிகழ்வுகள் மூலம் நாம் அறியலாம்.

அறிவியல் மனப்பான்மை என்பது மனிதர்கள் மத்தியில் பரப்பப்படவேண்டும். அது வெறுமனே பரப்புரைக்கானது மட்டுமல்ல எளிய மக்களின், ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்கான ஓர் ஆயுதம் என்பதைப் புரியவைக்கவேண்டும்.கடவுள்,மதம், கடவுள் நம்பிக்கை என்பது அறிவியல் மனப்பான்மைக்கு எதிரானது மட்டுமல்ல,மனித குல சமத்துவத்திற்கு எதிரானது,அனைவருக்கும் அனைத்தும் கிடைப்பதைத் தடுப்பதற்குப் பணக்காரர்களும் அரசர்களும் கண்டுபிடித்த கருவி என்பது எளிய மக்களுக்குப் புரியவேண்டும்.

"...ஓர் இடத்தையோ அதாவது நாட்டையோ அதன் மக்களையோ ஒரு போரின் மூலம் தோல்வியடையச் செய்து கைப்பற்றி விட முடியும். ஆனால் அவர்களையே தொடர்ந்து ஆள்வதற்குப் போரை நடத்த முடியாது. அவர்களை வசப்படுத்த வேண்டும்.அந்த மக்கள் இன்னொரு மன்னரை எப்படி ஏற்றுக்கொள்வார்கள்? அதற்காக மன்னர்கள் கைக்கொண்ட மிகப்பெரிய ஆயுதங்கள்தான் இந்த மதங்களும் கடவுள்களும். இந்த மன்னரகள் என்ன செய்தார்கள் என்று பாருங்கள். தங்களின் கடவுள்களோடு தாங்கள் கைப்பற்றிய மக்களின் கடவுள்களை இணைத்து விடுகிறார்கள்.பிறகு அந்தப் புதுக் கடவுளோடு மன்னரை இணைத்துப் பல கதைகளைக் கற்பித்துப் புரளிகளாக மக்கள் மத்தியில் பரப்பினார்கள்.ஆக அந்தக் கடவுள்களை வணங்கி வந்தவர்கள் அந்தக் கடவுள்களின் பிரதிநிதிகளாகவே இந்தப் புதிய மன்னரையும் பார்க்கத் தொடங்கினார்கள்.எனவே அந்த அரசுகளை மனமுவந்து ஏற்றுக்கொள்கிறார்கள். 'கடவுள் 'இந்த மன்னர்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய ஆயுதம்'(2) என்று தோழர் ஓவியா பெண்களின் வரலாற்றைப் பற்றிக் குறிப்பிடும்போது குறிப்பிடுகிறார்.

அன்றைக்கு மன்னர்கள் என்றால் இன்றைக்கு ஜனநாயக நாட்டில் பிரதமர்கள்,அமைச்சர்கள் போன்றோர் ஆளும் வர்க்கங்களின் பிரதிநிதிகளாக இருக்கின்றனர். புதுப்புது சாமியார்கள் இந்தியாவில் தோன்றிக் கொண்டே இருக்கிறார்கள். கார்ப்பரேட் சாமியார்கள் பல கோடி ரூபாய்களுக்குச் சொந்தக்காரர்களாகக் குறுகிய காலத்தில் மாறுகின்றனர். அறிவியல் மனப்பான்மைக்கு எதிரான மூட நம்பிக்கைகளைப் பரப்புவதில் முன்னனியில் இருக்கும் அந்தக் கார்ப்பரேட் சாமியார்கள் நடத்தும் விழாக்களில் பிரதமர் உள்ளிட்ட அரசு உயர் பதிவிகளில் இருப்பவர்கள் பங்கேற்கின்றனர்.இவைகள் எல்லாம் தெரியாமல் நடப்பவை அல்ல.அரசுக்கும் அரசின் உயர் பதிவிகளில் இருப்பவர்களுக்கும் தெரிந்தே நடக்கின்றன.கடவுள்கள் மன்னர்களுக்கு அன்றைக்குக் கிடைத்த மிகப்பெரிய ஆயுதம் என்றால் இன்றைக்கு மூட நம்பிக்கைகளும்,கடவுள்களும்,சாமியார்களும் ஜனநாயக அரசின் மிகப்பெரிய ஆயுதங்கள்..

உத்தரப்பிரதேசத்தில் உள்ள பசுக் காப்பகங்களின் நிலை குறித்த செய்தியாளர் கேள்விக்குக் கால்நடைத்துறை அமைச்சர் தரம்பால் சிங் பதிலளித்துப் பேசினார். அப்போது அவர், ``மாட்டுக் கோமியத்தை வீடுகளில் தெளிப்பதன் மூலம் வாஸ்து பிரச்னைகள் நீங்கும். வேறு ஏதேனும் தடைகள் இருந்தாலும் நீங்கும். பசுவின் சிறுநீரில் கங்கா தேவி வசிக்கிறாள். மாட்டுச் சாணத்தில் லட்சுமி வசிக்கிறாள். பசுக் காப்பகங்களை மேம்படுத்த பா.ஜ.க அரசு தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. விரைவில் இது தொடர்பான பிரச்னைகள் தீர்க்கப்படும்" என்றார்."(3)

ஒரு மாநில அமைச்சர் பசுமாட்டின் சிறுநீரில் கங்காதேவி வசிக்கிறாள் என்று குறிப்பிடுவதும், மாட்டுக் கோமியம் எல்லாத் தடைகளையும் நீக்கிவிடும் என்று கூறுவதுமான விசித்திரம் இந்திய நாட்டில் நிலவுகிறது.இந்தியா மூட நம்பிக்கைகளின் கூடாரமாகத் திகழ்கிறது.

நம் மக்களிடம் உள்ள மூட நம்பிக்கைகளில் பெரும்பாலானவை ஆபத்தைத் தருபவை.உடல் நலக் குறைபாடுகள் சார்ந்தும் மூட நம்பிக்கைகள் உள்ளன. நோய்களுக்கான காரணம் விதி என்றும்,போன ஜென்மபலன் பாவ புண்ணியங்கள் என்றும் கூறுபவர்களுக்கு நேரடியாக நவீன மருத்துவங்கள் வந்துவிட்டபின்னரும் இத்தகைய மூட நம்பிக்கைகள் உலவுகின்றன.மஞ்சள் காமாலை வந்தால் இரும்பைப்

பழுக்கவைத்துச் சூடு போடுதல்,காது வலிக்கு எருக்கம்பாலை காய்ச்சி ஊற்றுதல், நாய் கடித்தால் நல்லெண்ணையைக் குடித்தல்,காயம் ஏற்பட்டால் பேப்பரைப் பொசுக்கிய தூளையோ, மூக்குப் பொடியையோ காயத்தில் வைத்துக் கட்டுதல், பெண் பிள்ளைகள் வயதுக்கு வரவில்லை என்றால் சூடு போடுதல் உள்ளிட்ட ஏராளமான மூட நம்பிக்கைகள் மருத்துவம் சார்ந்தும் உடல்நிலை சார்ந்தும் இருக்கின்றன.(4) என்று மருத்துவர் இரா. கவுதமன் குறிப்பிடுகிறார். உடலியல் சார்ந்தும் உளவியல் சார்ந்தும் இந்தியாவில் மூட நம்பிக்கைகள் கொட்டிக்கிடக்கின்றன.இதனைத் தவிர்க்கச்சொல்ல வேண்டிய அரசின் உயர் பொறுப்பில் உள்ளவர்கள் அதற்கு மாறாக மூட நம்பிக்கைகளைப் பரப்பும் நடமாடும் வானொலிகளாக இருக்கின்றனர்.

## அரசு நிறுவனங்களும் அறிவியல் மனப்பான்மையும்...

.அறிவியல் துறையில் வேலை செய்பவர்களுக்கு, அறிவியலைக் கற்றுக் கொடுப்பவர்களுக்கு, அறிவியல் அறிஞர்கள் என்று சொல்லப்படுபவர்களுக்கு எல்லாம் அறிவியல் மனப்பான்மை இருக்கும் என்று நாம் நம்புவது தவறு என்பதை நிறைய நிகழ்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

2014-ல் இந்திய ஒன்றியத்தில் மத அடிப்படைவாத அரசான பி.ஜே.பி. அரசு அமைந்தபிறகு ஒவ்வொரு அரசு நிறுவனத்தின் தலைமைப்பொறுப்புகள் மற்றும் முக்கியமான இடங்களில் எல்லாம் இந்து மதவாதிகள் பொறுப்பில் அமர்த்தப்படுகின்றனர். அறிவியல் மனப்பான்மைக்கும் அவர்களுக்கும் இடையில் மலைக்கும் மடுவுக்குமான வேறுபாடு இருப்பதை நம்மால் பார்க்க முடிகிறது.

''இமாசலப்பிரதேச மாநிலம் மண்டி ஐஐடியில் இயக்குநர் லட்சுமிதர் பெஹரா நிகழ்வு ஒன்றில் பங்கேற்று மாணவர்கள் மத்தியில் உரை நிகழ்த்தினார். அப்போது அவர், இறைச்சி சாப்பிடுவதால் தான் இமாச்சலப் பிரதேசத்தில் அதிக இயற்கை பேரிடர் ஏற்படுவதாகக் கூறியது தற்போது சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

அந்த நிகழ்வில் பேசிய லட்சுமிதர் பெஹரா, 'நீங்கள் நல்ல மனிதர்களாக இருக்க வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும் தெரியுமா?' என்று கேட்டார். அதற்கு மாணவர்கள் அமைதியாக இருக்க, உடனே, 'அசைவம் சாப்பிடுவதை நிறுத்துங்கள்' என்று கூறிய லட்சுமிதர் பெஹரா, 'இனி அசைவம் சாப்பிட மாட்டேன் என்று உறுதி மொழி எடுத்துக்கொள்ளுங்கள்' என்று மாணவர்களிடம் கூறியுள்ளார். தொடர்ந்து பேசிய அவர், ''இமாச்சலப்பிரதேசத்தில் மக்கள் இறைச்சி சாப்பிடுவதால்தான் இங்கு மேக வெடிப்பு, நிலச் சரிவு, பெரு வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடர்கள் ஏற்படுகின்றன.'' (5) என்று பேசிய செய்தியை நக்கீரன் இணையதளம் உள்ளிட்ட பல செய்தித்தாள்கள் வெளியிட்டுள்ளன.

மிக உயர்ந்த கல்வி நிறுவனமாகக் கருதப்படும் ஐ.ஐ.டி.யின் இயக்குநராக இருப்பவரே இப்படிப் பேசுகிறார்.அந்தச் செய்தியில் இருக்கும் மண்டி ஐ.ஐ.டி. இயக்குநரின் தோற்றத்தைப் பார்த்தால் நெற்றியில் நாமத்தோடு முழுக்க முழுக்க இந்து மத நம்பிக்கை கொண்டவராகப் புகைப்படத்தில் காட்சியளிக்கிறார். உடனே சிலர் இது அவரது நம்பிக்கை என்று சொல்வர்.அவரது நம்பிக்கை அவருடைய வீட்டோடு மட்டும் இருந்தால் பிரச்சனை இல்லை. ஆனால் நான் இந்த நம்பிக்கை கொண்டவன் என்னும் அடையாளத்தோடு இருப்பது மட்டுமல்ல,அந்த நம்பிக்கையின் அடிப்படையில் ஓர் இயற்கை நிகழ்வினைத் தொடர்புபடுத்துவது சரிதானா?

''மதம் நம்பிக்கை அடிப்படையாகக் கொண்டது என்றும் சயின்ஸ்க்கும் மதத்துக்கும் சம்பந்தம் பார்க்க கூடாது என்றும் பகுத்தறிவு வேறு மதக் கோட்பாடுகள் வேறு என்றும் இந்தக் காலம் வேறு அந்தக் காலம் வேறு என்றும் பெரியவர்கள் நியமனங்களுக்குக் காரண, காரியங்கள் தேடக்கூடாது என்றும் ரிஷி மூலம் நதிமூலம் பார்க்கக் கூடாது என்றும் எல்லா மதத்துக்காரர்களிலும் சொல்லி விடுவதால் உலகில் எந்த மூடனும் எதையும் சொல்லி தப்பித்துக் கொள்ளலாம் என்கின்ற தைரியத்தின் மீது மத ஆபாசமும் மத அயோக்கியத்தனங்களும் உலகில் நிலைத்து வருகின்றன''(6) என்று சொல்கிறார்

தந்தை பெரியார்.நம்பிக்கை அடிப்படையில் நாங்கள் செய்கிறோம் என்று அறிவியல் மனப்பான்மைக்கு எதிரான பல செயல்களை,மதச்சார்பின்மைக்கு எதிரான பல செயல்களை அரசின் நிறுவன்ங்களிலும் ,கல்வி நிறுவனங்களிலும் திட்டமிட்டு மதவாதிகள் நிகழ்த்துகின்றனர்.

அண்மையில் சென்னையில் அரசு பள்ளியில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் ஊக்கமுட்டும் பேச்சாளர் என்று தன்னை விளம்பரம் செய்துகொள்ளும் மகாவிஷ்ணு என்பவர் பேசிய பேச்சு தமிழ்நாடு முழுவதும் மிகப்பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

"சென்னை அசோக்நகர், சைதாப்பேட்டை பகுதியில் உள்ள அரசு பள்ளிகளில் மாணவர்களிடையே, மகா விஷ்ணு என்பவர் ஆன்மிகச் சொற்பொழிவு நடத்தியுள்ளார். தனியார் தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த மகா விஷ்ணு, தன்னை உணர்தல் என்ற ரீதியில் மாணவர்களிடம் பேசியுள்ளார்.

கடந்த ஆக.28-ம் தேதி சைதாப்பேட்டை அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களிடம் பேசிய அவர், மாற்றுத்திறனாளிகள் கை, கால் இல்லாமல் பிறப்பதற்கு அவர்கள் முற்பிறப்பில் செய்த பாவம் தான் காரணம் எனக் கூறியுள்ளார். தொடர்ந்து அசோக் நகர் அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளியிலும் கடந்த காலங்களில் செய்த பாவங்களுக்கு ஏற்ப இந்த ஜென்மம் கடவுளால் படைக்கப்பட்டிருக்கிறது எனப் பேசியுள்ளார். இப்படிப் பேச வேண்டாம் என மாற்றுத்திறனாளி ஆசிரியர் சங்கர் கண்டித்தார். அதற்கு மகாவிஷ்ணு மைக்கில் பேசி அவரை அவமானப்படுத்தினார்.(7).

இந்த மாகவிஷ்ணு என்பவரின் உடல்மொழியை ஊடகத்தின் வழியாகப் பார்த்தவர்களுக்கு அவர்கள் எவ்வளவு கொடூரமாகப் பேசுகிறார்கள் என்பது புரிந்தது. ஆனால் அவர் எனது நம்பிக்கை அடிப்படையில் பேசுகிறேன் என்றார்.அவரைப் பலர் ஆதரித்து ஊடகங்களில் பதிவிட்டதையும் நாம் காண முடிந்தது. அறிவியல் மனப்பான்மைக்கு எதிரான ஒரு மகாவிஷ்ணு பிடிபட்டிருக்கிறார். இன்னும் எத்தனை மகாவிஷ்ணுக்கள் இந்தியா முழுவதும் கல்வி நிலையங்களுக்குள் சென்று உரையாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை.

## நீதிமன்றங்களும் அறிவியல் மனப்பான்மையும்:

இந்திய அரசியலமைப்புச்சட்டம் ஒவ்வொரு குடிமகனும் அறிவியல் மனப்பான்மையை வளர்த்துக்கொள்ளவேண்டும் என்பதையும் மனித நேயம் ,ஆராயும் மனப்பான்மை மற்றும் சீர்திருத்த மனப்பான்மையை வளர்த்துக்கொள்ளவேண்டும் என்பதை அடிப்படைக் கடமையாகக் கொடுத்-திருக்கிறது.

(Article 51A(h) in Constitution of India

(h) to develop the scientific temper, humanism and the spirit of inquiry and reform;)

ஆனால் அரசியலமைப்புச் சட்டத்தின் கருத்திற்கு எதிராக வேறு யாரும் அல்ல,அண்மையில் ஓய்வு பெற்ற உச்ச நீதி மன்ற நீதியரசர் சந்திரசூட் அவர்கள் கொடுத்த வாக்குமூலம் நம் ஒவ்வொருவரையும் திடுக்கிட வைத்தது.பாபர் மசூதி இடிப்பு வழக்கில் நான் கடவுளிடம் கேட்டு,அவர் காட்டிய வழக்கில் தீர்ப்பு வழங்கினேன் என்ற அவரின் வாக்குமூலம் நமக்கு மிகப்பெரிய அச்சத்தைக் கொடுத்திருக்கிறது. சென்னை உயர் நீதிமன்றத்தின் மேனாள் நீதிபதி திரு கே.சந்துரு அவர்கள் ‘வரலாறு உங்களை மன்னிக்காது…சென்று வாருங்கள் சந்திரசூடரே ‘ என்று ஒரு கட்டுரையை ஆன்ந்த விகடனில் எழுதியிருக்கிறார்.அதில் நீதித்துறை மேல் பாமரனுக்கு ஏற்பட்டிருக்கும் சந்தேகத்தை எழுப்பியிருக்கிறார்(8). நீதித்துறை எப்படி தவறியிருக்கிறது என்பதைத் தெளிவாக மேற்கண்ட கட்டுரை காட்டுகிறது.

''ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி நீதிபதி அசோக் குமார் கங்குலி, அயோத்தி தீர்ப்பு தமது மனதில் ஒரு சந்தேகத்தை உருவாக்கியுள்ளது என்றும் தாம் "மிகவும் குழம்பிப்போய் உள்ளதாகவும்" தெரிவித்துள்ளார்.

டெலிகிராஃப் நாளிதழுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில் அவர் இவ்வாறாகக் கூறி உள்ளார்.

"அங்கு ஒரு மசூதி இருந்ததைச் சிறுபான்மையினர் பல தலைமுறைகளாகக் கண்டு வந்துள்ளனர். அது இடிக்கப்பட்டுள்ளது. அதன் மீது, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, ஒரு கோயில் கட்டப்பட இருக்கிறது. இது என் மனதில் ஒரு சந்தேகத்தை எழுப்பியுள்ளது. அரசியலமைப்பின் மாணவனாக, அதை ஏற்றுக்கொள்வது எனக்குக் கொஞ்சம் கடினமாகும்" என்று 72 வயதான கங்குலி கூறி உள்ளார்.

"1856-57 இல் இல்லையென்றாலும், நிச்சயமாக 1949 முதல், அங்குத் தொழுகை நடத்தப்பட்டு வந்துள்ளது. அது ஆவணங்களில் உள்ளது. எனவே, நமது அரசமைப்பு நடைமுறைக்கு வந்தபோது தொழுகை அங்கு நடத்தப்பட்டு வந்துள்ளது.

தொழுகை நடத்தப்பட்ட அந்த இடம், ஒரு மசூதி என்று அங்கீகரிக்கப்பட்டால், சிறுபான்மை சமூகத்திற்கு அவர்களின் மதச் சுதந்திரத்தை பாதுகாக்கும் உரிமை உண்டு - அது அரசமைப்பால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட ஓர் அடிப்படை உரிமை" என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர், "ஒரு முஸ்லீம் இன்று என்ன பார்ப்பார்? ஒரு மசூதி பல ஆண்டுகளாக இருந்தது, அது இடிக்கப்பட்டது. இப்போது அந்த இடம் ராம் லல்லாவுக்குச் சொந்தமானது என்று கூறி, அந்த இடத்தில் ஒரு கட்டடம் வர நீதிமன்றம் அனுமதிக்கிறது. பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இருந்த நில உடைமை குறித்து உச்ச நீதிமன்றம் முடிவு செய்யுமா? அரசமைப்பு வந்தபோது அங்கு ஒரு மசூதி இருந்தது என்பதை உச்ச நீதிமன்றம் மறக்குமா? " என்று கேட்டுள்ளார்.

"அரசியலமைப்பு மற்றும் அதன் விதிகள் மூலம், அதைப் பாதுகாப்பது உச்சநீதிமன்றத்தின் பொறுப்பாகும். " என்று கூறி உள்ளார்.

"அரசமைப்புச் சட்டம் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்பு இருந்தவை உச்சநீதிமன்றத்தின் பொறுப்பில் வராது. அதற்கு முன்பு இந்திய ஜனநாயக குடியரசு என்று எதுவும் இருக்கவில்லை. பின்னர் ஒரு மசூதி இருந்த இடத்தில், , ஒரு பௌத்த ஸ்தூபம் இருந்த இடத்தில், ஒரு தேவாலயம் இருந்த இடத்தில்... இது போன்ற தீர்ப்புகளை நாம் வழங்க ஆரம்பித்தால், நிறையக் கோயில்கள் மற்றும் மசூதிகள் மற்றும் பிற கட்டமைப்புகள் இடிக்கப்பட வேண்டியிருக்கும்.

நாம் புராண 'உண்மைகளுக்குச்' செல்ல முடியாது. ராமன் யார்? வரலாற்று ரீதியாக நிரூபிக்கப்பட்ட சூழ்நிலை ஏதேனும் உள்ளதா? இது நம்பிக்கை சார்ந்த விஷயம்" என்று கூறியுள்ளார்.

"நம்பிக்கையின் அடிப்படையில், நீங்கள் எந்த முன்னுரிமையையும் பெற முடியாது என்று உச்ச நீதிமன்றம் இந்த முறை கூறியது. மசூதியின் கீழ், கட்டமைப்புகள் இருந்தன என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் அந்தக் கட்டமைப்பு ஒரு கோயில் அல்ல. ஒரு கோவிலை இடித்ததன் மூலம் மசூதி கட்டப்பட்டது என்று யாரும் சொல்ல முடியாது. இப்போது ஒரு மசூதியை இடிப்பதன் மூலம், ஒரு கோயில் கட்டப்படுகிறதா?" என்று அந்தப் பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

"500 ஆண்டுகளுக்கு முன்பு நிலத்தை யார் வைத்திருந்தார்கள், யாருக்கும் தெரியுமா? நாம் வரலாற்றை மீண்டும் உருவாக்க முடியாது. எது இருந்ததோ அதைப் பாதுகாப்பதே நீதிமன்றத்தின் பொறுப்பு. எதுவாக இருந்தாலும் உரிமைகளைப் பாதுகாக்கவேண்டும். வரலாற்றை மீண்டும் உருவாக்க நீதிமன்றத்திற்கு எந்தக் கடமையும் இல்லை. ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பு என்ன இருந்தது, என்பதை நீதிமன்றம் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. மசூதி இருந்தது என்று நீதிமன்றம் சொல்ல வேண்டும் - அது ஓர் உண்மை. அது வரலாற்று உண்மை அல்ல, (ஆனால்) எல்லோரும் பார்த்த ஒரு உண்மை.

அதன் இடிப்பு அனைவராலும் பார்க்கப்பட்டது. அதை மீட்டெடுக்க வேண்டும். அவர்களுக்கு (முஸ்லிம்களுக்கு) ஒரு மசூதியை வைத்திருக்க உரிமை இல்லை என்றால், ஒரு மசூதியை கட்ட ஐந்து ஏக்கர் நிலத்தை வழங்குமாறு அரசாங்கத்தை எவ்வாறு வழி நடத்துகிறீர்கள்? ஏன்? மசூதி

இடிக்கப்பட்டது முறையானது அல்ல என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்கள்" என்றார்.

"நானாக இருந்தால் ஒன்று அந்தப் பகுதியில் மசூதியை மீண்டும் கட்டச் சொல்லியிருப்பேன். அல்லது அது சர்ச்சைக்குரியதாக இருந்தால், அந்த பகுதி, 'மசூதியும் இல்லை, அந்த பகுதியில் கோயிலும் இல்லை' என்று சொல்லியிருப்பேன். நீங்கள் ஒரு மருத்துவமனையையோ அல்லது பள்ளிக்கூடத்தையோ, அல்லது கல்லூரியை உருவாக்கலாம் என்று கூறியிருப்பேன்.

வெவ்வேறு பகுதிகளில் ஒரு மசூதி அல்லது கோவில் கட்டவும் கூறியிருப்பேன். அதை இந்துக்களுக்குக் கொடுக்க முடியாது. அப்படித் தரவேண்டும் என்பது விஸ்வ இந்து பரிஷத் அல்லது பஜ்ரங் தளத்தின் கோரிக்கை. இப்போது அவர்கள் எந்த மசூதியையோ, வேறு எதையுமோ இடிக்க முடியும். அவர்கள் அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்று வந்தனர்; இப்போது அவர்கள் நீதித்துறையின் ஆதரவையும் பெறுகிறார்கள். நான் மிகவும் கலக்கம் அடைகிறேன். பெரும்பாலோர் இதை இப்படித் தெளிவாகச் சொல்லப்போவதில்லை " என்று கூறியுள்ளார் நீதியரசர் கங்குலி." (9)

உச்ச நீதிமன்றத்தின் நிலையே இப்படி என்றாலும் நீதித்துறையில் நீக்கமற நிறைந்திருக்கும் பார்ப்பனர்களின் ஆதிக்கம்,அவர்களின் மதப்பற்று,அவர்களின் மத விழாக்களில் பங்கேற்பு என்று அறிவியல் மனப்பான்மைக்கு எதிரான மனப்பான்மையை இந்திய நீதிமன்றங்கள் கொண்டிருப்பதைக் காண முடிகிறது.

## ஊடகங்களும் அறிவியல் மனப்பான்மையும்:

இந்திய ஊடகங்கள் குறிப்பாக நாளிதழ்கள்,வார இதழ்கள், மாத இதழ்கள் போன்ற இதழ்களும், தொலைக்காட்சி போன்ற ஊடகங்களும் நினைத்தால் இந்தியாவில் அறிவியல் மனப்பான்மையை மிகப்பெரும் அளவிற்கு வளர்த்தெடுக்க முடியும். ஆனால் நீதிமன்றங்கள் முழுக்கப் பார்ப்பனரால் நிரப்பப்பட்டிருப்பதைப் போலவே ஊடகங்கள் முழுக்கப் பார்ப்பனர்களே இருக்கின்றனர். இந்திய ஒன்றியத்தில் இருக்கும் பல்வேறு ஊடகங்கள்,செய்தித்தாட்கள் போன்றவை ராசி,நல்ல நேரம் என்று பல்வேறு மூட நம்பிக்கை சார்ந்த செய்திகளை ஒலி &ஒளி பரப்பி,செய்தி பரப்பி அறிவியல் மனப்பான்மைக்கு எதிராக உள்ளனர்.

அறிவியல் சார்ந்த கட்டுரைகள்,அறிவியல் மனப்பான்மையைத் தூண்டும் வகையிலான கட்டுரைகள், செய்திகள் போன்றவை மிகச்சிறிய அளவிலேயே ஊடகங்களில் இடம் பெறுகின்றன.தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படும் குறுந்தொடர்கள்(சீரியல்கள்) அறிவியல் மனப்பான்மையை அழித்தொழிக்கும் வேலையை மிகச்சிறப்பாகச் செய்கின்றன. பத்தாம் பசலித்தனமான உரையாடல்களும்,மாந்தீரிகம்,பூசை,புனஸ்காரம்,சோதிடம்,ஜாதகம்,பரிகாரம் என முழுக்க முழுக்க அறிவியலுக்கு எதிரான கருத்தியல்களும் தொலைக்காட்சித் தொடர்கள் வழியாகப் பரப்பப்படுகின்றன.இதிகாசக் கதை மாந்தர்களைக் கடவுளாகக் கட்டமைத்ததில் இந்திய தொலைக்காட்சிகளுக்குப் பெரும் பங்கு உண்டு.

இப்படி ஒளிபரப்பும் ஊடகங்கள் இந்த மூட நம்பிக்கைகளுக்கு எதிரான் கருத்துகளை ஒளிபரப்புவதில்லை.ஒரு மூட நம்பிக்கை பற்றிய செய்தியை ஒளிபரப்புவர்கள்,அதற்கு எதிரான கருத்துகளையும் இணைத்துச் செய்தியில் சொல்லவேண்டும். அப்போதுதான் ஊடகத்தின் வழியாகப் பார்ப்பவர்கள் இரண்டு விதக் கருத்துகளையும் தெரிந்து கொள்ளமுடியும்.ஆனால் ஊடகங்கள் ஒருபக்க செய்தியை மட்டுமே பரப்புகிறார்கள்.

நவீன அறிவியல் கண்டுபிடிப்புகளான இணையம்,வாட்சப்,முக நூல்,டெலிகிராம்,டுவிட்டர்,லிங்டன்,இன்ஸ்ட்ராகிராம் என்று அனைத்து ஊடகங்களிலும் அறிவியலுக்குப் புறம்பான செய்திகள் நிரம்பி வழிகின்றன.கஞ்சா போன்ற போதைப் பொருட்களை விற்பதற்குத் தனித்தனிக் குழுக்களை அமைத்துக் கொள்வதைப் போல மூட நம்பிக்கைகளைப் பரப்புவதற்கும் தனித்தனி குழுக்களை அமைத்துக்கொள்கின்றனர்.

மூட நம்பிக்கைகளுக்கு எதிரான நடவடிக்கைகள் திராவிடர் கழகம் போன்ற அமைப்புகளால் தமிழ் நாட்டில் எடுக்கப்படுகின்றன. 'மந்திரமா? தந்திரமா ?' என்ற நிகழ்ச்சியினை மக்கள் மத்தியில் 1 மணி நேரம் ,2 மணி நேரம் எனச்செய்து காட்டி ,மந்திரவாதிகள்,சாமியார்கள் செய்யும் பல்வேறு ஏமாற்று வித்தைகளை அம்பலப்படுத்துகின்றனர். இந்திய நாத்திகக் கூட்டமைப்பில் இருக்கும் பல்வேறு மாநிலங்களைச்சார்ந்த 70க்கும் மேற்பட்ட அமைப்புகள் அந்தந்த பகுதிகளில் இப்படி மூட நம்பிக்கைகளை எதிர்த்துப் பிரச்சாரம் செய்கின்றனர். ஆனால் ஆன்மிகச்செய்திகள் என்று பல்வேறு மூட நம்பிக்கை செய்திகளை ஒளிபரப்பும் ஊடகங்கள் இப்படிப்பட்ட அறிவியல் மனப்பான்மையை வளர்க்கும் நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதில்லை.இதனையும் ஒளிபரப்ப வேண்டும்.

## வானவியல் நிகழ்வுகளும் அறிவியல் மனப்பான்மையும்

சூரிய கிரகணம்,சந்திர கிரகணம் போன்றவை வானவியல் நிகழ்வுகள்.அது எப்படி நிகழ்கிறது என்பது அறிவியல் பாடம் படிக்கும் அனைவரும் அறிவர். ஆனால் கிரகணங்களை வைத்து பல்வேறு மூட நம்பிக்கைகள் இந்தியாவில் நிகழ்கின்றன. திராவிடர் கழகம் ,பகுத்தறிவாளர் கழகம் அமைப்புகள் இந்த மூட நம்பிக்கையை முறியடித்து அறிவியல் மனப்பான்மையைப் பரப்பும் வண்ணம் பல்வேறு செயல்பாடுகளை நடத்துகின்றனர்.

'சூரிய கிரகணத்தின்போது கர்ப்பிணி பெண்கள் வெளியில் வரக்கூடாது என்றும், இந்த நேரத்தில் சாப்பிடுவது கூடாது என்றும் பல ஆண்டுகளாக நம்பப்பட்டு வருகிறது. ஆனால், இதனால் உடலுக்கு தீங்கு என்று அறிவியல்பூர்வ சான்றுகள் இல்லை எனவும், இது மூடநம்பிக்கை என்று திராவிட இயக்கங்கள் தெரிவித்து வருகின்றனர்.

பெரியார் திடல் இந்த நிலையில் இன்று(25.10.2022) மாலை கிரகண மூடநம்பிக்கை ஒழிப்பு நிகழ்வை திராவிடர் கழகம் சென்னையில் உள்ள பெரியார் திடலில் நடத்தி இருக்கிறது. கிரகணம் உச்சத்தில் தெரியும் நேரமான மாலை 5:30 மணிக்கு சிற்றுண்டு விருந்து நடத்தப்பட்டது. இதில் கர்ப்பிணி பெண்களும் கலந்துகொண்டார்கள். இதில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்."(10) தொடர்ச்சியாக ஆண்டுதோறும் இப்படி விழிப்புணர்வை உண்டாக்கும் வகையிலான நிகழ்வுகளை திராவிடர் கழகம்,பகுத்தறிவாளர் கழகம் நடத்துகிறது. இந்தியா முழுவதும் பல்வேறு அமைப்புகள் இப்படிப்பட்ட விழிப்புணர்வை நிகழ்த்துகின்றனர். ஆனால் சூரிய கிரகண நேரத்தில் கோயில்கள் அடைக்கப்படுகின்றன. மிகப்பெரிய அளவிற்கு மூட நம்பிக்கை சார்ந்த,அறிவியலுக்குப் புறம்பான கருத்துகள் இந்த வானவியல் நிகழ்ச்சிகளை வைத்துப் பரப்பப்படுகின்றன.பிபிசி நிறுவனம் இந்த ஆண்டு2024,ஏப்ரல் 9ம் தேதி சூரிய கிரகணத்தின்போது அறிவியலாளர் த.வி.வெங்கடேஸ்வரன் அவர்களிடம் பேட்டி கண்டு செய்தியினை வெளியிட்டது.அந்தப் பேட்டியில் ஒரு பகுதி

**"சூரிய கிரகணம் குறித்து மதம், கலாசாரம் சார்ந்து சொல்லப்படுபவை குறித்து...**

சூரிய கிரகணத்தின்போது உணவு கெட்டுப்போகும் என்றெல்லாம் கூட சொல்வார்கள். தர்ப்பை புல்லை உணவில் போட்டால் உணவு நன்றாக இருக்கும், இல்லையென்றால் உணவு கெட்டுப்போய்விடும் என இன்றும் சொல்வார்கள். இதுகுறித்தெல்லாம் 1981-ல் இந்தியா ஆராய்ச்சி செய்துள்ளது. கிரகணத்தின்போது உணவில் நுண்ணுயிரிகள் ஏதேனும் வளருகிறதா என்று ஆராய்ச்சி செய்துள்ளனர். ஆனால், அப்படி எதுவும் வளரவில்லை. இவையெல்லாம் கட்டுக்கதை.

**கர்ப்பிணிகள் வெளியே வரக்கூடாதா?**

அது இந்தியாவில் இருக்கக்கூடிய நம்பிக்கை. அமெரிக்காவில் கர்ப்பிணிகள் நாற்காலியில் அமர்ந்துகொண்டு, கண்ணாடி அணிந்து சூரிய கிரகணத்தைப் பார்க்கின்றனர். அங்கெல்லாம் ஒன்றும் ஆகவில்லை. இந்தியாவில் தோன்றிய ஓர் சூரிய கிரகணத்தின்போது என் மனைவி கர்ப்பமாக இருக்கும்போது பார்த்தோம். என் மனைவிக்கும்

ஒன்றும் ஆகவில்லை. என் குழந்தையும் நன்றாகத்தான் இருக்கிறது.

நியூஜெர்சியில் சமீபத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தை சூரிய கிரகணத்துடன் ஒப்பிடுகிறார்களே, சூரிய கிரகணத்தின்போது திடீர் வெள்ளம் ஏற்படும் என்ற தகவல்களும் இதையொட்டி டிரெண்டானதே?

இது தேவையற்ற அச்சம் காரணமாக பரப்பப்படும் போலிச் செய்தி. தினமும் உலகளவில் சிறிதும் பெரிதுமாக சுமார் 10 ஆயிரம் நிலநடுக்கங்கள் ஏற்படும். ஆனால், சூரிய கிரகணத்திற்கும் நிலநடுக்கத்திற்கோ, வெள்ளத்திற்கோ எந்த தொடர்பும் இல்லை. 'இயற்கை நிகழ்வுகளெல்லாம் கடவுளின் சாபம்' என குழப்புகின்றனர். நாம் பேசிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில்கூட கஜகஸ்தான், ஆப்கானிஸ்தான், நாகசாகி, மஸ்கட், திமூர், ஜம்மு-காஷ்மீர் (அனைத்தும் ரிக்டர் அளவில் 4-க்கும் மேல்) உள்ளிட்ட இடங்களில் நிலநடுக்கம் ஏற்பட்டன.

இந்தியாவில் பண்டைய காலத்திலும் சூரிய கிரகணம் குறித்து இத்தகைய நம்பிக்கைகள் இருந்தனவா?

கிரகணம் குறித்த இத்தகைய நம்பிக்கைகள் பண்டைய இந்தியாவில் இல்லை. இந்தியாவில் 8, 9-ம் நூற்றாண்டுகளில் குறிப்பிட்ட மதம் சார்ந்த அடிப்படைவாதத்தின்போதுதான் அறிவியல் கருத்துக்களுக்கு சவால் ஏற்பட்டது. அதேமாதிரி, ஐரோப்பாவில் 10, 11-ம் நூற்றாண்டுகளிலும் இத்தகைய கண்ணோட்டம் உருவானது.

அரேபிய பகுதிகளிலும் 13, 14-ம் நூற்றாண்டுகளில் இத்தகைய கருத்துக்கள் தோன்றின. எல்லா பகுதிகளிலும் மத அடிப்படைவாதம் எழுந்தபோது தான் இத்தகைய மூடநம்பிக்கைகளும் அறிவியலுக்கு எதிரான கருத்துக்களும் தோன்றின. அமெரிக்காவிலும் இத்தகைய மூட நம்பிக்கைகளை வளர்க்கும் குழுக்கள் உள்ளன." என்று அவர் மிக விளக்கமாகக் கூறியுள்ளார்."(11) .இந்தியாவில் இருக்கும் ஊடகங்களோ ,அரசாங்கமோ அறிவியல் மனப்பான்மை அடிப்படையில் வானவியல் நிகழ்ச்சிகளை மக்களுக்கு விளக்கவேண்டும் என்பதில் முனைப்புக் காட்டவில்லை என்பது கண்கூடு.

## அறிவியல் அறிஞர்களின் அறிக்கை:

2024-ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 100க்கும் மேற்பட்ட அறிவியல் அறிஞர்கள் கையெழுத்திட்டு ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.அதில் ''பொது மக்கள் மத்தியில் அறிவியல் மனப்பான்மையை நீக்கிடவேண்டும் என்னும் நோக்கத்தில் செயல்படுத்தப்படும் 'பல முனை' தாக்குதல்களுக்கு அரசாங்கம் பங்களிப்பதாகவும் அறிவியல் மற்றும் உண்மை ஆதாரங்கள் அடிப்படையிலான சிந்தனைக்கு மாற்றாக இந்திய அரசு செயல்படுவதாகவும் ,அறிவியலுக்கு முரணான நிலைப்பாட்டை அரசு எடுத்திருப்பதாகவும்,இந்தியாவில் இருக்கும் பெரும்பாலான மக்களின் மன நிலையை மாற்ற மதவாதப் போர்வையை எடுத்திருப்பதாகவும் குறிப்பிடும் அவர்கள் இப்படிப்பட்ட அரசின் ''போக்கிற்குத் தாங்கள் ஆதரவளிக்கமுடியாது (12) என்று தெரிவித்துள்ளனர்..''இதனைப் பற்றிய விரிவான செய்தியினை டெலிகிராப் இந்தியா வெளியிட்டுள்ளது.

## செயற்கை நுண்ணறிவும் அறிவியல் மனப்பான்மையும்:

2000-மாவது ஆண்டுகளில் இணைய வசதி உள்ளிட்ட அறிவியல் வளர்ச்சிகள் வந்தபோது அறிவியல் மனப்பான்மை வளரும் என எதிர்பார்த்தோம். ஆனால் இணையம் போன்ற அறிவியல் கருவிகளைப் பழமைவாதிகள் பெருமளவில் பயன்படுத்தி மூட நம்பிக்கைகளைப் பரப்புகின்றனர். அதே போன்று இனிவரும் உலகம் செயற்கை நுண்ணறிவு அடிப்படையில் அமையப்போகிறது. அப்படி உலகில் மிகப்பாய்ச்சலாக வரப்போகும் செயற்கை நுண்ணறி அறிவியல் மனப்பான்மையை வளர்க்குமா? வீழ்த்துமா? என்னும் கேள்வி மிகப்பரவலாக விவாதிக்கப்படுகிறது.

The Nexus என்னும் நூல் யுவால் னோவா ஹராரி என்னும் இத்தாலிய எழுத்தாளரால் எழுதப்பட்டு அண்மையில் வெளிவந்துள்ள நூல்.அதில் செயற்கை நுண்ணறிவு எப்படி ஏற்றத்தாழ்வுகளை இன்னும் கூர்மையாக்கும் என்பதைப் பற்றி எழுதியுள்ளார். (13)அதுமட்டுமல்லாது மதவாதிகள் செயற்கை

நுண்ணறிவைப் பயன்படுத்தி எப்படி எல்லாம் மக்களின் மூளையை மழுங்கடித்து மூட நம்பிக்கைகளைப் பரப்புவார்கள், எப்படி இந்தத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி மக்களைக் கண்காணிப்பார்கள், தண்டிப்பார்கள் என்பதைப் பற்றியெல்லாம் எழுதியுள்ளார். எனவே வருகின்ற எந்த அறிவியல் முன்னேற்றமும் அறிவியல் மனப்பான்மையை மக்களுக்கு ஏற்படுத்திவிடும் என்ற நம்பிக்கையை நமக்குக் கொடுக்கவில்லை. கூர்மையான கத்தியை யார்,எப்படிப் பயன்படுத்துகிறார்கள் என்பதைப் பொறுத்து நல்லது அல்லது கெட்டதை கத்தி செய்வது போலவே இன்றைய இணையமும் நாளைய செயற்கை நுண்ணறிவும் இருக்கிறது.இந்த அறிவியல் தொழில் நுட்பங்களை ஆட்சியாளர்கள் எப்படிக் கையாளப்போகிறார்கள் என்பதே எதிர்கால மக்களின் அறிவியல் மனப்பான்மையைத் தீர்மானிக்கும்.

## சமூக நீதியும் அறிவியல் மனப்பான்மையும்:

ஒன்றிய அரசின் நிர்வாகம் என்பது இன்றைக்கும் இந்தியாவில் உயர்ஜாதியனரான பார்ப்பனர்களின் கையில்தான் இருக்கிறது.பெரும் பொறுப்புகளில் அவர்கள்தான் இருக்கிறார்கள்.அவர்கள் அறிவியல் மனப்பான்மையைக் கடைப்பிடித்தால் தங்கள் பரம்பரைக்குத் தங்களுக்குக் கிடைக்கும் உயர் பொறுப்பும் மரியாதையும் கிடைக்காமல் போய்விடுமோ என்னும் அச்சத்தில் அறிவியல் பற்றி அறிந்திருந்தாலும் அதனின் பலன்களைப் பல்வேறு நிலைகளில் அனுபவித்தாலும் அரசு நிர்வாகத்தில் மதச்சார்பின்மை அடிப்படையில் நிகழ்வுகள் நடைபெறுவதற்குத் தடையாக இருக்கிறார்கள்.மத நம்பிக்கைகளின் அடிப்படையில்தான் நிகழ்வுகள் நடைபெறுகின்றன. ஒன்றிய அரசு மட்டுமல்லாது பல்வேறு மாநில அரசுகளின் நிர்வாகமும் அந்த அடிப்படையில்தான் மதச்சார்பின்மைக்கு எதிராகவும்,அறிவியல் மனப்பான்மைக்கு எதிராகவும் நடைபெறுகின்றன.

நீதித்துறையில் நிகழும் நிகழ்வுகளும் இவற்றையே எதிரொலிக்கின்றன.அண்மையில் விநாயக சதுர்த்தி விழா உச்சநீதிமன்ற நீதிபதி வீட்டில் நடைபெற்றதும் அதில் இந்திய தலைமை அமைச்சர் கலந்து கொண்டதும் இதனைத் தெளிவாக விளக்கும். ஊடகங்கள் நினைத்தால் அறிவியல் மனப்பான்மையை வளர்ப்பதை எளிதாகச் செய்ய இயலும்.

திராவிடர் கழகத்தின் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிவியல் சிந்தனை,அறிவியல் மனப்பான்மை ஏன் தேவை என்ற் கேள்விக்கு அதுதான் சமூகத்தை முன்னேற்றுவதற்கான அடிப்படைத்தேவை என்று குறிப்பிடுகிறார். ''சமூக நீதி, சமத்துவம், தொழில்மயமாக்கல், உற்பத்தி, சுகாதாரம், கல்வி போன்றவற்றில் தமிழகத்தைச் சிறந்த மாநிலமாக மாற்றியது எது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? அறிவியல் சிந்தனையில் நாம் பின்பற்றும் திராவிட அரசியலால்தான் அதெல்லாம் சாத்தியமானது.'' என்று கி. வீரமணி கூறினார்.

அறிவியல் சிந்தனையை மதத்திற்கோ அல்லது இந்து மதத்திற்கோ எதிரானது என்று குழப்பிக் கொள்ள வேண்டியதில்லை. இந்து மதத்திற்கு எதிரானது என்று தி.மு.க மீது அதன் எதிரிகளால் அடிக்கடி குற்றச்சாட்டுச் சுமத்தப்படுகிறது என்று கூறிய வீரமணி, "நாங்கள் எங்களுடைய மக்களுக்கு எதிரானவர்கள் என்று எங்களுடைய எதிரிகள்தான் கூறுவார்கள். பார்ப்பனர்களுக்கு எதிராக எங்களிடம் எதுவும் இல்லை. ஆனால், பார்ப்பனியம் மற்றும் பார்ப்பன சக்திகளுக்கு எதிராக எங்களிடம் ஏதோ இருக்கிறது. நமது பார்ப்பன எதிர்ப்பு என்பது மனிதாபிமானமாக இருப்பதுதான். 'பிராமண ஆதிக்கம்' என்ற வார்த்தையை பெரியார் கொண்டு வந்தார். அதுதான் இன்றும் நாட்டை நடத்தும் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் அதிகாரிகளின் ஜாதியைப் பார்த்தால் உண்மையாக இருக்கிறது" என்று வீரமணி கூறினார்."(14) என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டிருக்கிறது. இன்றைக்கும் இந்திய ஒன்றியம் முழுவதும் இருக்கும் பிராமண ஆதிக்கம்(Braminocracy) தான் இந்தியாவின் முன்னேற்றத்திற்கு பெரிதும் தடையாக இருக்கிறது.

2018-ல் டுவிட்டர் போன்ற சமூக ஊடகங்களில் #SmashBrahmanicalPatrriachy என்ற சொல்லாடல்

அதாவது 'பிராமண ஆதிக்கத்தை ஒழிப்போம் 'என்ற சொல்லாடல் பெரிய அளவிற்கு விவாதிக்கப்பட்டதும் அதன் தொடர்ச்சி இன்றும் கூட ஒன்றிய அளவில் தொடர்வதைக் காண்கின்றோம்..

"இனிவரும் சுயமரியாதை-அறிவியக்க-சமதர்ம உலக ஆட்சியில் மத விஷயத்தைப் பற்றி ஆதரித்து எவராவது தெருவில் நின்று பேசினாலும்,தெருவில் புஸ்தகங்கள் வைத்து விற்பனை செய்தாலும் ,பத்திரிக்கைகளில் எழுதினாலும் அவர்களெல்லாம் கடுமையான தண்டனைக்குள்ளாவார்கள் என்று சட்டம் செய்யப்படுமானால் — உலக மக்கள் பிரி வினையற்று,குரோதமற்று,மடமையாற்றுத் தோளாடு தோள் புனைந்து தோழர்கள் போல வாழமுடியும் என்பதோடு,மதத் தத்துவங்களின் பலனால் இன்று உலக மக்கள் அனுபவிக்கும் உயர்வு தாழ்வு நிலை ஒழித்து,சகல துறைகளிலும் சமத்துவத்துடன் வாழமுடியும் என்றும் வற்புறுத்திக் கூறுகிறோம்"(15) என்று தந்தை பெரியார் குறிப்பிடுகின்றார்.

இந்திய மக்கள் மட்டுமல்ல உலகமக்கள் ஒற்றுமையாக இருப்பதற்கும்,வளர்ச்சி பெறுவதற்கும் அடிப்படைத்தேவை அறிவியல் மனப்பான்மையே. அறிவியல் மனப்பான்மைக்கு மிகப்பெரிய எதிரிகளாக மதங்களும்,அவை பின்பற்றச்சொல்லும் சடங்குகளும் இருக்கின்றன.மதங்களே மூட நம்பிக்கைகளை உற்பத்தி செய்யும் உற்பத்திக் கூடங்களாக இருக்கின்றன. இந்தியாவில் பார்ப்பனர்களும் பார்ப்பனியமும் மூட நம்பிக்கைகளின் பாதுகாவலர்களாக இருக்கின்றனர். பரப்புவர்களாக இருக்கின்றனர்.அதிகாரத்தின் துணையோடு பரப்ப்பப்படும் மூட நம்பிக்கைகளை முறியடிக்க அறிவியல் மனப்பான்மையே துணை.. இந்திய அரசியல் சட்டத்தின் 51A(H) பிரிவும் அறிவியல் மனப்பான்மையை வலியுறுத்துகிறது.எனவே அரசியல் சட்டத்தின் அடிப்படையிலும் அறிவியல் மனப்பான்மையைப் பரப்பவேண்டியது இன்றைய இந்திய ஒன்றியத்தில் இருக்கும் ஒவ்வொருவரின் கடமையாகும்.

## துணை நூல்கள் / இணைய தளங்கள்:


1) 'அறிவியல் மனப்பான்மையின் அவசியம்', ஜோசப் பிரபாகர்,. இந்து தமிழ் நாளிதழ் திசை இணைப்பு (5.3.2024)

2) ஆதிப்பெண்ணின் அடிதேடி, ஓவியா, கருஞ்சட்டைப் பதிப்பகம், பக்கம் 32

3) விகடன் இணையதளம்,,15 மே 2022,( https://www.vikatan.com/government-and-politics/sprinkle-cow-urine-in-house-to-remove-obstacles-says-up-minister

4) விதி நம்பிக்கையை வீழ்த்திய அதி நவீன மருத்துவங்கள்,மருத்துவர் இரா.கவுதமன்,திராவிடர் கழக(இயக்க வெளியீடு),பக்கம் 5

5) நக்கீரன் இணையதளம் https://www.nakkheeran.in/24-by-7-news/india/eating-meat-causes-cloudbursts-say-iit-mandi-director-laxmidhar-behera

6) தந்தை பெரியார் ,விடுதலை கட்டுரை 9-2-1948

7) நியூஸ் 7 இணையதளம் https://news7tamil.live/complaint-against-maha-vishnu-on-behalf-of-tamil-nadu-association-for-all-kinds-of-disabilities-and-defenders-rights.htm

8) விகடனின் இணையதளம் https://www.vikatan.com/government-and-politics/justice-k-chandru-pens-a-farewell-article-about-chief-justice-dy-chandrachud

9) https://www.bbc.com/tamil/50372185

10) https://tamil.oneindia.com/news/chennai/dravidar-kalagam-organised-solar-eclipse-food-in-periyar-thidal/articlecontent-pf790622-482188.html

11) https://www.bbc.com/tamil/articles/ceke957d4yvo

12) டெலிகிராப் இந்தியாவின் இணையதளம் https://www.telegraphindia.com/india/scientists-flag-erosion-of-scientific-temper-accuse-modi-government-of-pushing-false-narratives/cid/2004365

13) https://tosinadeoti.medium.com/book-review-nexus-by-yuval-noah-harari-e5d3be4a425d

14) இந்தியன் எக்ஸ்பிரஸ் இணையதளம்,ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் பேட்டி.. https://tamil.indianexpress.com/tamilnadu/k-veeramani-turns-90-dravidian-politics-tamilnadu-551442/

15) தந்தை பெரியார்,விடுதலை கட்டுரை, 9-2-1948.

## ஆசிரியர் குறிப்பு :

முனைவர். நேரு, தமிழகப் பகுத்தறிவு எழுத்தாளர் மன்றத்தின் மாநிலத் தலைவர் ஆவார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழிலக்கியத் துறையில், ‘இறையன்பு படைப்புகளில் தன்னம்பிக்கையும் மனித நேயமும்' என்ற தலைப்பில் முனைவர் பட்டம் பெற்றவர். பெரியார் பட்டயச் சான்றிதழும் பெற்றவர். பி.எஸ்.என்.எல் நிறுவனத்தில் அதிகாரியாகப் பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்ற இவர், தமிழ்நாட்டில் மதுரை மாவட்டம் சாப்டூரில் பிறந்தவர். இவர், 'பங்குனி உத்திரமும் பள்ளிக்கூடமும்', 'சூரியக்கீற்றுகள்', ‘சொற்களின் கூடுகளுக்குள்' எனும் கவிதைத் தொகுப்புகளும், 'நெருப்பினுள் துஞ்சல்' எனும் சிறுகதைத் தொகுப்பையும் எழுதி வெளியிட்டுள்ளார். ‘சங்கப்பலகை' எனும் நூல் மதிப்புரைகளின் தொகுப்புநூலும் வெளிவந்துள்ளது.

இவரின் ஆய்வேடு, நூலாக்கம் செய்யப்பட்டு, 'இறையன்பு படைப்புகளில் தன்னம்பிக்கையும் மனித நேயமும்' என்னும் நூலாகச் சில நாட்களுக்கு முன் அச்சாக்கப்பட்டு வெளிவந்துள்ளது.

‘திருக்குறள் வலியுறுத்தும் உயிர்ச்சூழலும் இன்றைய உலகச்சூழலும்', 'கடவுளையும் சடங்குகளையும் வள்ளுவம் புறக்கணிக்கிறது', 'தமிழ்த் துறவிகளும் வள்ளுவர் கூறும் தவமும்', 'ஆரிய எதிர்ப்புக்கு முன்னுரை-திருக்குறளின் பாயிரம்', 'செல்வமும் குடிமையும்', 'ஊழும் கூழும் — பகுத்தறிவுப் பார்வை' போன்ற தலைப்புகளில் இவரின் கட்டுரைகள் திருக்குறள் ஆய்வுத் தொகுப்புகளில் வெளிவந்துள்ளன. உலக/இந்திய மாநாடுகளில் கலந்துகொண்டு ஆய்வுக்கட்டுரைகள் அளித்தவர். பல்வேறு இலக்கிய இதழ்களிலும், சமூக இதழ்களிலும், இணையத்திலும் பரவலாக எழுதி வருபவர்.

# திராவிடப்பொழில் ஆய்வரங்கம்

பெரியார் பன்னாட்டு அமைப்பு அமெரிக்கா சார்பாக திராவிடப்பொழில் இதழ் (ஏப்ரல் 2024 -ஜீன் 2024) ஆய்வுக்கூட்டம் ஆகத்து 4,2024 ஞாயிற்றுக்கிழமை ,தமிழ் நாட்டு நேரம் இரவு 7.30 மணிக்கு இணைய வழிக்கூட்டமாக நடைபெற்றது

பெரியார் பன்னாட்டு மைய இயக்குநர் மருத்துவர் சோம.இளங்கோவன் அவர்கள் இணையவழியிலான கட்டுரைகள் ஆய்வரங்கத்தைத் தொடங்கி வைத்தார். அவர் தனது உரையில் 'தனி நாயகம் அடிகளார் தமிழைத் தமிழர்கள் மட்டும் அறிந்து கொண்டால் பத்தாது,உலக மக்கள் அறிந்து போற்றவேண்டும் என்ற ஆவலில் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தை நிறுவி,,அதன்மூலமாக ஓர் அருமையான இதழை வெளியிட்டார்.பல வெளி நாட்டு வல்லுநர்கள் கட்டுரைகள் எழுதி, அதில் வந்தது, மிகவும் பெருமையாக இருந்தது.அது நின்று விட்ட காலத்திலே நாம் ஏதாவது செய்ய வேண்டும் என்று ,பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்தின் சார்பிலே இந்த ஆராய்ச்சி இதழ் தொடங்கப்பட்டது. திராவிடப்பொழில் என்னும் பெயருடன் திராவிட வரலாறு,திராவிடச்சிந்தனைகள் இவை வெளி உலகத்திற்குத் தெரியுமாறு தமிழிலும் ஆங்கிலத்திலும் கட்டுரைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. முனைவர் வா.நேரு,திராவிடப்பொழில் இதழின் ஆசிரியர்.பகுத்தறிவு எழுத்தாளர் மன்றத்தலைவர். அவர் இந்த நிகழ்வை நடத்துவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன. நிகழ்விற்கு வந்திருக்கும் அனைவரையும் வரவேற்கிறேன்' என்று குறிப்பிட்டார்.

நிகழ்வினை திராவிடப்பொழில் இதழின் ஆசிரியர் குழுவின் உறுப்பினரான முனைவர் வா.நேரு ஒருங்கிணைத்தார். திராவிடப்பொழில் ஜூன் ஆகஸ்ட்-2024 இதழில் மொத்தம் 5 கட்டுரைகள் வெளிவந்துள்ளன.அந்தக் கட்டுரைகளில் இரண்டு கட்டுரைகளை இந்த ஆய்வரங்கத்தில் ஆய்வு செய்ய இருக்கிறார்கள் எனக் குறிப்பிட்டு,பேரா.ச.ஜீவானந்தம் அவர்கள் எழுதிய 'சுயமரியாதை இயக்கமும் பெண்ணின விடுதலையும்'. என்னும் கட்டுரையை ஆய்வு செய்யக் கோதை ஜெயராஜ் அவர்களை அவைக்கு அறிமுகப்படுத்தி அவரை உரையாற்ற அழைத்தார்.கோதை ஜெயராஜ் அவர்கள் மென்பொறியாளர்.அமெரிக்காவில் தமிழ்ப் பள்ளியின் ஆசிரியராகவும் பணியாற்றுகின்றார். தன்னார்வலராகப் பல குழுக்களிலும் நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று வருகின்றார்.தமிழில் கவிதை,கதை,கட்டுரைகள் கொடுத்த படைப்பாளர்.பட்டிமன்றப் பேச்சாளர். தற்போது கெரலோலினா தமிழ்ச்சங்கத்தின் இயக்குநர் பொறுப்பில் இருக்கின்றார்.

### கோதை ஜெயராஜ் அவர்கள்:

நல்லதொரு அறிமுகத்தை எனக்கு அளித்தமைக்கு நன்றி.சமூக நீதி சீர்கெடும்போதெல்லாம் அநேகமான தலைவர்கள் தலையெடுத்து சமூக அநீதிக்கு எதிராகக் குரல் கொடுத்திருக்கின்றனர்.இந்த வரிசையில் வரும்போது சுயமரியாதை இயக்கமானது பெண் விடுதலையை முதல் கொள்கையாகக்கொண்டு பெண்களின் மறுமலர்ச்சிக்கும், சீர்திருத்தத்திற்கும் ஏராளமான களப்பணிகளைச்செய்திருக்கின்றது. இப்படிப்பட்ட களப்பணிகளையும் முன்னெடுப்பு களையும் வர்லாற்றுத் தரவுகளோடு பேரா.ஜீவானந்தம் அவர்களுடைய கட்டுரை நமக்கு அடுக்கி அடுக்கி வைக்கிறது.ஆணாதிக்கத்திற்கு எதிரான ஒரு சமூகப்போர்.இது ஏன் தேவைப்படுகிறது? தந்தை பெரியாருக்கு இரண்டே இரண்டு சமூகத்தீமைகள்தான் அச்சுறுத்தலாக இருக்கிறது.. ஒன்று தீண்டத்தகாமை. பிறப்பின் அடிப்படையில் ஒரு மனிதனை ஒரு

புழுவின் கீழாகவும் மதிப்பது, அடிப்படை உரிமைகளை மறுப்பது ,நடத்துவது ஒரு சமூகத்தீமை என்றால், பெண்ணாகப் பிறந்ததற்காகவே ஆணினுடைய அடக்கத்தில்தான் பெண் என்றும்,ஆணுக்காகவே பிறந்தவள் பெண் என்றும் ,பிறப்பிலேயே பெண்ணுக்கு உரிமைகள் மறுக்கப்படுவதைப் பெரியார் அவர்கள் சாடியிருக்கிறார்.இந்த இரண்டு சமூகத்தீமைகளும் இந்தியாவை விட்டு அறவே நீங்கவேண்டுமென்று அவர் போராடியிருக்கிறார்.சமூகப்போர் என்பது அந்தக் காலத்தில் தேவைப்பட்டிருக்கிறது. பெண் என்பவள் ஆன்மிக அடிப்படையிலும் தார்மீக அடிப்படையிலும் அடிமைப்படுத்தப்பட்டு ,பொதுவெளியானது அவளுக்கு மறுக்கப்படுகிறது. பெண்ணுக்கு பொதுவெளியை மறுத்து ,அவளைச் சமையல் அறைக்குள்ளேயே தள்ளிவிடுகிறார்கள் என்று சுயமரியாதைக்காரரான குஞ்சிதம் அம்மா கவலைப்படுகிறார்.இன்னும் ஏராளமான செய்திகள் இந்தக் கட்டுரையில் இருக்கின்றன.நீலாவதி அம்மையார் என்ன சொல்கிறார் என்றால்'பெண்களை நாம் எப்படி நடத்துகின்றோம்? ஆண்களின் இச்சைக்கு ஏற்படுத்தக்கூடிய ஒரு சொத்தாகவும் .,ஒரு பொருளாகவும் நாம் பார்க்கின்றோம். ஆண்களுக்காகக் குழந்தைகளை ஈன்று கொடுக்கும் ஓர் இயந்திரமாகப் பெண்களை வைத்திருக்கிறார்கள் என்றெல்லாம் கவலைப்படுகிறார் நீலாவதி அம்மையார். சமூக அநீதியை நீக்குவதற்காக,பெண்களுக்கு நீதி கிடைப்பதற்காகச் சுயமரியாதை இயக்கம் என்னவெல்லாம் செய்திருக்கிறது என்பதை இக்கட்டுரை சுட்டிக் காட்டுகிறது.

ஆண்,பெண் சரி நிகர் சமானம் என்று சொல்கின்றோம். பெண்ணுரிமை என்றால் என்ன?பெண்ணுரிமை என்றால் பெண்ணுக்குக் கோபம்,வன்மம்,ஆளுமை மற்றும் வீரம் •••இவையெல்லாம் இருக்கின்றன. ஆணுக்கு மட்டும்தான் இவையெல்லாம் இருக்கின்றனவா?பெண் என்பவளை நாம் எப்படி எல்லாம் சித்தரிக்கின்றோம்.?புலவர்கள் பெண்களை எப்படிச்சித்தரிக்கிறார்கள்•••மானுடனும் மீனுடனும்.. ஒரு சாதுவான பொருட்களுடனும் அல்லது ஏதேனும் பொருட்களுடனும்..நாம் பெண்களை வர்ணனை செய்கிறோமே தவிர ஏன் பெண்களுக்குக் கோபம் இருக்காதா?வன்மம் இருக்க்க்கூடாதா?ஆணுக்கு என்னவெல்லாம் உணர்ச்சிகள் இருக்கிறதோ அதுவெல்லாம் பெண்ணுக்கு இருக்கிறது.ஏனென்றால் ஆணுக்குப் பெண் சரி நிகர் சமானம் என்கிறது சுயமரியாதை இயக்கம்..

ஆணும் பெண்ணும் சமம்.இதை அறியாதவர் மண்டையில் மண் என்று எனக்குத் தோன்றியது. பெரியார் என்ன சொல்கிறார் என்றால் 'காலையில் பெண்கள் எழுந்து ஆண்களைக் கும்பிட வேண்டும் என்றால்,ஆண்களும் எழுந்து பெண்களைக் கும்பிடவேண்டும்.அதுதான் சரி நிகர் சமானம் என்று . நான் சொல்வதெல்லாம் இக்கட்டுரையில் கொடுக்கப்பட்டுள்ள தரவுகளின்படி.1929-ல் நடந்த மாநாட்டில் பேசப்பட்ட தரவுகள்.அப்படியென்றால் பெண்களின் சுயமரியாதைக்காகவும் ,பெண் விடுதலைக்காகவும் சுயமரியாதை இயக்கம் எப்படி எல்லாம் போராடி இருக்கிறது என்பது நமக்குத் தெரிகிறது.

அப்புறம் பெரியார் சொல்கிறார் ஆண்மை ஒழிய வேண்டும் என்று சொல்கிறார் ஆண்மை என்னும் கருத்தியலில் ஒழிய வேண்டும் என்று சொல்கிறார் எனக்கு என்ன தோன்றுகிறது என்றால் சின்ன வயதில் ஒரு பெண் 18 வயது நிரம்பியவளாக இருந்தால் கூட அவளுக்குத் துணையாக யாரை அனுப்புவார்கள் என்றால் ஒரு நான்கு வயது ஆண் பிள்ளையை அனுப்புவார்கள் .கேட்டால் சாண் பிள்ளை என்றாலும் ஆண் பிள்ளை என்பார்கள். பெருமை பேசுவார்கள் எனவேதான் அந்த ஆண்மை என்னும் கருத்தியல் ஒழிய வேண்டும் என்று பெரியார் சொல்கிறார் என்று இந்தக் கட்டுரை சொல்கிறது.

அடுத்ததாக ஒரு பெரிய அச்சுறுத்தல் பார்த்தீர்கள் என்றால் மொழி அரசியல். இந்தப் பெண் உடலில் எத்தனை அரசியல்தான் உண்டு என்று எனக்கும் தோன்றியது .கற்பு என்ற சொல், வேசி என்ற சொல், விதவை என்ற சொல், விபச்சாரி என்ற சொல்லெல்லாம் யாருக்கு இருக்கிறது? பெண்ணுக்கு அல்லவா••• இதற்குச் சரி சமமான வார்த்தைகள்

ஏதாவது ஆணுக்கு இருக்கிறதா என்று சிந்தித்துப் பார்த்தால்... இல்லை. தோழர்களே, சிந்தித்துப் பாருங்கள். கற்பு என்பது கட்டாயமாகப் பெண்களுக்கு மட்டும் புகுத்தி விட்டு வேசி என்ற சொல்லையும் பெண்ணுக்குக் கொடுத்திருக்கிறார்கள். விபச்சாரம் என்பது என்ன? ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து செய்வது. ஆனால் அதற்கு ஒரு பெண் மட்டுமே பொறுப்பு என்று ஆக்கி விபச்சாரி என்ற பட்டம் கொடுப்பதைப் பெரியாரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இவளை விபச்சாரி என்று கூப்பிட்டால் அவனை விபச்சாரன் என்று கூப்பிட வேண்டும் என்று சொல்கின்றார்.

அப்புறம் விதவைத் திருமணம் என்று சொல்கிறீர்கள். அதைப்போல விதவன் திருமணம் என்று ஏன் சொல்வதில்லை? என்று கேட்கிறார். இப்படி எல்லாம் பல நல்ல வரலாற்றுத் தரவுகளைக் கொண்டது இக்கட்டுரை. எனது சிந்தனையை இன்னும் ஆழப்படுத்திய போது வாழாவெட்டி என்ற வார்த்தையும் மலடி என்ற வார்த்தையும் இன்னும் நாம் கேட்டுக் கொண்டேதான் இருக்கிறோம். பெண்களை மட்டும் குறை சொல்லும் சமூகம் இன்னும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனால் பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே சுயமரியாதை இயக்கமும் சுயமரியாதைக்காரர்களும் பெண்களுக்காகப் போராடி பல முன்னெடுப்புகளை எடுத்து இருக்கிறார்கள் பல மாநாடுகளில் முழங்கி இருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரிய வருகிறது.

நாம் பெண்களை எப்படி அடிமைப்படுத்துகிறோம்?.. அழகு என்கின்ற வார்த்தையின் மூலம் அடிமைப்படுத்துகிறோம். எப்பப் பார்த்தாலும் நீ அழகாய் இருக்கிறாய் என்று சொன்னால் பெண்கள் நம்பி விடுகிறார்கள்.இன்னும் அதை நம்புகிறார்கள். ஓ பெண்ணென்றால் அழகாக இருக்க வேண்டுமா? எந்தத் திறமையும் தேவையில்லையா? என்று கேட்பதில்லை. இன்றைக்கும் அழகுதான் திறமை என்று எண்ணிக் கொண்டிருக்கிற பெண்கள் ஏராளம் இருக்கிறார்கள். அழகாகப் பெரியார் கேட்கிறார் 'பெண்கள் எல்லாம் வெறும் நகை மாட்டும் ஸ்டாண்டா?' என்று. நகைகளை மாட்டிக் கொண்டால் நான் அழகாக இருப்பேன் என்ற கருத்தை யார் பெண்களிடம் திணித்தது?. இந்தச் சமூகம் திணித்திருக்கிறது. நீண்ட முடியை வளர்த்துக் கொள்ள வேண்டும், அழகு சாதனப் பொருட்களைப் பயன்படுத்த வேண்டும் என்பதெல்லாம் சமூகம் பெண்களை அடிமைப்படுத்துவதற்குக் கையாண்டு இருக்கிறது. பெண்கள் வெளியே வர வேண்டும்.

மனு பாக்கர் என்பவர் துப்பாக்கி சுடும் போட்டியில் ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்று இருக்கிறார் .இப்போது செய்தித்தாள்களில் வந்திருக்கிறது. இப்போது பெண்கள் எல்லாம் வளர்ந்து விட்டார்கள் என்று சொல்லலாம். துப்பாக்கி சுடும் போட்டியிலேயே பெண்கள் வந்து வெண்கலப் பதக்கத்தை இந்தியாவிற்கு வாங்கி கொடுத்திருக்கிறார்கள். சுயமரியாதைக்காரர்கள் போன்றவர்கள் எல்லாம் எப்படிக் களப்பணி செய்திருந்தால் இவையெல்லாம நடந்திருக்கும் என்று எனக்கு ஆனந்தமாக இருந்தது. ஆனால் சமூக வலைத்தளங்களில் பார்த்தால் அதில் என்ன எழுதி இருக்கிறது தெரியுமா? நண்பர்களே, அந்தப் பெண் எவ்வளவு அழகாக இருக்கிறாள், அந்தப் பெண்ணை எந்தக் கதாநாயகியோடு ஒப்பிடலாம் என்று எழுதிக்கொண்டு இருக்க்கிறார்கள் பின்னோட்டத்தில். சாதனையாளர் அவர், ஒரு வீராங்கனை என்றாலும் சமூகம் அந்தப் பெண்ணை அடிமைப்படுத்துவதற்காக அழகு என்ற போர்வையை ஒளித்து வைத்துக் கொண்டு இருக்கிறது எப்போதும்.

அடுத்ததாக இந்தக் கட்டுரை சொல்லும் முக்கியமான செய்தி பெண்களின் தேர்வு ஓர் ஆண் என்ன சொல்கிறானோ அதைத்தான் பெண் செய்ய வேண்டும் .ஓர் ஆண் முன்னாடி நடந்தால் பின்னாடியே பெண் நடக்க வேண்டும்.இப்படித்தான் சமூகத்தில் நடந்து கொண்டிருக்கிறது ஒரு பெண் தனியாக ஒரு முடிவையும் எடுக்க முடிவதில்லை. அப்போது இவற்றையெல்லாம் எதிர்த்து சுயமரியாதை இயக்கமும் சுயமரியாதை வீரர்களும் அழகாகப் போராட்டங்களை நடத்தி அதற்கான முயற்சிகளைச் செய்திருக்கிறார்கள். பெரியார் சொல்கிறார் 'ஒரு பூனை எலிகளுக்கு விடுதலை வாங்கித் தர முடியுமா? நரி

கோழிகளுக்கும் ஆடுகளுக்கும் விடுதலை வாங்கித் தர முடியுமா? என்னதான் ஆண்கள் பெண்ணியம் பேசினாலும், ஆண்கள் பெண் விடுதலை பற்றிப் பேசினாலும், யார் பெண் விடுதலை பற்றிப் பேச வேண்டும்? பெண்கள் பேச வேண்டும்.யாருக்குச் சுதந்திர வேண்டுமோ யாருக்கு விடுதலை வேண்டுமோ அவர்கள்தான் அதை உணர்ந்து கேட்க வேண்டும் என்று பெரியார் சொல்கின்றார்.

இன்னொரு முக்கியமான விஷயம் பெண்ணை அடிமைப்படுத்துவது பெண்ணுக்குப் பொருளாதாரச் சுதந்திரம் இன்மை. பெண்ணுக்குப் பொருளாதாரச் சுதந்திரம் மறுக்கப்படுகிறது. அழகாகச் சொல்கிறார்கள் சுயமரியாதைக்காரர்கள், உத்தியோகம் என்பது புருஷ லட்சணம் அப்படிங்கிற சொல் மாற வேண்டும் . உத்தியோகம் என்பது மனுஷ லட்சணம் என்று மாற வேண்டும். ஏனென்றால் பெண்களும் உழைப்பாளிகள்தானே. பெண்கள் உழைப்பாளிகள் என்ற கூட்டத்திலே வரமாட்டோமா?. பெண்களுக்கு உத்தியோகம் தேவையில்லை என்று நினைத்த காலம் அது. பெண்களுக்குச் சரிசமமான உத்தியோகம் வேண்டும் என்று சுயமரியாதை இயக்கமும் பெரியாரும் சுயமரியாதைக்காரர்களும் மேடையில் முழங்கி இருக்கிறார்கள் அன்றே. ஏனென்றால் ஒரு பெண் ஏன்அடிமைப் படுகிறாள்?, ஏன் ஆணுக்கு அவள் அடக்கமாக இருக்கிறாள் என்றால் அவளிடம் பணம் இல்லை, பொருளாதாரச் சுதந்திரம் இல்லை. அவளுக்குப் பொருளாதாரச் சுதந்திரமும் சொத்துரிமையும் கொடுத்தால் அவளுக்கான தேவைகளை அவளே பூர்த்தி செய்து கொள்வார் என்பதை, அவள் இக்கட்டான சூழ்நிலையில் இருக்க மாட்டாள் என்பது போன்ற கருத்துக்கள் எல்லாம் அன்றைக்கே வைத்திருக்கிறார்கள் என்பதை இக்கட்டுரை மிகத் தெளிவாகச் சொல்கிறது

அடுத்து ஒரு முக்கியமான செய்தியைக் கட்டுரை ஆசிரியர் சொல்கின்றார். அது பெண்களின் கல்வி. அடிப்படைக் கல்வி என்பது பெண்களுக்கு மறுக்கப்படவே கூடாது, பெண்களுக்கான கல்வியைச் சுயமரியாதை இயக்கம் மிகப்பெரிய தீர்வாக முன்னெடுத்து முழங்கி செயல்படுத்தத் தூண்டியிருக்கிறார்கள். பின்பு பெண்கள் எல்லாம் படிக்க வந்து விட்டார்கள் .படித்து விட்டார்கள் என்று சொன்னாலும் இந்தப் பெண்கள் படிப்பது என்பது எதற்குப் பயன்படுகிறது என்று சுயமரியாதை இயக்கத்தினர் யோசித்திருக்கிறார்கள்.பெண்களின் படிப்பு என்பது சுயம்வர உத்தியாகத்தானே இருக்கிறது. நடனம் கற்றுக் கொடுக்கிறது என்ன,பாட்டுக் கற்றுக்கொடுக்கிறது என்ன?, எல்லாம் கற்றுக் கொடுத்து ஒரு மாப்பிள்ளையிடம் கட்டிக் கொடுப்பதற்காகத்தான் எல்லா வேலைகளும் நடக்கிறது எல்லாவற்றையும் கற்றுக் கொண்டு போய் மறுபடியும் சமையலறையில் வீணாக்குவதற்கு இந்தச் சுயம்வர உத்திகளைச் செய்யாதீர்கள் என்று அறிவுறுத்துகிறார்கள் சுயமரியாதைக்காரர்கள்.கல்வி கற்றுக் கொண்டால் ஒரு பெண் தானாகவே சொத்து சேர்த்துக் கொள்வார். அதற்கு அப்புறம் தன்னுடைய வாழ்விணையரை அவரே தேர்ந்தெடுத்துக் கொள்வார். பெண்ணுக்குக் கல்விதான் அடிப்படை என்பதை எல்லாம் சுயமரியாதை இயக்கம் சொல்லி இருக்கிறது என்று இந்தக் கட்டுரை ஆசிரியர் அழகாகச் சொல்லி இருக்கிறார்.

இதையெல்லாம் படித்த பிறகு பெண் விடுதலை வேண்டும் பெரிய கடவுள் காக்க வேண்டும் என்று பாரதியார் சொன்னார் அல்லவா, அந்தப் பெரிய கடவுள் யார்? என்றால் நம் சுயமரியாதை இயக்கமும், நம் சுயமரியாதை இயக்கத் தலைவர்களும் , பெரியாரும்தான் என் கண்களில் தெரிகிறார்கள். ஒரு பெண்ணாக நான் அவர்களுக்கெல்லாம் நன்றி சொல்கிறேன். இப்படிப்பட்ட ஒரு நல்ல செறிவான கட்டுரையைப் பற்றிப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி என்று சொல்லி பெண்கள் சிந்திக்கவேண்டும்,சுதந்திர உணர்வு உள்ள பெண்கள் பெரியாரைப் புரிந்துகொண்டு வெளியே வந்துவிடுவார்கள்,அப்படி இல்லாத பெண்கள் இன்னும் பூனைகளிடம் மாட்டிக்கொண்ட எலியாக ,நரியிடம் மாட்டிக்கொண்ட கோழி,ஆடாகத்தான் வாழமுடியும்.அவைகள் சுதந்திரம் தராது. நாமாகத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். அதிகமாகச் சிந்திக்க

வேண்டும் என்று சொல்லி, கட்டுரை ஆசிரியர் பேரா.ச.ஜீவானந்தம் அவர்களின் சிறப்பையும் அவர் கட்டுரைக்குப் பல ஆதாரங்களை எடுத்துக்காட்டி இந்தக் கட்டுரையை எழுதியிருப்பதையும் பாரட்டி சிறப்பாக உரையாற்றினார்.

மிகச்சிறப்பாக உரையாற்றிய திரு.கோதை ஜெயராஜ் அவர்களைப் பாராட்டி, இந்தக் கட்டுரையின் ஆசிரியர் பேரா.முனைவர் ச.ஜீவானந்தம அவர்களைப் பற்றிய அறிமுகக்குறிப்புகளை அவையில் சொல்லி, அவரை ஏற்புரையாற்ற நிகழ்வு ஒருங்கிணைப்பாளர் வா.நேரு அழைத்தார்.

## பேரா.முனைவர் ச.ஜீவானந்தம் அவர்களின் ஏற்புரை:

வாய்ப்பு வழங்கிய அமைப்பாளர்களுக்கும் மதிப்புரை வழங்கிய திரு.கோதைஜெயராஜ் அவர்களுக்கும் நன்றி. நான் பெரியாரைப் பற்றி அறிந்து கொண்டது, தேவதாசிகள் தேவதாசி ஒழிப்பு பற்றி நான் ஆய்வு செய்தபோதுதான். அப்போதுதான் அவரைப் பற்றிப் படிக்க ஆரம்பித்தேன் சில குறிப்புகளை நான் படிக்கின்ற பொழுது இதைப் பெரியார்தான் எழுதியிருப்பார்,பேசியிருப்பார் என்று நான் நினைக்கின்ற பொழுது அவரால்தான் இவ்வளவு ஆழமாகப் பேச முடியும் என்று நினைத்துக்கொண்டு நான் படிக்கிறேன். படித்துவிட்டு அந்தக் கட்டுரையின் ஆசிரியர் யார் என்று பார்க்கின்ற பொழுது எனக்கு மிகப்பெரிய ஆச்சரியமாக இருந்தது. இப்படித்தான் குஞ்சிதம் குருசாமியாகட்டும், நீலாவதி அம்மையராகட்டும், எனக்கு அறிமுகமாகிறார்கள் .இவ்வளவு காட்டமாகவும் இவ்வளவு வலிமையாகவும் இவ்வளவு தரவுகளோடும் பேச முடியுமா என்பது எனக்குப் பெரிய ஆச்சரியமாக இருந்தது. கோவில்களில் இவ்வளவு செலவு செய்து எதற்குத் திருவிழாவை கொண்டாட வேண்டும் அதற்குப் பதிலாக ஒடுக்கப்பட்ட மக்களுக்குத் தானங்களையும் அவர்களுக்கான கல்வியையும் ஏற்பாடு செய்தால் பெரிய வாய்ப்பாக இருக்கும், அதுதான் செய்ய வேண்டியது என்று ஒரு கட்டுரையை நான் படிக்கிறேன். வியப்பாக இருக்கிறது.

எனது வேலையின் காரணமாக, சிக்கிம் பல்கலைக்கழகத்தில் பெண் ஆய்வு மையத்தில் நான் படித்தேன். அப்போது பல வகையான பெண்ணியக் கோட்பாடுகளைப் பற்றிப் படிக்க வாய்ப்புக் கிடைத்தது மார்க்சியப் பெண்ணியவாதிகள் போன்ற பலரைப் பற்றிப் படிக்க நேர்ந்தது. அப்படிப் படிக்கும்போது, 1960களில் ரேடிக்கல் பெமினிசம் என்று சொன்னார்கள். அப்போதுதான் பெண் உடல் அரசியல் பற்றிப் பேசுகிறார்கள்.ஆனால் பெரியார் இதனை 1930களில் பேசி இருக்கிறார். 1930களிலேயே இப்படிப் பெண் உடல் அரசியல் பற்றி பேசியது பெரியாரைத் தவிர எனக்கு வேறு யாரும் இந்தியாவில் தெரியவில்லை. அந்தச் சமயத்தில் உலக அளவில் கூட யாரும் பேசி இருக்கவில்லை நான் அறிந்தவரை. அது எனக்கு ரொம்ப ஆச்சரியமாக இருந்தது.

1930 என்று சொன்னால் அது ஒரு முக்கியமான காலகட்டம் .இந்தியாவில் எல்லோரும் அரசியல் சுதந்திரம் வேண்டும் என்று போராடிய காலம். ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தளவில் பெரியாரும் அவருடைய தொண்டர்களும் பொலிட்டிக்கல் ஃபிரீடத்தை விடச் சோசியல் ஃப்ரீடம் தான் வேண்டும் என்று பேசுகிறார்கள். அதுமட்டுமல்ல அன்றைய காலச் சுயமரியாதை இயக்க இதழ்கள் ... குடியரசு, பகுத்தறிவு,விடுதலை போன்ற இதழ்களை எடுத்துப் பார்த்தால் குறிப்பாக 1930,40 களில் பார்த்தால் குறிப்பிடத்தக்க அளவிற்குப் பெண்கள் தொடர்ச்சியாக எழுதிக் கொண்டே இருக்கிறார்கள். மற்ற இதழ்களில் அந்தக் காலகட்டத்தில் எழுதிய பெண்களுக்கும் சுயமரியாதை பத்திரிகைகளில் எழுதிய பெண்களுக்கும் உள்ள முக்கியமான வேறுபாடு என்னவென்றால், பெண்கள் பெண்கள் சார்ந்த செய்தியை மட்டும் தான் எழுதுவார்கள் என்ற ஒரு பிற்போக்குத்தனமான மனப்பான்மைக்குப் பதிலாக... இன்றைக்கும் கூட அந்த மனப்பான்மை இருக்கிறது குறிப்பாகப் பெண் எழுத்துக்கள் என்றால்,தோழி என்ற பத்திரிக்கையைப் பார்த்தால் சமையல் குறிப்பு, அழகுக் குறிப்பு, அதற்கு அப்புறம் சினிமா விமர்சனம் தொடர்பான கருத்துக்கள் என்று வருகிறது.ஆனால் நீங்கள் பகுத்தறிவு, குடியரசு, விடுதலை எல்லாம்

எடுத்து பார்த்தால் பெண்கள் எழுதும்போது அவர்கள் விடுதலை என்றால் என்னவென்று எழுதுகிறார்கள், ஜாதி ஒழிப்பு பற்றி எழுதுகிறார்கள்,உலக அரசியல் பற்றி எழுதுகிறார்கள்.

கோதை அவர்கள் பேசும்போது சிறப்பாகச் சொன்னார்கள் பெரியார் இரண்டு விஷயத்தை எடுத்துக்கொண்டார். ஜாதி ஒழிப்பு ஒன்று பெண் விடுதலை மற்றொன்று என்று. இது ரெண்டும் வேறு வேறு விசயம் கிடையாது. ஜாதி ஒழிப்பு பற்றிப் பேசும்போது நீங்கள் பெண் விடுதலையைப் பேசித்தான் ஆக வேண்டும்.ஏன் என்று சொன்னால் இந்திய சூழலில் ஜாதி என்கிற அமைப்பு, பெண்களைக் கட்டுப்படுத்துவதற்காகத்தான் இருக்கிறது.

பெரியார் ஒரு அன்காம்பரமைசுடு வாரியர்தான். காந்தியாரைப் பற்றிப் பேசும்போது எல்லோரும் அவர் நான் வயலன்ட்,அகிம்சாவாதி என்று குறிப்பிடுவார்கள். அவர் அப்படி இருந்த்து எனக்கு ஆச்சரியமில்லை. பெரியாரும் அம்பேத்கரும் நான் வயலண்ட்-அகிம்சாவாதியாக இருந்த்துதான் மிகப்பெரிய ஆக்கபூர்வமான செயல் என்று நான் பார்க்கின்றேன். சுயமரியாதை இயக்கப்பெண்கள் வரலாறு என்பது ஒரு பெரும் கடல்.அதில் ஒருதுளிதான் நான் எழுதி இருப்பது.

தி பேஸ் பிகைண்டு தி மாஸ்(The Face Behind the Mass) அப்படீன்னு ஒரு புத்தகம்.சி.எஸ்.லட்சுமி என்பவர் எழுதிய புத்தகம்.அந்தப் புத்தகமே பெண் எழுத்தாளர்களைப் பற்றி எழுதி இருக்கும் ஒரு புத்தகம். ஆனால் சுயமரியாதை இயக்கப் பெண் எழுத்தாளர்கள் ஒருவரைப் பற்றிக் கூடக் குறிப்பிடாமல்,தவிர்த்து விட்டுச்சென்றிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தத் தகவல் போய்ச் சேரவில்லையா என்பது ஒரு விஷயம். ஆனால் 1930களில் உலக அரசியலையும் ,உள்ளூர் சமூகப் பிரச்சனைகளையும் கட்டுரைகளாக எழுதியவர்களை எப்படித் தவிர்த்தார்கள் என்பது தெரியவில்லை. நான் ஒரு சின்ன அளவில் தான் எழுதி இருக்கிறேன். நிறையச் சுயமரியாதை இயக்கப் பெண்களைப் பற்றி எழுதவேண்டும். வாய்ப்பிற்கு நன்றி' என்று ஏற்புரையாற்றினார்.

ஏற்புரையாற்றிய கட்டுரையாளர் பேரா.முனைவர் ச.ஜீவானந்தம் அவர்களுக்கு நன்றியையும் பாராட்டுகளையும் நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் வா.நேரு தெரிவித்தார். அடுத்ததாக்க் கட்டுரை ஆய்விற்கு டாக்டர் சுப்பிரமணியன் நடேசன் அவர்கள் எழுதிய ,' PARASAKTHI (1952): AN IDIOGRAPHIC CRAFT OF DRAVIDIAN STOCK' என்னும் கட்டுரை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதனை மருத்துவர் சோம.இளங்கோவன் அவர்கள் ஆய்வு செய்தார். மருத்துவர் சோம.இளங்கோவன் அவர்கள் 50 ஆண்டுகாலமாக அமெரிக்காவில் இருப்பவர்.அவர் தனது பணியை 'அமெரிக்காவில் 50 ஆண்டுகள் 'என்னும் நூலாகக் கொண்டுவந்துள்ளார். அந்த நூலின் வாயிலாக,அவரைப் பற்றிய பல்வேறு பரிணாமங்களை,சிறப்புகளை அறிந்து கொள்ள முடிகிறது என்று அய்யா அவர்களின் பல்வேறு சிறப்புக்களைக் குறிப்பிட்டு முனைவர் வா.நேரு,அவரை ஆய்வுரைக்கு அழைத்தார்.

மருத்துவர் சோம.இளங்கோவன் அவர்கள்:

அம்மா கோதை அவர்கள் மிகச் சிறப்பாகப் பேரா,ச. ஜீவானந்தம் கட்டுரையை மதிப்பீடு செய்து தந்தார்கள். நன்றி. அவருடைய கட்டுரை மிக முக்கியமான கட்டுரை .அம்மா குஞ்சிதம் அவர்கள் திருமணம் முதல் சுயமரியாதைத் திருமணம். இரண்டு ஊர்கள், இரண்டு சமூகங்களை எதிர்த்துப் போராடி நடந்த திருமணம் .அந்தத் திருமணம், அதைப் பற்றியே ஒரு மணி நேரம் பேசலாம். அந்த அளவிற்குச் சுயமரியாதை எப்படி வந்தது, பெண் விடுதலை எப்படி வந்தது என்பதை அருமையாகச் சித்தரிக்கும் கட்டுரைக்கு நன்றி.

ஒரு திரைப்படத்தைப் பற்றி ஓர் ஆராய்ச்சி கட்டுரையா? என்ற கேள்வி உங்களில் பலருக்கு இருக்கலாம். அது நியாயமான கேள்விதான். ஒரு சாதாரணத் திரைப்படமாக இருந்து, அதை வணிக முறையில் நாம் விவரிப்போம் என்றால் அது வேறு. ஆனால் ஒரு திரைப்படம் 60 ஆண்டுகளுக்கு முன்னே வந்தது, அதை ஒருவர் 26 பக்கத்திற்கு ஆங்கிலத்தில் கட்டுரையாக வெளியிட்டு

இருக்கிறார், 50க்கும் மேற்பட்ட மேற்கோள்களை எடுத்துக்காட்டியிருக்கிறார் என்றெல்லாம் நினைக்கும் போது உண்மையிலேயே அது ஒரு திரைப்படம் தானா அல்லது அதற்கு மேலே ஏதாவது இருக்கிறதா என்று சிந்தித்தால்,மிகச் சிறப்பாக ஆராய்ச்சி செய்யப்பட்டு வெளிக் கொணரப்பட்டுள்ளது. அவர் திரைத்துறையில் இருப்பதால் திரைத்துறை வரலாற்றையும், ஜெர்மனி, அமெரிக்கா போன்ற நாடுகளில் திரைத்துறை எப்படி இருந்தது என்பதை எழுதி, இந்திய திரைத்துறை தமிழ் திரைத்துறை பற்றி எல்லாம் எழுதி, அந்தத் திரைப்படத்தைப் பற்றி, அந்தத் திரைப்படக் கதை ,வசனம், பாட்டு அதில் பங்கேற்றவர்கள் ஒவ்வொருவர் பற்றியும், அவருடைய முக்கியமான பங்கு என்ன, அந்தத் திரைப்படத்தில் அவர்களின் முக்கியக் கட்டங்கள் என்ன என்பதை எல்லாம் மிகவும் ஆழமாக விவரித்து இருக்கின்றார். எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. ஒரு தமிழ்த் திரைப்படத்தைப் பற்றி இவ்வளவு தூரம் ஒரு சிறப்பான ஆராய்ச்சி செய்து ஒருவர் எழுதி இருக்கிறார் என்றால் ,இந்தத் திரைப்படம் வெளிவந்த பொழுது இப்படி எழுதப்பட்டது.. எப்படி எழுதப்பட்டது என்றால் தினமணி கதிர் என்ற பத்திரிகையிலே மூன்று பக்கங்களுக்கு முழுதாக இந்தத் திரைப்படம் பற்றி எழுதப்பட்டது. சேறுவாரி, சாணிவாரியெல்லாம் தூற்றி எழுதியிருந்தார்கள். இது ஒரு படமா என்றெல்லாம் கேள்வி கேட்டிருந்தார்கள். அதுவே அந்தப் படத்திற்குப் பெரிய விளம்பரம் ஆகிவிட்டது.ஆம் அந்தப் படம் பராசக்தி.

உங்களில் பலருக்கும் தெரிந்திருக்கும் பராசக்தியைப் பற்றி. அது இரண்டு சரித்திரங்களைப் படைத்த ஓர் அடையாளச் சின்னம். ஒன்று கலைஞர் கருணாநிதி. இரண்டாவது வி.சி. கணேசன் என்னும் சிவாஜிகணேசன். இவர்கள் இருவரின் வரலாற்று ஆரம்பம்தான் பராசக்தி. அது அவர்களின் தனி வரலாறாக மட்டும் அல்ல ,ஒட்டுமொத்த தமிழர்களின் வரலாறாகவும் அமைந்துவிட்டதுதான் மிகவும் சிறப்பு. இதனை எதற்குச் சொல்கிறேன் என்றால் ஒரு நாடகமாக அது நடிக்கப்பட்டது. திராவிடர் கழகத்தில் இருந்த பகுத்தறிவாளர் பாலசுந்தரம் இதனை ஒரு நாடகமாக நடத்தினார். அதைப் பார்த்து அய்யா பெருமாள் என்பவர் இதைத் திரைப்படமாக எடுக்க வேண்டும் என்று விரும்பி, பெரியவர் ஏவி மெய்யப்பன் அவர்களோடு இணைந்து ,அந்தக் கதைக்கு வசனம் எழுதுவதற்காக அப்போது குடியரசு விடுதலை போன்ற ஏடுகளில் எழுதி வந்த திருவையாறு இசைவிழா மேடை பற்றித் ‘தீட்டாயிடுத்து’ என்ற ஓர் அருமையான கட்டுரையை எழுதிய 25 வயது இளைஞர் கருணாநிதியை அழைக்கின்றார்.

இந்தக் கதை ஒரு சாதாரணக் கதை. பர்மாவிற்குச் சென்ற தமிழர்கள், அகதிகளாகத் திரும்பி வந்து அல்லல் உற்ற கதை. ஆனால் அதில் உள்ள வசனங்கள் உண்மையிலே சொல்கிறேன் மீண்டும் அந்தப் படத்தை முந்தா நாள் பார்த்தேன், அந்தப் படத்தில் உள்ள வசனங்கள் எழுதப்பட்ட வசனங்கள் அல்ல, செதுக்கப்பட்ட வார்த்தைகள். ஒவ்வொரு வார்த்தையும் எப்படி எங்கே திராவிட இயக்கத்தின் கொள்கைகளைச் சேர்க்க முடியும், தமிழின் பெருமையைச் சேர்க்க முடியும் ,காங்கிரசை எதிர்த்துச் சொல்ல முடியும் என்று கடுமையான எதிர்ப்புகளுக்கு இடையே எழுதப்பட்ட வசனங்கள். ஆட்சியோ காங்கிரஸ் ஆட்சி. காங்கிரஸ்காரர்கள் பெரும் முதலாளிகள் .பேருந்துகள் ,ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் உள்ள பெரு முதலாளிகள் அவர்கள். அவர்களை எதிர்க்க வேண்டும். ஆனால் அவர்களுடைய உத்தரவின் பெயரில்தான் படமே வெளிவர முடியும். வெளிவர வேண்டும். இந்தக் கட்டாயத்திற்கு எல்லாம் உட்பட்டு அந்த வசனங்களை எழுதி அதை நடிப்பதற்கு இதுவரை பெண் வேடங்களை மட்டுமே தாங்கிய ஒருவர், அவரை அறிஞர் அண்ணா அவர்களின் விருப்பப்படி நியமிக்கின்றார் திரு. பெருமாள் அவர்கள்.

ஆனால் திரைப்படத்தில் வல்லுனரான ஏ.வி மெய்யப்பன் அவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை .அவர் கே ஆர் ராமசாமி தான் நடிக்க வேண்டும் என்று சொல்கின்றார். 2000 அடிகள் படம் எடுத்த பின்பும் கூட ,இது சரியில்லை என்று சொல்லிவிட்டார்.ஏனென்றால் கணேசன் அப்பொழுது ஒல்லியாக இருக்கின்றார், அவர் குண்டாக இல்லை

.அதை ஒரு காரணமாகச் சொல்கின்றார் ஏவி மெய்யப்பனார். அதற்காகப் பெருமாள் அவர்கள் அவருக்கு உணவு ஊட்டி அவரைக் கொஞ்சம் குண்டாக்கி திருப்பி மீண்டும் அந்த 2000 அடியை எடுக்கிறார்கள். உங்களில் பலருக்கு நினைவிருக்கலாம். பராசக்தி படத்தில் முதல் காட்சி சக்சஸ் என்று ஆரம்பிப்பார் சிவாஜிகணேசன்.ஒரு பைத்தியக்காரனாக அவருடைய நடிப்பு நம்மையெல்லாம் மயக்கியது போல் ஏவி மெய்யப்பனாரை மயக்கவில்லை. அதைப் பிற்காலத்திலே சிவாஜிகணேசன் அவர்கள் சொல்வார்கள் ஏ வி மெய்யப்பனாரின் தோட்டத்திலே வளர்ந்துள்ள பூக்கள் எல்லாம் என்னுடைய கண்ணீரால் வளர்க்கப்பட்டவை என்று சொல்லுவார் .அந்த அளவிற்கு மிகவும் கடுமையாக உழைத்து அந்தப் படத்திலே நடித்திருக்கின்றார்.

இந்தக் கட்டுரை ஆசிர்யர் அவர்கள் இந்த வசனங்களைப் பற்றிப் பல இடங்களில் சொல்கிறார். சிவாஜிகணேசன் மிகவும் திறமையாக இந்தப் படத்திலே நடித்துள்ளார். இந்தப் படத்தைப் பற்றி, ஒவ்வொரு காட்சியைப் பற்றியும்,ஒவ்வொரு பாத்திரங்களைப் பற்றியும் மிகவும் விரிவாக இந்தக் கட்டுரையில் எழுதி இருக்கின்றார் .அதில் சிலவற்றை மேற்கோளாகவும் காட்டி இருக்கிறார். இதில் பாட்டுக்களும் மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன. கொள்கைகள் பரப்பப்பட வேண்டும் என்பதில் அய்யா பெருமாள் அவர்களின் பங்கு ,கலைஞர் அவர்களின் பங்கு எவ்வளவு என்பது எனக்குத் தெரியவில்லை. ஆரம்பமே ‘வளமார் எமது திராவிட நாடு’ என்ற பாடல். திராவிட நாடு என்ற வார்த்தையைக் கேட்டாலே இந்தியாவில் உள்ள பலருக்கும் தமிழ்நாட்டில் உள்ள அத்தனை பேருக்கும் எரிச்சல் தரக்கூடிய அந்தக் காலகட்டம். ஆனால் அந்தப் பாடலோடுதான் அந்தப் படம் தொடங்குகிறது பாரதிதாசன் அவர்களின் பாட்டு .ஒவ்வொரு பாட்டிலும் கருத்துக்கள். உடுமலை நாராயண கவி என்பவர் பகுத்தறிவுவாதி. மிகச் சிறந்த படைப்பாளி. அவருடைய கவிதைகளில் வார்த்தைகள் ஒவ்வொன்றும் கருத்து ஆழம் கொண்டவையாக இருக்கும். அருமையாக மிகவும் அருமையாகக் கருத்துக்கள் வெளிவர வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டு மிகவும் சிறப்பாகப் பாடல்களை எழுதியவர் அவர்.

சில வரிகள் எல்லாம் உங்களுக்கு மிக நன்றாக நினைவில் இருக்கும். தாண்டவக்கோனே பாட்டு, உங்களுக்கெல்லாம் தெரியும் .முட்டாப்பயலை எல்லாம் தாண்டவக்கோனே, காசு முதலாளி ஆக்குதடா தாண்டவக்கோனே என்று சொல்லுவார். அந்தப் பாட்டு உண்மையாகவே காங்கிரஸ்காரர்களை நேரடியாகத் தாக்கும் வார்த்தைகள். அன்று முதலாளியாக இருந்த அனைவருமே காங்கிரஸ்காரர்கள். இந்த வார்த்தைகளை எல்லாம் விடுவார்களா?. ராஜகோபாலாச்சாரியார் முதலமைச்சர் .அவர் டெல்லிக்கு எழுதி அங்கிருந்து ஒரு குழு அமைத்து அவர்கள் வந்து இந்தப் படத்தைத் தடை செய்ய வேண்டும் என்று வருகிறார்கள் .அதில் ஒரு கிருத்துவ நண்பர் இருக்கிறார். அவர் படத்தைப் பார்த்துவிட்டு, எல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது ஒன்றும் மாற்ற வேண்டாம் என்று சொல்லிவிடுகிறார். அந்தப் படத்தைத் தடை செய்வதற்காக எவ்வளவோ முயற்சி செய்தார்கள். அது எப்படி முடிந்தது என்றால் மதுரையில் இருப்பவர்களுக்குத் தெரியும் மதுரையில் தங்கம் என்று ஒரு திரையரங்கம். 2500 பேர் பார்க்கக்கூடிய ஒரு திரையரங்கம். அது நிரம்பி வழிந்து வெளியே மக்கள் உட்காரும் அளவிற்கு மக்களின் ஆதரவு தமிழகமெங்கும் பொங்கி வழிந்தது. விற்பனை செய்த இடங்கள் அத்தனை இடத்திலும் மிக அதிகமான விற்பனைக்கு அந்தப் படம் ,பராசக்தி விற்பனையானது. திரைப்படம் ஓடியது என்றால் அது வரலாறு. ஆரம்பித்தில் சொன்னது போல இது ஒரு சாதாரணத் திரைப்படம் அல்ல, வரலாற்றில் ஒரு முக்கியமான ஆரம்பம் . நான் பார்த்த முதல் திரைப்படமே பராசக்தி தான். சிறுவனாக இருந்த பொழுது எனக்கு ஒன்றும் புரியவில்லை. எல்லோரும் கைதட்டும்போது நானும் கைதட்டுவேன். எல்லாரும் சிரிக்கும்போது நானும் சிரிப்பேன். அவ்வளவுதான். ஆனால் திரும்பத் திரும்பப் பார்க்கும்பொழுது தான் அதனுடைய உண்மையான கருத்துப் புரிந்தது.

ஒவ்வொரு வார்த்தையையும் படத்தையும் எப்படிப் படைத்துள்ளார் என்பதைப் பார்த்தால் வியப்பாக இருக்கிறது. பர்மாவிலே உள்ள அந்தக் குடும்பம் தன்னுடைய தங்கையினுடைய திருமணத்திற்காக மதுரைக்கு வர வேண்டும். அப்பொழுது அவர்கள் வீட்டில் ஒரு பேச்சு வார்த்தை நடக்கிறது யார் போவது என்று. ஏனென்று சொன்னால் அப்பொழுது ஒரு குடும்பத்திற்கு ஒருவருக்குத்தான் கப்பலில் இடம் இருக்கிறது என்று சொல்கிறார்கள்.இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்த நேரம்.எல்லாமே கட்டுப்பாடு. யாரை அனுப்புவது என்று பேசிக் கொண்டிருக்கும் பொழுது அந்த வீட்டில் ஒரு படம் மாட்டி இருக்கும் .அந்தப் படம் யாருடைய படம் என்றால் சர்.பி.டி தியாகராயர் அவர்களுடைய படம். மூன்று சகோதரர்கள். சந்திரசேகர், ஞானசேகர், குணசேகர். தங்கையின் பெயர் கல்யாணி. சந்திரசேகரின் மாமனாரின் படமாகத்தான் சர்.பி. தியாகராயர் படம் காட்டப்பட்டிருக்கும். அது மாதிரி எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் புரட்சி கவிஞர் பாரதிதாசனைச் சொல்லி அவருடைய படைப்புகள் குடும்ப விளக்கு, அழகின் சிரிப்பு இவற்றையெல்லாம் சொல்லி எந்தெந்த இடத்தில் எப்படி எல்லாம் சேர்க்க முடியுமோ அப்படி எல்லாம் கலைஞர் சேர்த்திருப்பார்.

அண்ணா அண்ணா என்று படத்தில் வசனங்கள் வரும். அறிஞர் அண்ணா என்று சொல்ல முடியாததால் அண்ணா என்று சொல்லிவிடுவார்கள். அண்ணாவை படத்தில் எப்படியாவது காட்டிவிட வேண்டும் என்பதற்காக ஒரு மாநாட்டைக் காண்பிக்கிறார்கள். தணிக்கையிலே அந்த மாநாட்டைக் காண்பிக்கக் கூடாது என்று சொல்லிவிட்டார்கள். உடனே கலைஞர் என்ன செய்கிறார் அதில் பிச்சைக்காரராக நடிக்கும் எஸ் எஸ் ராஜேந்திரன் நடுத் தம்பி ஞானசேகரன், அவர் ஒரு மாநாடு நடத்துவதாகவும் அந்த மாநாட்டில் அண்ணா கலந்து கொள்வதாகவும், காமராஜர் போன்ற தலைவர்களைக் காண்பித்து அதைப் படத்தில் நுழைத்து விடுகிறார். அதாவது தணிக்கை குழுவிற்கும் இவர்களுக்கும் நடந்த போராட்டம் பெரும் போராட்டம். அந்தப் படம் தணிக்கையைத் தாண்டி வெளிவர இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. முதல் படமாக வரவேண்டிய சிவாஜி கணேசனின் படம் இது,ஆனால் மூன்றாவதாகவோ நான்காவதாகவோ வெளி வருகிறது .அந்த அளவிற்குத் தணிக்கைக் குழுவின் தொந்தரவு தாங்க முடியவில்லை அதையெல்லாம் தாண்டித்தான் அந்தப் படம் வெளிவந்து வெற்றிவாகை சூடியது.

உங்களுக்கெல்லாம் பெரிய வியப்பாக இருக்கும் அந்தப் படத்திற்குச் சிவாஜிக்கணேசனுக்கு கிடைத்த ஊதியம் மாதம் 250 ரூபாய். கலைஞருக்கு அதைப்போலப் பல மடங்கு ஊதியம் கிடைத்தது. கலைஞருக்குப் பாட்டுப் புத்தகம், வசனம் இதனுடைய விற்பனைக்காகவே 10,000 ரூபாய் அப்போதே கொடுத்திருக்கிறார்கள் இப்பொழுது பெரிய மதிப்புள்ள தொகை அது .பராசக்திற்கு முன்னரே சிவாஜிகணேசனுக்கு இரண்டு படங்கள் வந்து விட்டாலும் கூட, பராசக்தியின் தாக்கம் வேறு எந்தப் படத்திற்கும் இல்லை என்கிற அளவுக்கு நீண்ட நாட்கள் ஓடி, நாங்கள் எல்லாம் சிறுவர்களாக இருந்தபோது தமிழ் பேசவும் உச்சரிக்கவும் கற்றுக் கொண்டோம் என்றால் கலைஞர் கருணாநிதி அவர்களின் வசனத்தாலும், சிவாஜிகணேசன் அவர்களின் உச்சரிப்பாலும்தான் என்பதை மிகவும் பெருமையோடு சொல்லிக் கொள்கின்றேன்.

பெருமாள் அவர்கள் பெருந்தன்மையாக நடந்து கொண்டார். சிவாஜி கணேசன் அவர்களும் இறக்கும்வரை ஒவ்வொரு பொங்கலுக்கும் பெருமாள் அவர்களைச் சந்தித்துப் புத்தாடை கொடுத்து நன்றியை தெரிவித்தார். பின்னர் வந்த படங்களில் கலைஞர் அவர்களின் வசனம், மனோகரா போன்ற படங்கள், ராஜாராணி போன்ற படங்கள் எல்லாம் சாக்ரடீஸ் வசனம் போன்றவை எல்லாம் மிகச் சிறப்பாக வந்து தமிழ் திரை உலகையே தலைகீழாக மாற்றி மற்ற நடிகர்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என்றால் இதைத் தெரிந்து கொண்டுதான் நடிக்க வேண்டும் என்ற அளவுக்கு வந்து விட்டது. வெறும் புராணக் கதைகள் எடுத்துக் கொண்டிருந்தவர்கள் சமூகக் கதைகளையும் எடுக்க முடியும் என்ற அளவிற்குத் துணிச்சல் பெற்றார்கள். பாடல்களும் சமூக மனிதநேயச் சிந்தனைகளுடன் வர ஆரம்பித்தன. இவை எல்லாம் உங்களுக்குத் தெரிந்ததுதான்.

அறிஞர் அண்ணா அவர்கள் அந்தக் காலத்திலே இரட்டை எம்.ஏ. டபுள் எம்.ஏ. என்பது அரசியல் & பொருளாதாரம். அவ்வளவு படித்திருந்தாலும் எம் ஆர் ராதா அவர்களின் நாடகங்களைப் பார்த்துவிட்டு அவரிடமே சொல்லியிருக்கிறார். ராதா நாங்கள் போடும் 100 கூட்டங்களும் சரி நீ நடத்தும் ஒரு நாடகமும் சரி என்று. அந்த மாதிரி ஆரம்பித்தது தான் நாடகங்கள். அவர் எழுதியதுதான் சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் அல்லது சந்திரோதயம் என்ற நாடகம். அறிஞர் அண்ணாவும் அதில் நடித்திருப்பார்கள். தந்தை பெரியார் அவர்கள் கூட அவர்களைக் கூத்தாடி என்று கலாட்டா செய்தார். அந்த நாடகத்தில் நடித்துத்தான் வி.சி.கணேசன் அவர்கள் சிவாஜிகணேசன் ஆனார். சிவாஜி கணேசனின் ஆரம்பக் காலம் திராவிடர் கழகத்தில் ஆரம்பித்தது. பின்னர்த் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து அவருடைய பாதை மாறியது. ஆனால் கலைஞர் அவர்கள் கொண்ட கொள்கை, கருத்தில் நிலையாக இருந்தார். அந்தக் கொள்கையை எல்லாம், எப்படி எல்லாம் சொல்ல முடியும் என்பதில் கவிதையாக, நாடகமாக, கதைகளாகப் படைத்து முத்தமிழ் அறிஞர் என்ற பட்டத்தைப் பெற்றார்.

அவருடைய வசனங்களைப் பேசாத நடிகர்களே இல்லை. அவரின் எழுத்துப்பாணி புரட்சி கவிஞர் பாரதிதாசன் பரம்பரை போல் வளர்ந்து ஓங்கி இன்று உலகெங்கும் தமிழ் தமிழ் என்று நாமெல்லாம் போற்றுகிறோம் என்றால் அதற்கு அடிப்படைக் காரணங்களாக என்னைப் பொறுத்தவரையிலே, நமக்கு ஆழமாகப் பதித்தவர்களில் இரண்டு பேர் முக்கியமானவர்கள்.அவர்கள் யார் என்று கேட்டால் அதில் கலைஞர் அவர்களையும், சிவாஜி கணேசன் அவர்களையும் எழுத்துக்காகவும் உச்சரிப்பிற்காகவும் என்று கூறி நாம் போற்ற வேண்டும் என்று கூறி, இந்த கட்டுரையை எழுதி இருக்கும் சுப்பிரமணியம் நடேசன் அவர்கள் மிகவும் சிறப்பாக எழுதியுள்ளார் என்பதை மீண்டும் வலியுறுத்தி உங்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்து விடை பெறுகின்றேன் நன்றி வணக்கம்' என்று உரையாற்றினார்.

'PARASAKTHI (1952): AN IDIOGRAPHIC CRAFT OF DRAVIDIAN STOCK' கட்டுரை ஆசிரியர் சுப்பிரமணியம் நடேசன் அவர்கள் பயணத்தில் இருந்ததால் நிகழ்வில் கலந்து கொள்ள இயலவில்லை. அதற்குப் பதிலாக ஏற்புரையையும் மருத்துவர் சோம. இளங்கோவன் அவர்களே கூறி, அந்தக் கட்டுரை சம்பந்தமாகக் கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் அவரே பதில் கூறினார்.

அடுத்ததாக நிகழ்வில் கட்டுரைகள் ,கட்டுரை ஆய்வுரைகள் பற்றிய கருத்துக்கூறலும்,கேள்வி பதிலும் நடைபெற்றது. திருவாளர்கள்

த.கு.திவாகரன், மும்பை இரவிச்சந்திரன், டாக்டர் சரோஜா இளங்கோவன், கவிஞர் பாபு சசிதரன், துபாய் சிவக்குமார், அமுதன், சித்திரைச் செந்தாலை,தர்மராஜ் சின்னப்பன், நியூ ஜெர்சி பாலா, பகுத்தறிவு எழுத்தாளர் மன்றத் துணைத்தலைவர் திருப்பத்தூர் ம.கவிதா ஆகியோர் இதில் பங்கேற்பு அளித்தனர். கட்டுரை ஆய்வாளர்கள் திருவாளர்கள் கோதை, பேரா.முனைவர் ச.ஜீவானந்தம், மருத்துவர் சோம.இளங்கோவன் ஆகியோர் பதில் அளித்தனர். முனைவர் த.கு.திவாகரன் அவர்கள் பராசக்தி உண்மையான கதை. அந்தக் குடும்பத்தை நான் அறிவேன் என்று சொன்னார் பேரா.முனைவர் ச.ஜீவானந்தம் அவர்கள், 'நிறைய ஆய்வு இதழ்கள் இந்தியாவில் வருகின்றன. அவற்றில் நீங்கள் எதைப் பற்றியும் எழுத முடியும். ஆனால் பெரியார், திராவிடம் என்று வந்தால் அந்தக் கட்டுரைகளை வெளியிட மாட்டார்கள். இந்த நிலையில் திராவிடப்பொழில் இதழ் திராவிடம், பெரியாரியல் என்ற அடிப்படையில் ஆராய்ச்சி இதழாக, இரு மொழி இதழாக வருவது பெரும் மகிழ்ச்சியை என்னைப் போன்ற வரலாற்று ஆய்வு மாணவர்களுக்கு, பேராசிரியர்களுக்கு அளிக்கிறது. இது தொடர்ந்து வெளிவரவேண்டும். அதற்கு என்னைப் போன்றவர்களின் ஆதரவு எப்போதும் உண்டு' என்று குறிப்பிட்டார். இந்த நிகழ்வுக்கு அடிப்படையான கணினி ஒருங்கிணைப்புகளைப் பெரியார் பன்னாட்டு மையத்தின் உறுப்பினர் திரு.இளமாறன் அவர்கள் செய்தார்கள்.

**தொகுப்பு : முனைவர் வா.நேரு**

# I belong to the Dravidian stock

"I claim Sir, to come from a country, a part in India now, but which I think, is of a different stock, not necessarily antagonistic. I belong to the Dravidian stock.

I am proud to call myself a Dravidian. That does not mean that I am against a Bengali or a Maharashtrian or a Gujarati. As Robert Burns has stated, "A man is a man for all that".

I say that I belong to the Dravidian stock and that is only because I consider that the Dravidians have got something concrete, something distinct, something different to offer to the nation at large".

*(maiden speech in the Indian Parliament – Council of States (Rajya Sabha) – Apr 1962)*

Dr. **C.N. ANNADURAI**

Hon'ble Chief Minister of Madras State & Tamil Nadu (subsequently renamed), Union of India (1967-69)

***"There is substantial linguistic evidence favoring Dravidian authorship of the Indus Civilization.***

The evidence includes:

- The presence of Dravidian loanwords and loan translations in the Rig Veda.
- The substratum influence of Dravidian on Indo-Aryan as seen in phonological changes like introduction of retroflex sounds, morphological changes like switch-over from inflexion to post-fixation, and near-identical syntactical structures moving Indo-Aryan closer to Dravidian than to Indo-European languages.
- Computer analysis has shown that the Indus language had only suffixes (as in Dravidian) and no prefixes (as in Indo-Aryan) or infixes (as in Munda).

The Indus religion as revealed by pictorial depiction on seals and sealings included worship of a buffalo-horned male god, mother-goddesses, the pipal tree, the serpent and possibly the phallic symbol, all of which are known to have been derived from the aboriginal populations".

*(Interpreting the Indus Script: The Dravidian Solution Convocation Address. Dravidian University – Feb 26 2015, Kuppam. Andhra Pradesh, Union of India).*

Prof. **Dr. IRAVATHAM MAHADEVAN**
National Fellow of the Indian Council of Historical Research.